



சிலம்பு மலர்

2012

இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்
கோவை

இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்

C/O. A-2, பெருமாள் காம்ப்ளக்ஸ், 69, நேதாஜி சாலை,
பாப்பநாயக்கன்பாளையம், கோவை – 641 037.

செயற்குழுவினர்

இளங்கோவடிகள் அறநிலை

360

சிலம்பு மலர்

29-ம் ஆண்டு


சிலப்பதிகார விழா வெளியீடு

2012

இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்
C/O. A–2, பெருமாள் காம்ப்ளக்ஸ், 69, நேதாஜி சாலை
பாப்பநாயக்கன்பாளையம், கோவை – 641 037







மங்கல வாழ்த்து

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ்
அங் கண் உலகளித் தலான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரி தலான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்குஅவன் அளிபோல்
மேல்நின்று தான்சுரத் தலான்.



தமிழ் தாத்தா

டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் விருது பெற்றவர்கள்

09-03-2003	திரு. சிலம்பொலி செல்லப்பன்	20-ஆம் ஆண்டு
13-03-2004	திரு. ஐராவதம் மகாதேவன்	21-ஆம் ஆண்டு
20-08-2005	திரு. சீனி விசுவநாதன்	22-ஆம் ஆண்டு
23-09-2006	திரு. A. ஜெகன்நாதன்	23-ஆம் ஆண்டு
23-06-2007	பேரா.ஜெ. ஸ்ரீசந்திரன்	24-ஆம் ஆண்டு
12-07-2008	வாகீசகலாநிதி ச. கணபதிராமன்	25-ஆம் ஆண்டு
11-07-2009	முனைவர் தெ. ஞானசுந்தரம்	26-ஆம் ஆண்டு
24-07-2010	முனைவர் ச.வே. சுப்ரமணியன்	27-ஆம் ஆண்டு
10-07-2011	முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார்	28-ஆம் ஆண்டு



தமிழ் தாத்தா

டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் விருது



முதுபெரும் தமிழறிஞர்

மகா வித்வான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

அவர்களுக்கு 29-ம் ஆண்டு சிலப்பதிகார விழாவில் வழங்கப்பட்டது.

நாள் : 14-07-2012

சி. சௌந்திரராஜ்	**ஜி. கோபாலன்**
தலைவர்	தலைவர்
இளங்கோவடிகள் அறநிலை	இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்

விருது அமைப்பு :

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

தோரண வாயில்

பண்டைகால வாழ்வியல் நெறிமுறைகள், அறிவார்ந்த நீதிநெறிகள், சமுதாயப் பழக்கவழக்கங்கள், சங்க கால கலாச்சாரத்தின் - பண்பாடுகளின் பிரதிபலிப்புக்கள், வாணிபத்தின் செழிப்புக்கள் இவைகள் அத்தனையும் ஒருங்கே காண வேண்டும் என்றால் முதற் தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைப் படித்தாலே போதும். சிலப்பதிகாரத்தின் நோக்கமே மூன்று பெரும் உண்மைகளை சொல்ல வந்ததுதான். மேலே சொன்ன அத்தனை காரணிகளும் இந்த மூன்று உண்மைகளில் அடங்கும். எனவேதான் 2000 ஆண்டுகளுக்கு முன் இளங்கோவடிகள் படைத்த காப்பியமான "சிலம்பு" இன்று வரை நிலைத்து நின்று, ஏனைய இலக்கியங்களுக்கு வழிகாட்டியாய் திக;ழகிறது.

ஆண்டுதோறும் வெளிவரும் சிலம்பு மலரில் பல்வேறுவிதமான கட்டுரைகள் இடம்பெறுகின்றன. புதிய கருத்துக்கள், புதிய சிந்தனைகள், ஆய்வுகள் எனப் பல்வேறு கோணங்களிலே சிலப்பதிகாரத்தைப் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். அதே போல இவ்வாண்டு சிலம்பு மலரிலும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் "கம்பரும் இளங்கோவும்" என்ற கட்டுரை 45 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது. சிலப்பதிகாரம் - கம்பராமாயணம் ஆகிய இரண்டு காப்பியங்களில் உள்ள பொதுவான ஒற்றுமை வேற்றுமைகளையும், காப்பிய நிகழ்வுகளில் உள்ள, ரசிகர்களின் ஏன் தவறான எண்ணங்களைக் களையக் கூடிய இரண்டு நிகழ்ச்சிகளை சுட்டிக்காட்டி நிறைவு செய்கிறார். அடுத்து டாக்டர் மு.வ. வின் கட்டுரை "சிலம்பில் நாடகம்". நூலின் தொடக்கத்திலிருந்து இறுதி வாழ்த்துக்காதை வரை ஒவ்வொரு காதையிலும் எவ்வாறு நாடகப் பாங்கான செய்திகள் வருகிறது என்பதை நுணுகி ஆராய்ந்து சொல்லியிருப்பது அவரது நுண்மாண் நுழை புலத்தைக் காட்டுகிறது. இக்கட்டுரை 45 ஆண்டுகளுக்கு முன் வந்தது. அவரது நூல்களில் இடம்பெறாதது.

"சிலம்பிலே ஆன்மீகம்" என்ற கட்டுரை பேரா. தி. ராசகோபாலன் அவர்களின் படைப்பு. எதையுமே புதிய கோணத்தில் காணவேண்டும் என்ற முனைப்புடன்சிலம்பில் சொல்லப்பட்ட சமயப் பாடல்களில் ஆன்மிகக் கருத்துக்கள் எவ்வாறு புதைந்து கிடக்கிறது என்பதை ஆராய்ந்து கூறியிருப்பது படித்துப் படித்து இன்புற வேண்டியதொன்று. "முப்பெரும் உண்மைகள் - பாரதியின் எதிர் பார்வை" என்ற தலைப்பில் "ஓம் சக்தி" ஆசிரியர் சிதம்பரநாதன் ஓர் புதிய ஆய்வுக்களத்திற்கான சர்ச்சையை உருவாக்கியிருக்கிறார். இவர் எழுப்பியிருக்கும் வினாக்கள், படிப்போர் உள்ளத்தில் புதிய தாக்கத்தை உண்டாக்கும். இலக்கியத் திறனாய்வாளர்கள் இக்கருத்துகள் பற்றி

சிந்திக்கவேண்டும். பாரதி இப்படித்தான் சிந்தித்திருப்பாரோ என்ற முறையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. "மடல் மாண்பு" கட்டுரை வாழ்நாள் உறுப்பினர் செ. நடராசன் எழுதியது. மாதவியின் இரண்டு மடல்கள் பற்றிய செய்திகள், குறிப்புக்கள் அவரது புலமையைப் பறைசாற்றுகிறது. "உரைத்தது மறைத்திறம்" என்ற கட்டுரை திருமதி. புவனேஸ்வரியுடையது. வேதங்களின்கருத்துச் செறிவுகளை எப்படியெல்லாம் இளங்கோவடிகள் கையாண்டிருக்கிறார் என்பதை விளக்குகிறது. டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், ஒற்றைச் சிலம்பின் பல்வேறு நிலைகளைப்பற்றிய் குறிப்புக்கள், காப்பிய நிகழ்வுகளோடு சொல்லி, ஒற்றைச் சிலம்பினால் காவலனை வென்று வீழ்த்தி தன் கணவனை குற்றமற்றவன் என்பதை நிரூபித்தவள் கண்ணகி என்பதை "சிலம்பின் வென்ற சேயிழை" என்ற கட்டுரையில் சிறப்பாகச் சொல்லியிருப்பது சிந்தனையைத் தூண்டுகிறது. அடுத்து "மதுரை மூதூர் பெருவழி" பதிப்பாசிரியர், செயலர் நஞ்கண்டனின் கட்டுரை. நாடு விட்டு நாடு செல்லும் மக்கள் அக்காலத்திய வழிகளை எவ்வாறு, எப்படியெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்ள உதவிய கட்டுரை. அடுத்த கட்டுரை புகார் நகர் பற்றியது. பூம்புகார் புலவரும், மணிமேகலை மன்ற செயலருமான நா. தியாகராசன், சங்க இலக்கியங்களில் புகாரின் பெருமைகளை சிறப்பித்து கூறப்பட்டிருப்பதை சான்றுகளுடன் சொல்லி நம்மை பிரமிக்கவைக்கிறார். படித்து மகிழ வேண்டிய கட்டுரை. "சிலம்பு உள" என்ற கட்டுரை துணைச் செயலாளர் மகேஸ்வரி சற்குருவின் கட்டுரை. கண்ணகி கோவலனிடத்து கொடுத்த சிலம்பின் செய்தியை ரத்தினச் சுருக்கமாக சொல்லியிருக்கிறார். சிலம்பின் சீற்றம் என்ற கவிதை, விழாவில் புத்தகமாக வெளியிடப்படுகிறது. அதில் ஒரு துளியை உங்கள் ரசனைக்குத் தந்திருக்கிறோம். இணைச் செயலர் பேரா. க. முருகேசன் அரங்கனும் - அடிகளும் என்ற கட்டுரையில், கிடந்த கோலத்தையும், நின்ற கோலத்தையும் இலக்கிய நயத்தோடு எழுதியிருக்கிறார். மலரில் வெளிவந்துள்ள கட்டுரைகள் அனைத்தும் சிலம்பின் பெருமைகளையும், இலக்கிய நயங்களையும், தத்துவங்களையும் நமக்குக் கொடுக்கின்றன. படித்து மகிழுங்கள்.

மலருக்கு விளம்பரங்கள் கொடுத்த தொழில் நிறுவனங்களுக்கும், மலரைச் சிறப்பாக அச்சிட்டுக் கொடுத்த கீதாஞ்சலி அச்சகத்தாருக்கும் உடனிருந்து ஒத்துழைத்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

கோவை
2-7-2011

நா. நஞ்சுண்டன்
செயலாளர், மலர் பதிப்பாசிரியர்

கம்பரும் இளங்கோவும்

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்

சிலப்பதிகாரம் படைத்தருளிய இளங்கோவடிகளும் இராம காதை வழங்கிய கம்பரும் தமிழ் மொழிக்குப் புது வாழ்வளித்த மகா கவிகளாவர். இந்த மகா கவிகளிடையேயும் அவர்கள் அருளிய இருபெரும் காப்பியங்களிடையேயும் காணப்படும் ஒற்றுமை – வேற்றுமைகள் இலக்கிய ரசிகர்களுக்குச் சுவை பயப்பனவாகும்.

தோன்றிய காலத்தால் இளங்கோவுக்கும் கம்பருக்கும் இடைப்பட்ட காலம் ஆயிரம் ஆண்டுகள் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

இளங்கோ சேர நாட்டின் இளவரசர் ; கம்பர், சோழ நாட்டின் குடிமகன். சேரநாடர், துறவியாக வாழ்ந்தவர் ; சோழ நாடர், இல்லறத்திலே திளைத்தவர். முன்னவர், புறச் சமயத்தார்; பின்னவர், அகச் சமயத்தார்.

இத்தனை வேற்றுமைகளுக்கிடையே அவர்கள்பால் நாம் காணும் ஒற்றுமை என்னவெனில், இவர்கள் இருவருமே தமிழ்நாட்டார் ; தமிழ் இனத்தார் ; தமிழ் மொழியின் மரபுகள் காத்த மகாகவிகள் என்பனவாம்.

சாதி – சமய – வருண வேற்றுமைகளிலே இவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாயினும், பிறப்பு வழி மனிதனுக்கு மனிதன் உயர்வு – தாழ்வு காணாத உத்தமர்களாவர்.

இப்படி, இளங்கோவுக்கும் கம்பருக்குமிடையே – அவர்கள் தோன்றிய காலம், வாழ்ந்த மண்டிலம், பிறந்த வருணம், பின்பற்றிய மதம் ஆகியவற்றால் – பல ஒற்றுமை வேற்றுமைகள் இருத்தல்போல, அவர்கள் இயற்றியருளிய காப்பியங்களிலேயும் ஒற்றுமை வேற்றுமைகள் இருக்கக் காண்கிறோம்.

அண்ணன் செங்குட்டுவனுக்குரிய அரசு பதவி, நிமித்திகன் சொல் காரணமாகத் தனக்கு வர இருந்தபோது, அதனை வெறுத்து, அரசாளும் பொறுப்பினை அண்ணனுக்கே உரிமையாக்கி, உலக இன்பங்களிலே பற்று விடுத்து துறவியானார் தம்பி இளங்கோ. அதன் விளைவாகப் பிறந்தது சிலப்பதிகாரம்.

அன்னை கைகேயி செய்த சதியால், அண்ணன் இராமனுக்குரிய அரச பதவி தனக்கு வந்தபோது, அதனை ஏற்க மறுத்து, அரியாசனத்தில் அமருமாறு அண்ணனை வற்புறுத்தி, அவன் மறுத்ததால், அவனுடைய பாதுகையை அரியாசனத்தில் அமர்த்தி தன் கடமையைச் செய்து இரகுவம்சத்தின் பெருமை காத்தான் தம்பி பரதன். அந்த இளவலின் தியாகத்தையும் ஒரு காரணமாகக் கொண்டு பிறந்தது இராமாயணம். ஆம் ; வடக்கே ஒரு தம்பியும் தெற்கே ஒரு தம்பியும் செய்த தியாகத்தால் சிலப்பதிகாரமும் இராமாயணமும் தோன்றின.

"சிலப்பதிகாரம், சிறிதளவே கற்பனை தழுவிய வரலாற்றுக் காப்பியம் ; இராமாயணம், வரலாறு தழுவிய கற்பனைக் காப்பியம்" என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

சிலப்பதிகாரம், தமிழில் தோன்றிய முதல் நூல் ; கம்பராமாயணம், வடமொழி இராமாயணத்தை அடியொற்றிப் பிறந்த வழி நூல்.

வள்ளுவர் வகுத்த வழிப்படி, அறம் – பொருள் – இன்பம் ஆகிய மூன்றை மட்டுமே கூறி, நான்காவதான "வீடு" பேற்றினைக் கூறாது விட்டார் இளங்கோவடிகள். அவரையே பின்பற்றி "வீடு" பேறு கூறாத காப்பியத்தையே வழங்கினார் கம்பர்.

கண்ணகி காதை "மணமதுரையோடு அரசு கேடுற கணவனை அங்கு இழந்து போந்த கடுவினையேன் யான்" என்று அவள் கூறிய சோக வாசகத்தோடு முடியும் துன்பியல் காப்பியம். கம்பராமாயணம், காப்பியத் தலைவனான இராமன் கோசல நாட்டின் மன்னனாக முடிபுனைந்து கொண்டு, தன்னுடைய நாயகியான சீதையுடன் அரியாசனத்தமர்ந்து ஆட்சி புரியத் தொடங்கும் காட்சியோடு முடியும் இன்பியல் காப்பியம்.

சிலம்பிலே தலைமை கோவலனுக்கல்ல ; கண்ணகிக்கு ! அங்கு கோவலனுக்குரிய தகுதி கண்ணகியின் தலைவன் என்பதுதான். இராமாயணத்திலே தலைமை சீதைக்கல்ல, இராமனுக்கே ! அங்கு சீதைக்குள்ள தகுதி இராமனுடைய தலைவி என்பதுதான். முன்னதில் கண்ணகியின் புகழ் விளங்க அவள் கணவன் கோவலன் கொலையாகினான். பின்னதிலே, இராமன் புகழ் விளங்க சீதை சிறைப்படுகிறாள்.

வடக்கிலுள்ள அயோத்தியில் பிறந்த இராமனையும், மிதிலையில் பிறந்த சீதையையும் தென்கோடியிலுள்ள இராமேசுவரம் வரை யாத்திரை செய்ய வைத்து, இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு அடிகோலுகிறது இராமாயணம். இப்படி, வடக்கிலே துவங்கி தெற்கிலே முடியும் தேசிய ஒருமைப்பாட்டுப் பணியினை வரவேற்று அதன் மற்றொரு முனையாக தெற்கிலுள்ள பூம்புகாரில் பிறந்த கண்ணகியை வடவேந்தர்களான கனகனும் விஜயனும் வணங்கச் செய்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டுப் பணி நிறைவுபெறச் செய்கிறது சிலப்பதிகாரம்.

சேரமுனி தந்த இலக்கியம், குடிமகள் ஒருத்தியைத் தலைவியாகக் கொண்ட குடிமக்கள் காப்பியம். கம்பன் தந்த மாக்கதை, மன்னன் ஒருவனைத் தலைவனாகக் கொண்ட மன்னர் காப்பியம்.

சிலப்பதிகாரத்திலே, வினைவசத்தால் தன்னுடைய நாயகன், பிறந்த நாடுவிட்டுப் பெயர்ந்து பிற நாடு செல்ல, அவனைப் பின்பற்றிச் சென்று துன்புறுகின்றாள், காப்பிய நாயகி. இராமாயணத்திலே, சிற்றன்னைசெய்த சதியால் தன்னுடைய நாயகன் நாடுவிட்டு காடுபுக, அவனைப் பின்பற்றிச் சென்று இன்னலுறுகிறாள் அவனுக்கு வாய்த்த நாயகி.

"கம்பனி"லே, தன் தலைவியை மீட்கும் பொருட்டு, அவளைக் கவர்ந்து சென்று சிறைப்படுத்திய இராவணனை எதிர்த்துப் போர் புரிந்து, அவனையும் அவனது அரசையும் அழிக்கிறான் காப்பிய நாயகன்.

சிலம்பிலோ, தன் தலைவன் மீது சுமத்தப்பட்ட "கள்வன்" என்ற பழியைத் துடைக்கவும், அவனைக் கொன்றதற்காக பழி வாங்கவும் பாண்டியனை எதிர்த்துப் போர் புரிந்து, அவனையும் அவனது அரசையும் அவ்வரசின் தலைநகராகிய மதுரையையும் அழிக்கின்றாள் காப்பியத் தலைவி. இலங்கையிலே இராமன் நடத்தியது விற்போர் ; மதுரையில் கண்ணகி நடத்தியது சொற்போர்.

இதுகாறும் சிலப்பதிகாரம் – இராமாயணம் ஆகிய இருபெரும் காப்பியங்களிடையேயும் அக் காப்பியங்களை எழுதிய மகா கவிகளிடையேயும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளில் சிலவற்றைக் கண்டோம்.

இனி, அந்த மகா கவிகளைப்பற்றி .இலக்கிய ரசிகர்களிடையே நிலவிவரும் தப்பெண்ணங்களைப் போக்க அவர்கள் தந்த காப்பியங்களிலுள்ள இரண்டு நிகழ்ச்சிகளை விமர்சிப்போம்.

சிலப்பதிகார காப்பிய நாயகியான கண்ணகி, மாணாய்க்கன் என்னும் பூம்புகார் வாணிகனுக்குப் பிறந்த மானிட மகளாயினும், அவள் கடைப்பிடித்த மறக்கற்பு காரணமாக அவளை மக்கள் வழிபடும் தெய்வமாக்கினார் இளங்கோ.

அதுபோல, சக்கரவர்த்தி மைந்தனாக வால்மீகி அறிமுகப்படுத்திய இராமனை, முதன் முதலாக, மக்கள் வழிபடும் கடவுளாக்கியவர் கம்பர்தான் என்று கருதுகின்றனர் சிலர். இது, பிழையான கருத்தாகும். இவ்விஷயத்தில், கம்பருக்கு வழிகாட்டியாக விளங்குகிறார் இளங்கோவடிகள். அவர் தமது காப்பியத்திலே,

"தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வன் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ ? நெடுமொழி யன்றோ ?"

என, கவுந்தியடிகளைக்கொண்டு கோவலனுக்குக் கூறவைப்பதால், திருமாலே இராமனாக அவதரித்தான் என்பது, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழகத்தார் கொண்டுள்ள நம்பிக்கை என்பதனைப் புலப்படுத்துகின்றார்.

சிலப்பதிகாரக் கண்ணகி, பெண்மைக்குரிய அச்சம்–மடம்–நாணம்–பயிர்ப்பு என்னும் நால்வகைப் பண்புகளைத் துறந்து பாண்டியனிடம் வழக்குரைக்கிறாள் ; அவன் உயிருக்கு இறுதி தேடினாள் ; மதுரையைத் தீக்கிரையாக்கினாள்.

கம்பராமாயண நாயகனின் தலைவியாகிய சீதையோ, இராவணன் தன்னைச் சிறைப்படுத்திய பின்னர் எல்லையற்ற பொறுமை காட்டி, பெண்மைக்குரிய நால்வகைப் பண்புகளைக் கடைப்பிடித்து, தன்னுடைய தலைவன் தன்னை மீட்கும்வரை காத்திருந்தாள். இதனால், கண்ணகியினும் சீதையே சிறந்த கற்பினள் என்பது சிலருடைய வாதம். இதுவும் தவறு.

இளங்கோ பெற்ற கண்ணகிக்கும், கம்பன் சுவீகாரமெடுத்த சீதைக்கும் அல்வழிப்பட்ட அரசை அழிப்பதிலும் அந்த அரசுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டை எரித்து ஒழிப்பதிலும் கருத்தொற்றுமை உண்டு என்பதனை, கீழ்வரும் கவிதையிலே காண்கின்றோம்.

"அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்
சொல்லினால் சுடுவேன் ; அது, தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று, வீசினேன்.

இது தன்னிடம் தூதுவந்த அனுமனிடம் சீதை வெளியிட்ட கருத்தாகும். சீதை, இலங்கையை எரிக்காமல் விடுத்தற்குக் காரணம், அவள் தலைவன் உயிரோடிருந்தான் ஆதலால், அவன் தன் வில்லின் ஆற்றலைக் காட்டி தன்னை மீட்பான் என்பதில் அவளுக்கிருந்த நம்பிக்கைதான். கண்ணகியோ, கணவனை இழந்தவள். அதனால், பொறுத்திருக்கத் தேவையின்றி, மதுரையை எரித்து முடித்தாள். அவரவர் நிலையில் இருவரும் செய்ய வேண்டியதையே செய்தார்கள். சீதை அறக்கற்பினள் ; கண்ணகி மறக் கற்பினள்.

இறவாப் பெரும்புகழ் படைத்த இந்த இருபெரும் காப்பியங்களும் "பாரதத்தின் செல்வங்கள்" என்கிறார் பாரதியார். இவற்றை வழங்கிய மகா கவிகளைப் புகழுங்கால், "யாமறிந்த புலவரிலே கம்பரைப் போல்... இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாடுகின்றார்.

கம்பரும் இளங்கோவும் தமிழ்த்தாயின் இருகண்கள் போன்றவர்கள். அவர்கள் புகழ் வாழ்க.

(நன்றி : தமிழ்வட்டம் ஆண்டுமலர் 1967)

சிலம்பில் நாடகம்

டாக்டர் மு. வரதராசன்

நாடகப் போக்கில் மாந்தர் தம் தம் உணர்ச்சிகளைத் தாமே எடுத்துரைக்கும் வகையில் இலக்கியம் படைத்தல் தொன்றுதொட்டு இருந்துவந்தது. சிலப்பதிகாரம் நாடகநூல் அன்று ; ஒரு காவியமே. சிலப்பதிகாரத்தில் கதையை ஆசிரியர் கூறிச் செல்வதே அல்லாமல், நீண்ட விளக்கங்களும் அவரே கூறுவதாக ஆங்காங்கே அமைத்துள்ளார். அவற்றுடன் இடையிடையே ஆசிரியர் கதை கூறுதலை நிறுத்தி, கதைமாந்தரே மாறி மாறிப் பேசும் முறையையும், நிகழ்ச்சிகளை வருணிக்காமல் நாடகப் போக்கில் அவை அடுத்தடுத்து நிகழ்வனவாகக் கூறும் முறையையும் கையாள்கின்றார்.

நூலின் தொடக்கத்தில் கோவலனும் கண்ணகியும் பிறந்து வளர்ந்த நகரத்தைச் சிறப்பிக்க விரும்பிய ஆசிரியர், புகார் நகரத்தை வாழ்த்துவதுடன் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றையும வாழ்த்துவதாகப் பாடியுள்ளார். புகார் நகரத்தின் சிறப்பு இத்தன்மையானது என்று கூறாமல், யாரோ திங்கள் முதலியவற்றை வாழ்த்துவதாகத் தொடங்கியுள்ளார். நூலின் இத்தகைய தொடக்கமே நாடகப்போக்கில் உள்ளது எனலாம்.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடை போன்று, இவ்
அம்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரிதலான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலை உலகிற் கவனளிபோல்,
மேல்நின்று தான் சுரத்த லான்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்.

இவ்வாறு நான்கு சிந்தியல் வெண்பாக்களில் வாழ்த்து அமைத்த பிறகே, புகார் நகரம் பெருஞ்சிறப்பு உடையது. அங்கே இன்னார் மகன் இன்னானுக்கும் இன்னான் மகள் இன்னாளுக்கும் 'மணவணி காண மகிழ்ந்தனர்' என்றும் 'மாநகர்க்கு ஈந்தார் மணம்' என்றும் கதை கூறியுள்ளார். மீண்டும் இடையே,

"தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை" என்று நாடகப்போக்கில் திருமணக் காட்சியைக் கொண்டு வந்து நிறுத்தி அதை வியந்து கூறியுள்ளார்.

அதன்பிறகு மனையறம் படுத்த காதையிலும் அரங்கேற்று காதையிலும் அந்திமாலைச் சிறப்புச் செய் காதையிலும் இந்திரவிழாவூரெடுத்த காதையிலும் கடலாடு

காதையிலும் தொடர்ந்து கதை கூறிச் சென்றுள்ளார் ; ஆசிரியப்பாவிலேயே தொடர்ந்து எடுத்துரைத்துள்ளார். கானல்வரி என்ற பகுதி வந்ததும், கதை கூறும் முறையை மாற்றத் தொடங்குவதற்கு அறிவிப்பாக யாப்பை மாற்றியமைத்துள்ளார். அங்குக் கட்டுரை என்ற பகுதி நாடகத்திற்கு முன்னுரை போல் அமைந்துள்ளது. கட்டுரை முடிந்தவுடன் ஆசிரியர் கதை கூறுதல் நிற்கிறது. ஆசிரியர் கற்பனைத் திரைக்குப்பின் மறைகிறார். கோவலன் காணப்படுகிறான். அவனும் கோவலனாக இல்லை. அவன் கற்பனைக் காதலர் வேடம் தாங்கி நடிக்கும் நடிகனாகவே தோன்றுகிறான் ; தன் உணர்ச்சிகளையோ, தன் வாழ்வின் நிகழ்ச்சிகளையோ பாடவில்லை, கற்பனை மாந்தரின் உணர்ச்சிகளைத் தன் பாடல்களில் வெளியிடுகிறான். காவிரியின் வாழ்த்தாக உள்ள மூன்று பாடல்களும் கோவலன் தன் வாழ்த்தாகக் கூறுவன அல்ல ; நாட்டுமக்கள் அக்காலத்தில் பாடிவந்த வாழ்த்து மொழிகளை அவர்கள் பாடுவதுபோல் பாட முயன்ற முயற்சியே அது. நாட்டு மக்கள் பாடல்களில் சில திருத்தங்களையும் புனைந்துரைகளையும் சேர்த்துப் பாடியதாகும் அது. பழங்காலத்தில் எந்த வாழ்த்து ஆயினும், அரசனையும் சேர்த்து வாழ்த்தியே கூறப்படும் ஆதலின், காவிரியின் வாழ்த்தும் சோழன் புகழோடு கலந்த வாழ்த்தாக அமைந்துள்ளது.

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி !
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி !

மன்னுமாலை வெண்குடையான்
வளையாச் செங்கோ லதுவோச்சிக்
கன்னிதன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி !
கன்னிதன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னுமாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி !

உழவர் ஓதை மதகுஓதை
உடைநீர் ஓதை தண்பதம்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி !
விழவர் ஓதை சிறந்தார்ப்ப

நடந்த எல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன்தன்
வளனே வாழி காவேரி !

இந்த வாழ்த்துகளில் காவேரியின் வாழ்த்துடன் அரசன் புகழும் கலந்து விளங்குதல் காணலாம். ஆசிரியப்பா நீங்கி, பாவினம் யாப்பாக அமைந்தது காணலாம். புலவாய் வாழி காவேரி என்ற பகுதியும் அறிந்தேன் வாழி காவேரி என்ற பகுதியும் திரும்ப வந்து இசைநயத்துடன் நாடகச் சுவை பயத்தது காணலாம். இவை நாட்டுமக்கள் காவேரியை வாழ்த்தும் வாழ்த்துக்களே என்பதும், கோவலன் மக்களில் ஒருவனாக நடித்துப் பாடும் முறையிலேயே இவை அமைந்தன என்பதும், அடுத்துவரும் பகுதிகளில் மேலும் தெளிவாகும்.

கரியமலர் நெடுங்கண் காரிகைமுன்
கடல்தெய்வம் காட்டிக்காட்டி
அரியசூள் பொய்த்தார் அறலனிலரென்று
ஏழை யம்யாங் கறிகோம் ஐய !
விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும்
ஆமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்துங்கண் டாம்பல்
பொதியவிழ்க்கும் புகாரே எம்மூர்.

இவ்வாறு இன்னும் இரண்டு பாட்டுக்கள் அமைந்துள்ளன. "புகாரே எம்ஊர்' என்பது மூன்று பாட்டிலும் ஈற்றில் வந்துள்ளது. 'புகாரே எம்ஊர்' என்று கூறுபவன் கோவலன் அல்லன் ; கோவலன் ஏற்று நடித்த பாத்திரத்தின் கற்பனை மாந்தரின் – கூற்றே அது. காதலியின் தோழி காதலன் ஒருவனுக்குக் கூறும் கூற்றாக அமைந்தவை இவை. கோவலன் தோழியாக நடித்துப் பாடும் பாட்டுக்கள் இவை. முதல் இரண்டு பாட்டிலும் இடையே வரும் 'யாங்கு அறிகோம், ஐய' என்ற பகுதி எப்படி கோவலன் கூற்றாக இருக்கக்கூடும்? தோழி 'ஐய' என்று கற்பனைக் காதலனை விரித்துக் கூறும் முறையில் அமைந்த பகுதி அது.

அடுத்த மூன்று பாட்டுக்களும் காதலன் தன் காதல்நோய் பற்றிப் பாங்கனிடம் கூறும் முறையில் அமைந்த கற்பனை. அடுத்த மூன்று, காதலி எதிர்ப்பட்டபோது அவளை நோக்கி அவன் கூறியவை. அடுத்துள்ள மூன்றும் அவன் பாங்கனிடம் கூறியவை. அவற்றின்பின் அமைந்த மூன்று, அவன் தலைவி அழகைப் பாராட்டலாக அமைந்தவை. பின்னர் வரும் மூன்றும், பிரிய மாட்டாதவனாய்க் காதலன் கூறியவை. எஞ்சிய ஒன்று, காதல் மிகுதியால் அவன் கூறியதே ஆகும். இவற்றில் எல்லாம் கோவலன் வாழ்க்கை இல்லை ; கற்பனைக் காதலனாகவும் தோழியாகவும், பாங்கனாகவும் நாடகப் போக்கில் அவன் பாடும் பாட்டுக்களே இவை.

விளையாட்டில் பேசும் பேச்சிலேயே குறிப்பான பகையுணர்ச்சியை உணர்ந்து அது காரணமாக பகைத்துப் பிரித்தல் உண்டு. நாடக அரங்கில் நடிகர் பேசும் உரையாடலில், கற்பனைக்கு அப்பால் குறிப்பாகப் பிறரைப் புண்படுத்தும் உரைகள் உண்டு ; நாடாள்வோர் அது

காரணமாக வெகுண்டு நாடகத்தை தடை செய்தலும் உண்டு. அவ்வாறே கோவலனின் கற்பனைப் பாட்டுக்களினூடே தவறான காதல் குறிப்பு உள்ளது என்று கருதினாள் மாதவி. அதனால் மேற்குறித்தவற்றிற்கு எதிர்மாறாகக் கற்பனைக் காதல் பாட்டுக்களைப் பாடத்தொடங்கினாள். இதை இளங்கோவடிகளே, நாடகத்தை நிறுத்தி, கதை கூறும் போக்கில் கூறவேண்டியுள்ளது. சிறிது நேரம் விழுந்த திரை மீண்டும் விலக, ஆசிரியர் மறைந்து, மாதவி கற்பனைப் பாத்திரம் ஏற்று நடித்துப் பாடுகிறாள்.

கோவலன் பாடிய அதே முறையில் ஏட்டிக்குப் போட்டியாக, காவேரியைப் பற்றி மூன்று பாட்டும், யாங்கு அறிகோம் ஐய, புகாரே எம் ஊர் என்று மூன்று பாட்டும், காதல்நோய் மிகுந்து வருந்திய தலைவியின் கூற்றாக ஆறு பாட்டும், அமைந்துள்ளன. பிறகு தோழி தலைவனை நோக்கித் திருமணம் செய்துகொள்ளுமாறு குறிப்பால் அறிவுறுத்தும் பாட்டும் மூன்று உள்ளன.

என்னைக்காண வகைமறைத்தால்
அன்னை காணின் என்செய்கோ?

ஆர்இக்கொடுமை செய்தாரென்று
அன்னை அறியின் என்செய்கோ?

அலவுற் றிரங்கி அறியாநோய்
அன்னை அறியின் என்செய்கோ?

என்று அம் மூன்று பாட்டிலும் திரும்பத் திரும்ப ஒரு கருத்து வற்புறுத்தப்படுதல் நாடகச்சுவையை மிகுதியாக்குகிறது. அடுத்த மூன்று பாட்டுக்கள் மாலைப்பொழுது கண்டு இரங்குவனவாக உள்ளன. அவற்றை அடுத்த மூன்றும், தோழி தலைவன்பொருட்டுக் கூறுவன. பின்னர், காதல் மிகுதியால் வருந்திக் கூறுவதாக ஒரு பாட்டு அமைந்துள்ளது. இவற்றோடு, கோவலன் பாட்டுக்கு எதிர்ப்பாட்டாக அமைந்த மாதவியின் பாட்டுக்கள் எண்ணிக்கையிலும் உணர்ச்சியிலும் ஒரு நிகரெனவாக உள்ளன. இந்நிலையில் மீண்டும் நூலாசிரியர் தோன்றுகிறார். பாடுகின்றவளைப் பற்றிக் கூறி, மேலும் அவளே சில பாடுவதாகக் கூறுகிறார். பிறகு மீண்டும் திரை விலக, மாதவி பாடுகிறாள். அடுத்த மூன்று பாட்டில் காதலிக்கு மாலைப்பொழுது தரும் துயரம் கூறப்படுகிறது. அடுத்த ஒரு பாட்டே இந்த நாடகத்தில் இறுதிப்பாட்டு ; அதில் காதலன் பொய்யன் என்று குறிப்பு உள்ளது. அது அந்தக் கற்பனை நாடகத்திற்கும் பொருந்துவதாக, காவிய மாந்தர்க்கும் பொருந்துவதாக, இரு பொருள்பட அமைந்துள்ளது. கோவலன் மாதவியை விட்டுப் பிரிதற்கு அடிகோலியதாக உள்ளது. அத்துடன் கற்பனை நாடகம் முடிய, ஆசிரியர் மீண்டும் கதை சொல்பவராக வந்து நின்று நிகழ்ந்ததைக் கூறி, ஆசிரியப்பாவால் முடித்துள்ளார். இவ்வாறு கானல் வரியில் பெரும்பகுதியைக் காவியத்துள் நாடகமாக அமைந்துள்ளார் ஆசிரியர்.

வேனிற் காதையில் காவியக்கதை தொடர்ந்து ஆசிரியப்பாவால் கூறப்பட்டுள்ளது. அடுத்த கனாத்திறமுரைத்த காதையும் கதைகூறும் போக்கினதே ஆயினும், யாப்பு

மாறியுள்ளது. கலிவெண்பாவாக உள்ளது. அடுத்த நாடுகாண் காதையும் காடுகாண் காதையும் ஆசிரியப்பாவால் கூறப்படும் காவியக் கதைப் பகுதிகளே ஆகும். அடுத்து அமைந்த வேட்டுவ வரியில் எழுபத்து நான்கு அடிகள் கதைகூறும் ஆசிரியப்பாவே ; பிறகு வேட்டுவ வரிப் பாடல்கள் தொடங்குகின்றன. அவை வேடர்கள் கொற்றவையை வழிபட்டுப் பாடுவனாவாக நாடக முறையில் அமைந்தனவே. ஊன் உணவையும் கள்ளையும் கொலையும் கொள்ளையையும் மிக வெறுத்தவர் நூலாசிரியர். ஆயின் வேடர்கள் வாய்ச்சொல்லாகப் பாடலை அமைக்கும் நாடகப் பகுதியில்.

சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்
இடர்கெட அருளும் நின் இணையடி தொழுதேம்
அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறல்தரு விலையே,
....
படுகடன் இதுவுகு பலிமுக மடையே

என வேட்டுவர் இரத்தம் சொரியும் கழுத்தையும் கொழுப்பையும் பலிப் பொருளாகத் தருதலைப் பாடியுள்ளார்.

வம்பலர் பல்கி வழியும் வளம்பட
அம்புடை வல்வில் எயின்கடன் உண்குவாய்

துண்ணென் துடியொடு துஞ்சூர் எறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்

பொருள்கொண்டு புன்செயின் அல்லதை யார்க்கும்
அருளில் எயினர் இடுகடன் உண்குவாய்

என வேட்டுவர் வழிப்பறிக் கொள்ளையும் ஊர்க்கொள்ளையும் இரக்கமில்லாமல் பிறரை வதைத்துப் பறிக்கும் பொருளும் வேண்டிக் கொற்றவையை வழிபடுவதைப் பாடியுள்ளார். இவ்வாறு இருபத்தொரு பாட்டுக்களை நாடக முறையில் அமைத்துள்ளார்.

மீண்டும் நான்கு காதையில் ஆசிரியப்பாவால் கதை கூறிச்சென்று, ஆய்ச்சியர் குரவையில் ஒரு முன்னுரைக்குப்பின் நாடக முறையைக் கையாண்டுள்ளார். உரைப்பாட்டு மடை, கருப்பம், கொளு, பாட்டு, ஒன்றறன் பகுதி. ஆடுநர்ப்புகழ்தல், உள்வரி வாழ்த்து, முன்னிலைப் பரவல், படர்க்கைப் பரவல் எனப் பலவகைப் பாட்டுக்களை ஆய்ச்சியர் பாடி ஆடுவதாக நாடக முறையில் அமைத்து, இறுதியில் ஆறு அடிகளில் ஆசிரியப்பாவால் நிகழ்ச்சி கூறிமுடித்துள்ளார்.

அடுத்த துன்பமாலை என்ற பகுதியில் முழுதும் காவியக் கதையும் நிகழ்ச்சியுமே அமைந்துள்ளன. வேட்டுவர், ஆயர் முதலான பிறர் ஆடல் பாடல்கள் இல்லை. ஆயினும்

துன்பமாலையில் கண்ணகியின் துன்பமொழிகள் எல்லாம் நாடகப் போக்கிலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன எனலாம். 'சொன்னது' 'எனக்கேட்டு' என்னும் தொடர்பு மொழிகள் சில தவிர, மற்றவை கண்ணகியின் கூற்றாக, உணர்ச்சிமிக்க நடையில் அமைந்துள்ளன. 'சொன்னது' என்ற தன் பின். அங்கிருந்து ஆயர் தாம் கேள்வியுற்ற கொலைச் செய்தி கூறப்பட்டுள்ளது. அதுவும் உணர்ச்சிமிக்க நாடகத்தில் பாத்திரங்களின் உரையாடல் அமைதல்போல் உள்ளது.

சொன்னது :
அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலை குறித் தனரே !

என்ற பகுதியில் வந்த தொடரே திரும்பவும் அமைந்து அவர்களின் சொற்களை நாடகப் போக்கு உடையனவாகக் காட்டுகின்றது. அதன்பிறகு கதைகூறும் ஆசிரியர், நாடகப் போக்குக்கு இடையே ஆசிரியப்பா சிறப்புத் தராது என்ற கருத்தாலோ, வேறு எக்காரணத்தாலோ, கலிவெண்பாவின் யாப்பில் நான்கு அடிகள் பாடியுள்ளார்.

எனக்கேட்டு,
பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழி கதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்தன் கேள்வனை
'எங்கணா' என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்.

இந்த அடிகள், ஆசிரியர் விரும்பியவாறு, நாடகப் போக்கிற்கு இடையே அமைவதற்கு இயந்தனவாக உள்ளன. நாடகப்போக்கில் ஆசிரியர் நெஞ்சம் ஈடுபட்டமைக்கு மற்றொரு சான்றும் அதே பகுதியில் காணலாம் :

காணிகா,
வாய்வதின் வந்த குரவையின் வந்துஈண்டும்
ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டீமின்
ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டைக்க !
பாய்திரை வேலிப் படுபொருள் நீ அறிதி !
காய்கதிர்ச் செல்வனே 'கள்வனோ என்கணவன்'
கள்வனே அல்லன் கருங்கயற்கண் மாதராய் !
ஒள்ளெரி உண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்.

இங்குக் கண்ணகியின் தொடர்ந்த புலம்பலும் கொதித்தலும் துயரமும் கேட்டபின், குளுரைப்பவள்போல் வெகுண்டெழுந்து "கதிரவனே, என் கணவன் கள்வனோ" என்று கேட்கும் குரல் எழுகிறது. அந்நிலையில் ஆசிரியர்,

"என்று கண்ணகி வினவ"
அல்லது
"என"

என்று தொடர்புச் சொல் ஒன்றும் அமையவில்லை. அவள் கொதித்து எழுப்பிய வினாவிற்கு விடை மட்டும் ஒரு குரலாகப் பிறக்கிறது. ‘‘கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய் ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்’’ என்பது விடை. ‘‘என்றது ஒரு குரல்’’ என்பது தொடர்புறுத்தும் பகுதி. அதுபோல் கண்ணகி எழுப்பிய வினாவிற்கு ஒரு சொல் அமைக்காமல், நாடகத்தின் உரையாடலை வாளாவிடுவது போல் விட்டுள்ளார்.

அடுத்த ஊர்சூழ்வரியிலும் நாடகப் போக்கைத் தொடர்ந்து கையாள்வதால், கலிவெண்பாவிலேயே கதை தொடங்கி இரண்டு அடிகள் அமைத்துள்ளார். பிறகு கண்ணகியின் புலம்பலும் ஊரவர்திகைப்பும் கதை கூறலுமாய் முடித்துள்ளார். பிறகு, வழக்குரை காதையிலும், கதைகூறும் போக்கும் நாடக உணர்ச்சியும் கலந்து அமைகின்றன.

அடுத்தாற்போல், நாடகப் போக்கைத் தெளிவாகக் காண்பது குன்றக் குரவையில் ஆகும். பின்னர் வரும் நாடகப் போக்கிற்கு ஏற்ப, கதைகூறும் முதல் பத்து அடிகள் ஆசிரியப்பாவால் இயற்றாமல் யாப்பினை மாற்றியுள்ளார். பிறகு குன்றவரின் சொற்களும் பாடல்களும் வந்து அமைகின்றன. புனலாடுதலைப் பற்றியும் முருகன் வேலைப் பற்றியும் உள்ள பாடல்கள் நாடக முறையில் அமைந்துள்ளன. பிறகு கற்பனைக் காதலியின் நோய் பற்றியும் அது தணிக்கப் பெற்றோர் வெறியாடும் முயற்சி பற்றியும் சங்க இலக்கிய மரபினை ஒட்டி அமைந்த பாடல்களைக் குன்றவர் பாடுகின்றனர். பிறகு கதை கூறப்படும் பகுதி உள்ளது. பின்னர், கற்பனைக் காதலன் திருமண ஏற்பாட்டுடன் வருவான் என்று மகிழ்ந்து பாடுதலும், கண்ணகியை ஏத்திப் பாடுதலும் உள்ளன.

நூலின் இறுதிக் காதைக்கு முக்கியதாகிய வாழ்த்துக் காதையில் மறுபடியும் நாடகமுறை கையாளப்பட்டுள்ளது. பலவகைப் பாவினங்களில், தேவந்தி, காவற்பெண்டு முதலானவர்களின் உரைகள் அமைந்துள்ளன. ஆசிரியர் நாடகத் திரைக்குப் பின்னர் மறைந்து நிற்க, தேவந்தி முதலானவர் தாமே பேசுகின்றனர். செங்குட்டுவனும் தானே பேசுகிறான். என, என்று கூற முதலான இணைப்புச் சொற்கள் இல்லை. வஞ்சி மகளிர் சொல், ஆயத்தார் சொல், ஆகியவற்றின் பின், நாட்டுமக்கள் அக்காலத்தே பாடிவந்த அரசவாழ்த்து, அம்மானைவரி, கந்துகவரி, ஊசல்வரி, வள்ளைப்பாட்டு ஆகியவை உள்ளன. பிறகு இறுதி நான்கு அடிகளில் இளங்கோவடிகள் தோன்றிய கதைப்பகுதியைக் கூறியுள்ளார். இறுதிக் காதையாகிய வரந்தரு காதையில் இளங்கோவடிகளே கதைப் பகுதியை எடுத்துக் காவியத்தை முடிப்பதால் அங்கும் நாடக முறை இல்லை.

இவ்வாறு இடையிடையே நாடகப் போக்கு அமைந்து, இசைப்பாடல்களும் விரவியிருப்பதால், இந்நூலை இயலிசை நாடகப் பொருள் தொடர் நிலைச் செய்யுள் என்னும் வழக்கு ஏற்பட்டது.

(நன்றி : தமிழ்வட்டம் ஆண்டுமலர் 1967)

சிலம்பில் ஆன்மிகம்

பேராசிரியர் தி. இராசகோபாலன்

தமிழில் காப்பியம் இல்லாத குறையைப் போக்குவித்தது, சிலப்பதிகாரம். தமிழில் முத்தமிழிலும் துறைபோகிய காப்பியம் இல்லாத குறையைப் போக்கியதும், சிலப்பதிகாரமே ! அக்காலத்திலேயே தேசிய நீரோட்டத்தைப் பின்னிப் பிணைந்து எழுந்த காப்பியமும் சிலப்பதிகாரமே ! சர்வ சமயப் பார்வையோடு எழுந்த காப்பியமும் சிலப்பதிகாரமே !

இத்தனை ஏகாரங்களோடும் எழுந்த காப்பியத்திற்கு மூலாதாரமாக அமைந்தது, ஆன்மீகம் ஆகும். சர்வ சமயங்களும் உடல்கள் என்றால், அந்த உடல்களுக்குள் இருக்கும் உயிர், ஆன்மிகம் ஆகும். மத அடிப்படையிலே எழுந்த பல காப்பியங்கள் சமயச் சடங்குகளோடேயே முடிந்துவிட்டன ; ஆனால், சிலப்பதிகாரம் மட்டுந்தான், சமயங்களைத் தாண்டி, ஆன்மிகத்தை அளந்து பார்த்தது. எனவே தான் அக்காப்பியம், எல்லாச் சமயவாதிகளாலும் போற்றப்படுகிறது.

ஆன்மிகம் என்றால் என்ன? அதற்கு இரண்டு பெருமக்கள் பொருத்தமான விளக்கம் தந்திருக்கின்றனர். ஒருவர் வள்ளலார் ; மற்றவர் மகாகவி பாரதியார். "எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர், அவருளந்தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்" என்றார், வள்ளலார். "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் – ஜகத்தினை அழித்திடுவோம் – எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன் என்றுரைத்தான் கண்ணபெருமான்" எனப் பாரதியார் பாடியிருப்பது, ஆன்மிகத்திற்குத் தரும் சரியான விளக்கம் எனலாம்.

பண்டைத் தமிழன் ஆன்மிகத்தைப் பற்றிப் பேசியதைக் காட்டிலும், ஆன்மிக வழியில் வாழ்ந்து காட்டியது மிகுதி. வாடிய பயிரைக் கண்டு வாடிய பாரி மன்னன், ஒரு முல்லைக் கொடிக்குத் தேரை ஈந்ததும், குளிரில் நடுங்கிய மயிலுக்குப் பேகன் போர்வையை ஈந்ததும், ஆன்மிகத்தின் அடையாளமே ! பாம்பன் சுவாமிகள் ஆசிரமத்திலே ஒரு சிறுவன் ஒரு மூட்டைப் பூச்சியைக் கொன்றமைக்காக, அன்றிரவு முழுமையும் தூக்கம் வராமல் தவித்தாராம் சுவாமிகள். எல்லாவற்றிற்கும் மேலாகச் சேக்கிழார் சுவாமிகள் மனுநீதிச் சோழன் புராணத்திலே ஆன்மிகம் இன்னது என்பதை வரையறுத்துக் காட்டுகிறார். வீதிவிடங்கனால் கன்றை இழந்த பசு, மனுநீதிச் சோழனுக்கு முன்னர் வந்து நிற்கிறது. அத்தாய்ப் பசுவின் முகத்தைப் பார்த்த மனுநீதிச் சோழன் துடிதுடித்துப் போகின்றான். (தன்னிளங் கன்று காணாத் தாய்முகம் கண்டு சோரும், அந்நிலை அரசன் உற்ற துயரம், ஓர் அளவிற்று அன்றால்) ஓர் உயிருக்கு உற்ற துன்பத்தைக் கண்டு, இன்னொரு உயிர் அடையும் துன்பமே ஆன்மிகம்.

மதச்சார்பற்ற அரசு என்பதை நமது அரசியல் சட்டம் வரைந்து காட்டுவதற்கு முன்பே, அதனைப் படைத்துக் காட்டியவர் இளங்கோவடிகள். மதச் சார்பற்ற அரசு என்பது, மதங்களுக்கு எதிரான அரசு அன்று ; அனைத்து மதங்களையும் தாங்கிப் போற்றி வாழ்கின்ற அரசாகும். இதனைச் சிலப்பதிகாரத்தின் பாடு பொருளாகவே ஆக்கியிருக்கிறார் இளங்கோவடிகள் ! அறுவகைச் சமயங்களில் காணாபத்யம் எனும் கணபதி வழிபாட்டைத் தவிர, மற்ற ஐவகைச் சமயங்களையும் பாடுகிறார் இளங்கோவடிகள் ; அதற்கு மேலும், இந்தியச் சமயங்களாகிய சமணத்தையும் பௌத்தத்தையும் பாடியிருக்கிறார், அடிகள்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு புறப்படு முன், நிலவு கதிர்முடித்த சிலபெருமானின் திருவடியைத் தலையிலே சூடுகின்றான். திருமால் கோயிலில் இருந்து வந்த அருட்பிரசாதத்தைத் தன் மார்பிலே அணிந்து கொள்கின்றான். பௌத்தராக மாறிவிட்டாரோ என எண்ணுகிற அளவுக்குப் பௌத்த மதப்பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்த சீத்தலைச் சாத்தனார் (மணிமேகலைக் காப்பியம் மூலமாக) கண்ணகிக்கு முன்னர் மருதாபதித் தெய்வம் தோன்றுகின்ற இரவு மதுரைச் சோமசுந்தரச் கடவுள் ஆலயத்தில் உறங்கியிருக்கிறார் (கொன்றையஞ்சடைமுறை மன்றப் பொதியில், வெள்ளியம்பலத்து, நள்ளிருட் கிடந்தேன்). அடிகள் ஆய்ச்சியர் குரவையில் பெருமாள் சீர் பேசுவதைப் படித்தால், ஆழ்வார்கள் பன்னிருவரும் அதைப் படித்துவிட்டுத்தான் அருளிச் செய்திருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. குன்றக்குறவர்கள் முருகப் பெருமானின் பெருமையைப் பாடுவதைக் கேட்டால், அடிகள் திருமுருகாற்றுப் படையில் ஆழங்கால் பட்டிருப்பதை உணரமுடியும். “அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு, சூருடைக் கானகம் உகந்த காளி, தாருகன் பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்” என வாயிற் காவலன் பேசுவதிலும், வேட்டுவ வரியிலும், அடிகளின் மனத்தில் படிந்திருந்த சாக்தத்தின் சாரம் தெரிகிறது. ‘ஞாயிறு போற்றுதும் ! ஞாயிறு போற்றுதும்’ என அடிகள் காப்பியத்தைத் தொடங்குவதிலிருந்தும், ‘காய்கதிர்ச் செல்வனே’ கள்வனோ என் கணவன்’ எனக் கண்ணகி கேட்பதிலிருந்தும், சூரிய வழிபாட்டின் (சௌரம்) முதன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

தரும சாரணர்கள் கவுந்தியடிகள் முன்னர் தோன்றி, “ஒழகென ஒழியாது ஊட்டும் வல்வினை, இட்ட வித்தின் எதிர்வந்து எய்தி, ஒட்டுங்காலை ஒழிக்கவும் ஒண்ணா” எனப் பேசும் பேச்சில், சமணத்தின் ஊற்றமே தெற்றெனப் புலப்படுகின்றது. கவுந்தியடிகள் தோளில் உறியும், கரத்தில் மயிற்பீலியும் ஏந்தியே, கோவலன் கண்ணகியரை வழிநடத்திச் செல்கிறார். புகார் நகரம் எங்கும் பௌத்த பள்ளிகளும் மடாலயங்களும் திகழ்ந்து நிற்பதை, “அறவோர் பள்ளியும், அறன் ஓம்படையும் புறநிலைக் கோட்டத்துப் புண்ணியதானமும், திறவோர் உரைக்கும் செயல் சிறந்து ஓர்பால்” என அடிகள் வருணிப்பதிலிருந்து; அடிகளின் விசாலமான இதயத்தைப் புரிந்து

கொள்ளலாம். அடிகள் தமிழகத்துச் சமயங்கள் மட்டுமன்றி, இந்தியச் சமயங்களையும் விருப்பு வெறுப்பு இன்றி ஆய்ந்திருக்கிற தன்மை, இன்றைய பாரதத்திற்குச் சரியான முன்னுதாரணம். இளங்கோவடிகள் எல்லாச் சமயங்களையும் பாடுகின்றார். எனினும் சமயங்களைத் தாண்டி அச்சமயங்களின் உயிர்த்துடிப்பாக இருக்கின்ற ஆன்மிக நெறிக்கே முதன்மை தருகின்றார். "மண்ணுலகதிலே உயிர்கள் தாம் வருந்தும் வருத்தத்தை ஒருசிறிதெனினும், கண்ணுறப் பார்த்தும், செவியுறக் கேட்டும் கணமும் நான் சகித்திட மாட்டேன்" என வள்ளலார் ஆன்மிகத்திற்கு இலக்கணம் வகுப்பதற்கு, முன்பேயே இளங்கோவடிகள் அதற்கு இலக்கியம் செய்திருக்கிறார். இலக்கியத்திலிருந்து பிழிபடும் எண்ணெய் தானே இலக்கணம் !

வங்காளத்தில் கிரீஷ் சந்திர கோஷ் என்றொரு நாடக நடிகர், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போராளியாகவும் திகழ்ந்தவர். அவரைப் புற்றுநோய் பற்றியது. இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர் அவர். அதனால், பரமஹம்சர், அந்நோயைத் தாம் வாங்கிக் கொண்டு, கிரீஷ் சந்திர கோஷின் பணி, விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைக்குமாறு செய்தார், என்பது ஆசிரமச் செய்தி. அதுதானே ஆன்மிகப் பணி ; வைணவ ஆச்சாரியராகிய பெரியநம்பிக்கு இருந்த பிளவை நோயை , அவருடைய சீடராகிய மாறநேரி நம்பி பெற்றுக்கொண்டு, பெரிய நம்பியின் சமயப்பணி தடைபடாது பார்த்துக் கொண்டார் என்பது, குருபரம்பரை வரலாறு.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலே வங்கத்திலே பிளேக் நோய் பரவி, மனிதர்கள் கொத்துக் கொத்தாகத் தெருக்களில் செத்து விழுந்தார்கள். அந்த நேரத்தில் சுவாமிஜி விவேகாநந்தர் விழுந்த பிணங்களைத் தம் தோளின் மீது சுமந்து, அடக்கம் செய்தார். அத்தொண்டில் சுவாமிஜி இறங்கு முன்னர், 'அதற்குச் செலவு அதிகமாக ஆகுமே' என்று பேலூர் மடத்து நிர்வாகிகள் தெரிவித்தனர். அதற்குச் சுவாமிஜி, "பேலூர் மடத்தை விற்றாவது அப்பணியைத் தொடர்வேன்" என்றார். அதுவல்லவா ஆன்மிகம் !

இத்தகைய ஆன்மிகம் சிலப்பதிகாரத்திலே மனிதர்களிடம் மட்டுமன்றி, விலங்குகளிடத்துக்கூட ஊடுருவியிருந்தது. கரடிகள் கரையானைத் தின்று வாழும். ஆனால், தென்பாண்டிநாட்டிலிருந்த கரடிகள் பசிக்காகக் கரையான்கள் கட்டிய புற்றிலே கைவிடாதாம். வேங்கைகள் மான் இனத்தோடு பகைமை பாராட்டாதாம். அந்நாட்டிலுள்ள பாம்பும், முதலையும் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாதாம். இன்னும் அந்நாட்டிலே மறை ஓதுகின்றவர்களுடைய ஓசை ஒலிக்குமே தவிர, குற்றம் குறை களைய நினைப்பவர்கள் அடிக்கின்ற ஆராய்ச்சி மணியின் ஓசை ஒலித்ததே இல்லையாம்.

அகநகர் மட்டுமன்றி புறநகரிலே வாழ்கின்ற உழைக்கும் வர்க்கத்தினர் கூட ஆன்மிக வாழ்வு வாழ்ந்ததைக் கவுந்தியடிகள் மூலம் புலப்படுத்துகின்றார் இளங்கோவடிகள். கோவலன்–கண்ணகியரை இடைக்குல மக்களிடம் அடைக்கலப்படுத்து முன்னர்

அவர்களுடைய வாழ்க்கை யாருக்கும் தீங்கு இல்லாத வாழ்க்கை என்பதை, "ஆ காத்து ஓம்பி, ஆப்பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை" என மொழிகிறார், கவுந்தியடிகள். சேரநாட்டிலும் புறநகர் வாழ்கின்ற் மலைவாழ் மக்கள் ஆன்மிக உணர்வோடு வாழ்கின்றனர்.

மதுரையை எரித்த பின் திருச்செங்குன்றிலே வந்து நின்ற கண்ணகியைப் பார்த்த குன்றக்குறவர்கள் சாத்தனார் மூலம், அவள் வாழ்வு பாழ்பட்டதைக் கேட்டு, அத்துயரத்தோடு ஒன்றிவிடுகின்றனர். அதுவரையில் கள்ளுண்டு தினைப்புனத்தில் யானைகளை விரட்டுவதற்குக் கவண்கல்லை வீசி வந்த மலைவாழ் மக்கள், அதற்குப் பிறகு கள்ளுண்ணுவதையும் கைவிட்டனர் ; கவண் கல் வீசுவதையும் கைவிட்டனராம். அதனால் தினைப் புனத்தில் சுதந்திரமாக மேய்ந்த யானைகள் வயிறு புடைக்க உண்டு அங்கேயே மயங்கிக் கிடந்தனவாம். இவ்வாறு தொடர்பில்லாத மக்களிடத்தும் ஆன்மிக உணர்வைக் காட்டுகிறார், இளங்கோ.

பாண்டிய – சேர நாட்டைப் போலவே சோழ நாட்டிலும் ஆன்மிகம் ஆழ வேரூன்றியிருந்தது. பூம்புகாரில் பத்தினி ஒருத்தியைப் பற்றி பழிதூற்றினான் ஒரு பாவி. அது அறிந்த சதுக்கபூதம் அவனைப் புடைத்துத் தின்னச் சென்றது. அதைக் கண்ட அவனுடைய தாய் அலறித் துடித்தாள். செய்தியறிந்த கோவலன் அந்தப் பூதத்தை அணுகி, தன்னுடைய உயிரை எடுத்துக் கொண்டு, அவனுடைய உயிரைத் தருமாறு வேண்டினான். அதற்குச் சதுக்கபூதம், "நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு, பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை" என்றுரைத்து, அப்பாவியையும் அடித்துத் தின்றது.

என்றாலும், மகனை இழந்த தாய்க்கும், சுற்றத்தாருக்கும் உற்றுழி உதவி, பல ஆண்டுகளுக்குத் தேவையான நிதியாதாரங்களை வழங்கினான், அந்த இல்லோர் செம்மலாகிய கோவலன்.

மேலும், மாதவிக்கு மணிமேகலை பிறந்ததை அடுத்து, ஏழை எளியவர்களுக்குத் தம் செங்கையால் வாரி வழங்கினான், கோவலன். அங்கு யாசகம் வாங்க வந்த, நல் மறையோனை – ஞான மார்க்கத்திற்கு நல்வரம்பாய வயோதிகனை, மதம் பிடித்த யானை ஒன்று, தன் துதிக்கையால் பற்றியது. யானையை அடக்கும் மொழியையும் கற்ற கோவலன் வேகமாகப் பாய்ந்து, யானையின் பிடியிலிருந்து, அந்த அந்தணனைக் காப்பாற்றினான். அந்த ஆன்மிக உணர்வால், 'கடக்களிறு அடக்கிய கருணை மறவன்' என இளங்கோவடிகளால் பாராட்டப்படுகின்றான், கோவலன். இவ்வாறு பல உயிர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைந்த செல்லாச் செம்மலாகத் திகழ்கின்றான், ஆன்மிக வள்ளலாகிய கோவலன்.

வழக்குரைத்து மீண்ட கண்ணகி ஆவேசத்தோடு செயல்பட்டாலும், ஆன்மிக உணர்வோடு செயல்படுகின்றாள். மதுரையை எரிக்கும்பொழுது, பசு, பத்தினிப் பெண்டிர்,

அறவோர் பக்கம் வாராமல், தீத்திறத்தோர் பக்கமே சாரும்படியாக அங்கியங்கடவுளுக்கு ஆணை பிறப்பிக்கின்றாள், அந்தக் கற்புத்தெய்வம். அதுபோலவே சேரன் செங்குட்டுவன் வடநாடுகளை வென்று கொண்டு போகும்போது, முத்தீ வளர்க்கும் அந்தணர்களுடைய வேள்வி பாதிக்கப்படாமல் பாதுகாத்துச் சென்றானாம். (வடதிசை மருங்கின் மறைகாத்து ஓம்புநர், தடவுத்தீ அவியாத் தண்பெரு வாழ்க்கை)

ஆன்மிகத்திற்குச் சிகரம் வைத்தாற் போன்றதொரு நிகழ்ச்சி, வஞ்சிக் காண்டத்தில் உண்டு. இமயம் வரை வென்று வந்த செங்குட்டுவன், தன்னை எதிர்த்த ஆரிய மன்னர்களையும் மாற்று வேடத்தில் திரிந்த அவர்களுடைய சுற்றத்தினரையும் சோழ – பாண்டிய மன்னர்களுக்குக் காட்டி வரும்படி அனுப்பி வைத்தான். ஆனால், சோழ மன்னன் செங்குட்டுவனின் வெற்றியை இகழ்ந்துரைக்கும் வகையில், "கொல்லாக் கோலத்து உயிருய்ந்தோரை, வெல்போர்க் கோடல் கொற்றம் அன்று" எனப் பேசினான். சோழனைப் போலவே பாண்டியன் வெற்றிவேற் செழியனும், செங்குட்டுவன் வீரத்தை இகழ்ந்து பேசினான். இதனைச் செவிமடுத்த சேரன் செங்குட்டுவன், மீண்டும் வீராவேசம் கொண்டான். அணிதேர்ப்புரவி ஆட்பெரும்படையைச் சோழ – பாண்டியரை நோக்கிப் புறப்படச் சொன்னான்.

அந்நேரத்தில் ஆங்கு வந்த மாடல மறையோன், செங்குட்டுவனிடத்து நிகழ்த்திய மடைமாற்றம், ஆன்மிகத்தின் வெற்றியாகும். "வெற்றி வேந்தனே ! நீ மறக்கள வேள்வி செய்தது போதும் ; இனி அறக்கள வேள்வி செய்வாயாக ! நேற்றைய வடவாரிய மன்னர்களைப் பார் ! இன்றைக்குத் தலையில் கல்சுமந்து நிற்கின்றனர். அதனால், செல்வம் நிலையில்லாதது; யாக்கை நிலையில்லாதது. ஆடுகின்ற கூத்தரைப் போல் அருமையான உயிரானது, ஒருவழி நின்ற உடலோடேயே என்றும் செயல்பட்டு நிற்காது. செய்த வினையின் வழிப்பட்டு, உயிர்கள் வெவ்வேறு உடலினும் சென்று பிறக்கும். இதுவே தெளிந்த ஆன்ம ஞானிகள் தெளிந்துரைத்த உண்மை தத்துவம் ஆகும். " என மாடல மறையோன் உரைத்த ஆன்ம போதனையினைக் கேட்டு, மறக்கள வேள்வியை விட்டு, அறக்கள வேள்விச் செய்யத் தொடங்கினான், சேரன் செங்குட்டுவன்.

சிலப்பதிகாரம் மூன்று உறுதிப் பொருள்களைக் கொண்டு எழுந்தது. எனினும் நான்காவது உறுதிப்பொருள் ஆக விளங்குவது, ஆன்மிகம் ஆகும். கண்ணுக்குத் தெரியும் கட்டிடத்தைக் கண்ணுக்குத் தெரியாத கடைகால் தாங்கி நிற்பது போல, சிலப்பதிகாரத்தை நான்காவது காலாக, ஆன்மிகம் தாங்கி நிற்கிறது. திரிவேணி சங்கமத்தில் யமுனையும் கங்கையும் கண்ணுக்குத் தெரியும் ; ஆனால், ஊற்றிலிருந்து சுரக்கும் சரசுவதி கண்ணுக்குத் தெரியாது. சரசுவதியைப் போலத் தான், சிலம்பில் ஆன்மிகமும் அடியிலிருந்து சுரக்கும்.

முப்பெரும் உண்மைகள் – பாரதியின் எதிர்பார்வை

திரு. பெ. சிதம்பரநாதன்

இளங்கோவடிகளின் படைப்பாகிய சிலப்பதிகாரம் அவருடைய கற்பனைப்படைப்பு அல்ல. நடந்த ஒரு சோகச் சம்பவத்தை இளங்கோவின் சமகாலப் படைப்பாளியான சாத்தனார் எடுத்துச் சொல்லியதன் தாக்கத்தினால் எழுதப்பட்டதுதான் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்தின் நோக்கம் முப்பெரும் உண்மைகளைச் சொல்லவந்த படைப்பு என்பதே பண்டிதர்கள் பலரின் முடிவாகும்.

இம்முப்பெரும் உண்மைகளுக்கு அப்பாலும் இவற்றுக்குச் சமமான வேறுசில பேருண்மைகளும் இல்லாமல் இல்லை.

உதாரணமாக, வாழ்க்கை தொண்டு மயமானது எனக்கூறிய 63 நாயன்மார்கள் சித்தரித்துள்ள தொண்டும் ஒரு பேருண்மைதான்.

அவதார புருஷர்களை 'எளிவந்தவர்கள்' என்பதால், எளிமையும் ஒரு பேருண்மையாகப் போற்றப்படுகிறது.

உழைப்பு என்ன சாதாரண உண்மையா? உழைப்பில்லாமல் இந்த உலகமே இல்லையே!

இப்படிப்பட்ட வாழ்வியல் பேருண்மைகள் எத்தனையோ உண்டு. சிலப்பதிகாரம் பாட்டுடைச் செய்யுளாக நாட்டுகிற முப்பெரும் உண்மைகளான,

"அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாவதும்."
"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்"
"ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்"

என்பன பற்றி உரக்கச் சிந்திப்பது கூட சிலப்பதிகாரத்திற்குச் சிறப்புச் சேர்க்கவே உதவும்.

பேருண்மையை வடமொழியில் சத்தியம் என்பார்கள். சத்தியம் என்பது மாறாதது என்பார்கள். எது மாறாததோ அதுதான் சத்தியம்.

ஒரு தத்துவ மேதை சொன்னார் : "மாறிக் கொண்டே இருக்கும் இந்த உலகத்தில் எது நிரந்தரமானது என்றால், அந்த மாற்றம்தான் நிரந்தரமானது (Change is Permanent)" என்றார்.

இதுவும் ஒரு பேருண்மைதான். சிலப்பதிகாரம் பேசும் மூன்று பேருண்மைகளுக்குள் நமது மொத்த வாழ்க்கையும் அடங்கி விடாது என்பதே சிலப்பதிகாரம் பற்றிய ஒரு சரியான புரிதலாகும்.

இந்தப் புரிதலோடு இளங்கோவடிகள் கண்ட – காட்டிய – நாட்டிய அம்மூன்று பேருண்மைகளையும் அணுகுவதும், அலசுவதும் அவசியப்படுகிறது.

ஏனெனில், சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிற பாண்டியன் நெடுஞ்செழியன் மனச்சாட்சியுள்ள மன்னனாக ஆட்சி செய்திருக்கிறான்.

அவன் செய்த பிழை நிரபராதியைக் குற்றவாளியாகக் கருதி மரண தண்டனை வழங்கியதுதான்.

நடைமுறையில் இப்பேருண்மையைக் கையாள வேண்டுமானால், அரசியல் துறையிலுள்ள அனைவருக்கும் இதனைப் பொருத்திப் பார்க்கவேண்டும்.

அந்தப் பொருத்தப்பாட்டைச் செய்து பார்த்தால், இந்திய அரசியலில் நமக்கு காந்தியடிகள் ஒருவர் மட்டும்தான் மிஞ்சுகிறார்.

அநேகமாக அனைத்து அரசியல்வாதிகளும் பல்வேறு அரசியல் பிழைகளை அனுதினமும் செய்பவர்களாகவே உள்ளனர். அவர்களிடத்தில் காணப்படும் மாபெரும் குறைபாடே அவர்களிடம் மனச்சாட்சி இல்லை என்பதுதான்.

அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றாகும் என்பதில் உள்ள இந்த "அறம்" எதைச் சுட்டுகிறது?

சிலப்பதிகாரம் சம்பந்தப்பட்ட அளவில், அது பாண்டிய மன்னனுடைய மனச்சாட்சியைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

தனக்குத் தெரியாமல் தவறு செய்துவிட்ட மன்னன் அவன். தவறு செய்ததைத் தெரிந்து கொண்ட பிறகு, தனக்குத்தானே தண்டனையும் கொடுத்துக் கொள்கிறான்.

பெரிதாக இளங்கோவடிகளால் போற்றப்படுகிற இந்த முப்பெரும் உண்மைகள் சிலப்பதிகாரச் செவ்வகத்திற்குள் மட்டுமே செயல்பட்டவையே தவிர, அதைத்தாண்டி வந்து வெளியிலும் செயல்படுகிறதா என்று எழுப்பப்படும் கேள்வி சிலப்பதிகாரத்துக்குக் கேடு செய்துவிடாது.

மனச்சாட்சி மக்களிடம் செயல்படாது போய்விட்டதென்றால், அதனால் ஏற்படும் தாக்கம் கொண்டு வரும் இழிவு இளங்கோவடிகளுக்கு அல்ல. இங்குள்ள சக மனிதர் அனைவருக்கும்தான்.

காவல்துறை கண்காணிப்பதனால்தான் இவன் ஒழுங்காக இருக்கிறானே தவிர, சந்தர்ப்பம் கிடைத்தால் இவனும் சறுக்கி விழுந்து விடுவான் என்பது மனச்சாட்சியின் மகத்துவத்துக்குச் செய்யப்படும் மாபெரும் அவமானமாகும்.

ஆகவே, பயன்பாட்டுப் பார்வையில் பரிசீலித்தால், சிலப்பதிகாரம் பேசுகிற முதல் பேருண்மை செப்பனிடவே முடியாத அளவிற்குச் சேதத்திற்கு உள்ளாகிறது.

'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்ற இரண்டாவது பேருண்மையும் இதுபோலவே சிந்திக்க வைக்கிறது.

சிலப்பதிகாரத்தில் நாம் சந்திக்கிற பாத்திரங்களில் கண்ணகி ஒருத்தி மட்டும்தான் கற்புள்ளவளா? பிரபலமில்லாத பாத்திரங்களாகிய தேவந்தி என்ன கற்பு நெறி இல்லாதவளா? வயந்தமாலைக்குக் கற்பு இல்லையா?

இடைச்சேரியிலே கண்ணகி தங்கியிருந்த மாதுரி குடும்பத்து மகளிர்களுக்குக் கற்பு இல்லையா? அவ்வளவு ஏன்? கோவலனின் கொலைக்குக் காரணமான பொற்கொல்லனின் மனைவிகூட இந்தக் கற்புநெறிப் பட்டியலில் இடம்பெறத்தக்கவள்தானே !

சிலப்பதிகாரத்தில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மகளிரையும் கற்புள்ளவர்களாகக் கருதுவதுதானே நயத்தக்க நாகரிகம்.

கண்ணகியுடைய கற்புக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவே இல்லை. கணவன் இருந்தும் அவனை இழந்தவளாகிவிட்ட, இளம் பெண் கண்ணகி பட்ட துயரம் கவலைக்குரியதே தவிர, கண்ணகியின் கற்புக்கும் அத்துயரத்துக்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்க வேண்டியுள்ளது.

உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல் என்ற வரியைப் படித்துவிட்டு, சராசரிகளைப்போல் அல்லாமல் மகாகவி பாரதி வித்தியாசமாகச் சிந்தித்திருக்கிறார்.

அந்தச் சிந்தனை இளங்கோவடிகளின் மீது செய்யப்பட்ட விமர்சனமாகக்கூட இருக்கலாம்.

கற்புடைய பெண்டிரை உயர்ந்தவர்கள் பாராட்டுவார்கள் என்று இளங்கோவடிகள் சொல்லி வரும்போதே, பாரதி ஏதோ குறுக்கீடு செய்ததுபோல,

"கற்பு நிலை என்று பேசவந்தார் – இரு
கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்" என்கிறார்.

இளங்கோவடிகளே சிந்திக்காத "ஆண் கற்பு" பற்றிய பாரதியின் சிந்தனை தர்க்க ரீதியானது. ஆடவன் ஒருவன் கற்புள்ளவனாக இருந்தால்தான் பெண்ணும் கற்புள்ளவளாக வாழ முடியும். ஆடவன் சபலமானவனாக இருந்தால் அவனால் அல்லது அதனால் யாரோ ஒருத்தி கற்பிழந்து விடுகிறாளென்றுதானே பொருள்?

ஆண்கள் கற்பு இல்லாதவர்களாக நீடிக்கும் வரை, பெண்கள் கற்புள்ளவர்களாக இருப்பது சாத்தியமாகாது என்பது ஒரு தர்க்க ரீதியான முடிவாகும்.

இளங்கோவடிகள் காட்டும் கற்புநெறி கண்ணகிக்கு மட்டுமே எனக் குறுக்கிவிடுவதா? அல்லது சமுதாயம் முழுவதற்குமே விரிவாக்குவதா எனக் கேட்க வேண்டியிருக்கிறது.

"ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது மூன்றாவது பேருண்மை. முந்தைய ஜென்மத்தில் பாவங்கள் செய்திருப்பானேயானால், அந்தப் பாவங்கள் அந்த வினைக்கு

உரியவனைச் சென்று பழி வாங்கியே தீரும் என்பதே வினைக்கோட்பாடு.

இந்தப் பேருண்மையை நமது நடைமுறை வாழ்க்கையில் எப்படி உணர்வது?

உணர்ந்தால்தானே, அது ஊட்டுகிற அச்சத்தால் மனிதர்கள் தவறு செய்யாமல் தடுக்கப்படுவார்கள்.

கிடைக்கிற புள்ளி விவரத் தகவல்களின்படி பார்த்தால், கொடூரக் குற்றங்களுக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப் படுவதனாலேயே சமூகத்தில் குற்றங்கள் குறையவில்லை என்கிறார்கள்.

அதனால், தூக்குத் தண்டனையை 56 நாடுகள் ரத்து செய்துவிட்டன. சில நாடுகளில்தான் தூக்குத் தண்டனை இருக்கிறது.

இளங்கோவடிகளின் மூன்றாவது பேருண்மையில் இருண்டு கிடக்கும் முக்கியமான அம்சம் ஊழ் என்றால் என்ன என்பதுதான்.

அந்த ஊழ் ஏதோ தானியங்கி ஏவுகணை போலப் புறப்பட்டுப் போய் தவறு செய்பவனைத் தண்டித்துவிடும் என்று மக்கள் அதற்கு அஞ்சுகிறார்களா?

ஊழ் பற்றி விமர்சித்தால் சிக்கல் மேலும் அதிகமாகிறது. ஏனெனில் 700 கோடி உலக மக்களில் 100 கோடி கிறித்தவர்களுக்கு ஊழ் மீது நம்பிக்கை இல்லை. 120 கோடி இஸ்லாமியர்களுக்கும் ஊழ் பற்றித் தெரியாது. மறுபிறவியை மறுப்பவர்கள் அவர்கள். மேலும் 120 கோடி பௌத்தர்களுக்கும் இதைப் பற்றிய சிந்தனையில்லை.

இதேபோல்தான் சீக்கியர்களும், பார்சிகளும், இஸ்ரேலியர்களும் இருக்கிறார்கள்.

ஊழ் என்பது சமண சமயக் கோட்பாடாக இருந்து சைவத்திலும், வைணவத்திலும் அது பிரவேசித்துள்ளது.

ஊழ் பற்றித் தெரிந்தோ, தெரியாமலேயோ இருக்கிற இந்துக்களுக்கு இது பற்றிய புரிதல் போதுமானதாக இல்லை. அதனால், இளங்கோவடிகளின் மூன்றாவது பேருண்மையான ஊழ் என்பதை உலக மக்கள் அனைவரும் உபயோகிப்பதாகத் தெரியவில்லை.

ஊழ் என்பதை மனித குலம் முழுவதுமே உண்மையென நம்பி, விநாடிப் பொழுதுகூட அதற்கு விடுமுறை கொடுக்காமல் கடைப்பிடிக்குமானால், நமக்குக் காவல்துறை தேவையில்லை. நீதிமன்றம் அவசியமில்லை. கைரேகை நிபுணர்களோ, சி.ஐ.டிகளோ எதற்காக?

ஊழ் என்பதே இல்லையென்று சாதிப்பதால் ஏற்படும் நஷ்டம் இளங்கோவடிகளுக்கு அல்ல, நமக்குத்தான்.

இம்மூன்று பேருண்மைகளையும் நவீன சிந்தனைத் தராசில் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் மூன்றுமே எடையிழந்து போகின்றன.

ஆனாலும் சிலப்பதிகாரக் கதை அமைப்பிலும் அழகழகான வருணனைகளிலும், பாத்திரப் படைப்புகளிலும், பின்புலத்துச் சொல்லோவியத்திலும் இயற்கைச் சித்தரிப்புகளிலும் தமிழ் அமுதம் தளும்பி வழிகிறது.

“திங்களைப் போற்றுதும்” என்ற சிலப்பதிகார முதல் வரியே “உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்” என்ற சேக்கிழாரின் செந்தமிழ் வரியை விஞ்சுகிறது.

சிலப்பதிகாரத்தில் காணப்படும் “நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்”, “போற்றா ஒழுக்கம் புரிந்தீர்”, “கரும்பே தேனே”, “மாலை வாராராயினும் காலை காண்குவம்”, “நடந்தாய் வாழி காவேரி” முதலிய சிரஞ்சீவித்துவமான வரிகள் வாசகர் மனதை வசீகரித்து விடுகின்றன. அதைத்தான் பாரதி நெஞ்சை அள்ளும் வரிகள் என்கிறார்.

இவற்றை எல்லாம் தன்மயப்படுத்திக்கொண்டு பூரித்த காரணத்தால்தான் மகாகவி பாரதி “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு” என்றார்.

சிலம்பு என்பது மகளிரின் கால்களுக்குரிய அணிகலன்தான். பாரதியோ அதனைத் தமிழ்த்தாயின் கழுத்தில் “மணி ஆரமாகவே” சூட்டுகிறார்.

இது மட்டுமல்ல, சிலப்பதிகாரம் என்ற ஒட்டுமொத்தப் படைப்பை மணியாரம் என்று போற்றிய பாரதி அதோடு நிற்கவில்லை.

“யாமறிந்த புலவரிலே, கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை” என்று கூறி இளங்கோவடிகளுக்குப் புகழாரமே சூட்டியுள்ளார்.

இவ்வாறு படைப்புக்கும், படைப்பாளிக்கும் பெருமை சேர்த்த பாரதி அந்தப் படைப்பு பிரகடனப்படுத்தியுள்ள அம்முப்பெரும் உண்மைகளைப் பற்றி எதுவும் கூறாமல் மௌனமாகி விட்டாரே ஏன்?

மௌனமாகியது மட்டுமல்ல, இளங்கோவடிகளின் கொள்கைப் பிரகடனத்திற்கு எதிராக ஆடவரின் கற்பைப் பற்றி அழுத்தமாகவே பேசும் வகையில் “இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்” என்கிறார்.

ஊழ் பற்றி அவர் எந்தக் கவிதையிலும் தமது உரத்த சிந்தனையை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

அரசியல் பற்றியும் அறம் எனும் கூற்றுவன் பற்றியும் பாரதியின் பார்வை இளங்கோவடிகளை ஒத்துக்கொள்கிற பார்வையாக இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் மனிதர்களில் வஞ்சனை செய்பவர்களாக உள்ளவர்களை அவர் இனம் காட்டியிருக்கிறார்.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்பதை ஊழ் வலிக்கு எதிரான ஒரு புரட்சி கோஷமாகவே கருதலாம்.

இவ்வாறு இளங்கோவடிகளை பாரதி இதயபூர்வமாக ஒப்புக்கொண்டாலும் அவரை அங்குலம் அங்குலமாகக் கடந்து வெளிவந்து இளங்கோவடிகள் பேசாமல் விட்ட மனித குலத்திற்கான நலத்தைப் பேசுவதற்காகவே பாடுகிறார்.

மடல் மாண்பு

திரு. செ. நடராசன்

சிலப்பதிகாரக் காப்பியத்தில் எத்தனையோ சிறப்புக்கள் இருந்தாலும் வேறெந்தக் காப்பியத்திலும் காணக் கிடைக்காத தனிச் சிறப்புச் செய்திகளும் சில கிடைக்கின்றன. அவற்றுள்ளும் நனி சிறந்த செய்தி மாதவியின் இரண்டு காதற் கடிதங்கள். வேனிற் காதையில் முதல் கடிதத்தையும், புறஞ்சேரி இறுத்த காதையில் இரண்டாவது கடிதத்தையும் இளங்கோவடிகள் சிறப்பாகப் பதிந்து வைத்துள்ளார். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் நெஞ்சங்களை நெகிழ வைக்கும் திறத்தை நமக்கு அளித்து, மாதவி கோவலன் ஆகியவர்களின் நெஞ்சங்களை மாற்ற வைத்த அருஞ்செயலை அந்தப் பாத்திரங்களுக்கு அளித்த விந்தை நிகழ்வு படித்துப் படித்து சிந்தித்துச் சிந்தித்து மகிழ்வடையும் பேற்றையும் நமக்கு இளங்கோவடிகள் வைத்தது பெறற்கரிய பெரும்பேராகும்.

மண்ணுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்இள வேனில் இளவரசாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூவாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்று ; இஃது அறிந்தீமின்.

இந்தக் கடிதத்தை உருவாக்கிய அழகு இருக்கிறதே அதுவே ஒரு கலையாகும். ஆடல், பாடல், அழகு என்ற மூன்று கலைகளையும் கசடறக் கற்றவளாதலால், கலையழகு தோன்றும் வகையில்,

“சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை,
வெண்பூமல்லிகை, வேரொடு மிடைந்த
அம்செங்கழுநீர், ஆய்இதழ்க் கத்திகை
எதிர்பூந் தாழைமுடங்கல் வெண்தோட்டு
விரைமலர் வாளியின் வியல்நலம் ஆண்ட
ஒருதனிச் செங்கோல் ஒரு மகன் ஆணையின்,
ஒரு முகம் அன்றி, உலகுதொழுது இறைஞ்சும்
திருமுகம் போக்கும் செவ்வியள் ஆகி
அலத்தகக் கொழுஞ்சேறு அளைஇ, அயலது
பித்திகைக் கொழுமுகை ஆணி கைக்கொண்டு,
விளையா மழலையின் விரித்து உரை எழுதி”

என்ற கலைமணம் கொண்ட மலர்மண மாலையில் கடிதம் அனுப்பினாள் மாதவி. வண்ணமும், மணமும் நிறைந்த மலர் மாலையில் உள்ள முற்றிய வெள்ளைத் தாழை மடலில் அதே மாலையில் பிணைக்கப்பட்டிருந்த முற்றிய கூரிய பித்திகை அரும்பில், செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து, மழலைச் சொற்களைச் சொல்லிப் பார்த்து, ஓவியம் போன்ற திருமுகத்தை எழுதினாள். அத்திருமுகக் கடிதத்திற்கு மலர்மாலை ஆகிய உரையைப் பிணைத்து, அனுப்பினாள் ; காரணம் உரையைப் பிரித்த உடனேயே ஓலைத்திருமுகமும், மாதவியின் காதல் திருமுகமும் தெரிவதற்காக.

அழியாத வண்ணத்தால் தீட்டிய மணித்தோட்டுத் திருமுகத்தை, மாதவியிடம் சினம் கொண்டு கானல் வரியில் அவளை விட்டுப் பிரிந்ததால் அவனைத் தன்பால் மீட்டெடுக்கும் முயற்சியால் வேனிற் காதையில், தற்காலத்தில் ''கொரியர் சர்வீஸ்'' என்ற முறை உள்ளது போன்ற ''தூதஞ்சல்'' முறையில் மாதவி கோவலனுக்கு வசந்தமாலை மூலம் அனுப்புகிறாள். கோவலன் அதை வாங்க மறுத்துவிட்டாலும் அந்த முடங்கலின் சிறப்பை நாம் மறந்து விட இயலாது. கடிதத்தின் சொற்களும் அவற்றின் பொருள் அடக்கமும் தூது விட்டவளாகிய மாதவிக்கும், தூதுச் செய்தியைப் பெறுபவனாகிய கோவலனுக்கும் மட்டுமே புரிந்து கொள்ளும் கலைத்தன்மையில் எழுதப்பட்ட கமுக்கமான கடிதமாகும். இன்பச்சுவை நிறைந்திருந்தாலும் வேறெவருக்கும் சுவைக்க இயலாத வண்ணம், எண்ணெண்கலைகளிலும் கரை கண்ட மாதவியின் கலைநுணுக்கத்தை நம்மால் உணர முடிகிறது.

பனிரெண்டு ஆண்டுகள் கோவலனுடன் விடுதலறியா விருப்புடன், ஊடலும் கூடலும் அவனுக்கு அளித்த மாதவியால் தடித்த சொற்களைப் போட முடியாமல், முதிராத மழலைச் சொற்களை மட்டுமே பெய்து எழுதியது சிறப்பினும் சிறப்பானது ; அதனால்தான் பாரதி பாடியது போல் சிலம்பு நமது நெஞ்சை அள்ளுகிறது.

இந்த முடங்கல் விடுக்கப்பட்ட சூழல், கோவலன் புகாரை விட்டு நீங்காத நிலையில், உள்ளூரிலேயே வம்பப் பரத்தரும் வறுமொழியாளரும், திரிதருமருகில் இருந்ததால் வசந்தமாலை ஆகிய இளம்பெண் தூதாக அனுப்பப்பட்டாள். ஆனால் புறஞ்சேரியிறுத்த காதையில் மாதவி விடுத்த தூதஞ்சல் திருமுகம் முற்றிலும் வேறுபட்ட, மாறுபட்ட சூழலில் அனுப்பப்பட்டது என்பதைப் பார்ப்பதற்கு முன் ஒப்புமைச் சிறப்புக்காக ஒரு செய்தியை இங்கு சொல்ல வேண்டுவது அவசியமாகிறது.

வடமொழிக்கவி காளிதாசன் இயற்றிய சாகுந்தலம் காப்பியத்தில் சகுந்தலை துஷ்யந்தனுக்கு விடுத்த தூதஞ்சலை, மாதவியின் தூதஞ்சலோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவை இரண்டுக்கும் இடையில் மடுவுக்கும் மலைக்குமான வேறுபாட்டைக் காணலாம்.

சகுந்தலை மடல் சூழலும் தன்மையும்	மாதவி மடல் பருவமும் சிறப்பும்
முனிவனால் வளர்க்கப்பட்ட பேதைப் பெண்	பரத்தையர் குலத்தாய் சித்திராபதியால் கலையரசியாக்கப்பட்ட பருவ மங்கை
காட்டிலேயே மற்றச் சிறுமிகளுடன் விளையாடியவள் ; வெளியுலக அறிவு இல்லாத விளையாட்டுப் பெண்	புகார் நகரில் பல கலைஞர்களுடன் பழகி பட்டறிவு பெற்ற அறிவாளி
குறுகிய காலத்தில் களவு மணத்தால் தாயானவள்	பனிரண்டு ஆண்டுகள் கோவலனுடன் கலை வாழ்வு வாழ்ந்த முதிர்ச்சியால் ஊரறிய மணிமேகலையின் தாயானவள்
தூது சென்றது ஐந்தறிவு கூட இல்லாத அன்னப்பறவை ; புரியாது, பேசாது, வழியும் வகையும், தலைவனையும் அறியாதது	பருவப்பெண் வசந்தமாலை, மாதவியுடனும் கோவலனுடனும் பல்லாண்டு பழகியவள், அறிவுடையவள், புகாரின் இடங்களை நன்கு அறிந்தவள்.
தாமரை இலையில், நகத்தால் அழுத்தி எழுதப்பட்டது. மணமற்ற, காய்ந்தால் நொறுங்கிவிடும் தன்மையிலான இலை.	முதிர்ந்தும், காயாமலும், பதமானதுமான வெண்மையான தாழை மடலில் பித்திகை மலர், செம்பஞ்சுக்குழம்பு போன்ற முற்றிலும் மணப் பொருட்களால் எழுதப்பட்டது.
வெளிப்படையான, வெகுளித்தனமான சொற்களால் எழுதப்பட்டது. பார்ப்பவர் எவராலும் தெரிந்துகொள்ளப்படும் தன்மையது.	கமுக்கமான குறிப்புச் சொற்களால் வரையப்பட்டது ; சம்மந்தப்பட்டவர்களால் மட்டுமே புரிந்துகொள்ளும் தன்மையது.

இனி மாதவி கோவலனுக்கு எழுதிய இரண்டாவது மடலைப் பார்ப்போம். இந்த இரண்டாவது மடல் இசைமொழித் திருமுகம். முதல் மடல் விளையாமழலைத் திருமுகமானால், இரண்டாம் மடல் முதிர்கனிச் சுவைத் தேறல் ஆகும். இதை மாதவி விடுத்த சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டது. மாதவியைப் பிரிந்த கோவலன் வேறு பரத்தையிடம் செல்லாமல் பத்தினி கண்ணகியிடம் சென்றதோடல்லாமல் ஊரைவிட்டே யாரும் காணாமல் வெளியேறிய நிலையை நினைந்து, அவனுக்கு அழைப்பு விடாமல் அவன் துயருக்கு வருந்தி பத்தினியிடம் சேர்ந்தவனை

மீண்டும் பிரித்தெடுக்க மாதவி விரும்பவில்லை. எனவே இந்தக் கடிதம் காதல் கடிதமல்ல ; கடமைக் கடிதம் – பழைய காதலனை தந்தையின் நிலையில் வைத்து எழுதப்பட்ட கடிதம். உடனுரை காலத்து உரைத்த நெய் வாசம் மணக்கும் கூந்தல் மண் முத்திரை உணர்ந்து அம்முடங்கலை கைவிட மனமில்லாமல் அதனைப் பிரித்துப் படித்தான்.

"அடிகள் முன்னர் யான் அடிவீழ்ந்தேன்
வடியாக்கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியும் குலப்பிறப்பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது
கையறுநெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப்புரையோய் போற்றி" என்று

எடுத்த எடுப்பிலேயே "அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்" எனப் பணிவினைச் சொல்கிறாள். ஐம்புலன்களையும் வென்று விட்டான் கோவலன் என்று மாதவி உணர்ந்து விட்டாள். ஆதலால், உலகக் காட்சிகளெல்லாம் பொய் என்று எண்ணிவிட்ட ஞானியே என்ற பொருள்பட "புரையோய் போற்றி" என்று அடியவள் ஒருவள், ஞானாசிரியர் ஒருவருக்கு போற்றுதல் செய்வது போல் எழுதுகிறாள். தன்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டபோதும் "மலர்க்கையின் எழுதிக் கண்மணியனையார்க்குக் காட்டுக" என்று சொல்லி ; இந்த மடலின் தூதுவனான கோசிகமாணியிடம் கொடுக்கிறாள் என்றால், மாதவி கோவலனிடம் எத்தனை அன்பு வைத்திருந்தாள் – வெறும் அன்பல்ல – பேரன்பு என்பதும், அத்தனை அன்பும் வழிபாடாய்ப் போன மனமாற்றத்தையும் இந்தக் கடிதத்தின் வாயிலாகத் தெளிவு படுத்திவிட்டாள்.

இரண்டாவது மடலின் தூதுவனான கோசிகன் (மாதவி, கோவலனைத் தவிர வேறு எந்த ஆடவனுடனும் தொடர்பு அற்றவளாக இருந்ததால்) தானும் "மாணியாகவே" (பிரம்மச்சாரி) யாக இருந்து அவளுக்கு உறுதுணையாக இருந்தான். தூது செல்பவனும் கோசிகனைப் போல் ஒழுக்கசீலனாகவும், தூதுச்செய்தியை சிதைவில்லாமலும், செப்பமாகவும் கூறும் திறம் படைத்தவனாகவும் இருக்கவேண்டும். தன்னலமற்ற துறவி போல் இருக்கவேண்டும்.

"அன்பு, அறம், ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று" என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவன் கோசிகன். புறஞ்சேரி இறுத்த காதையில் கோவலனைக் கண்ட உடனேயே, அடையாளம் தெரிந்து கொள்ள இயலாத அளவில் கோவலன் உடல் தளர்ச்சியுற்றிருந்ததால், ஐயத்தைத் தெளிவு செய்து கொள்ள, அறிவார்ந்த ஒரு செயலால், வாடிய ஒரு மாதவிக் கொடியிடம் "கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய, மாமலர் நெடுங்கண் மாதவிபோன்று இவ்வருந்திறல் வேனிற்கு அலர்களைந்து, உடனே வருந்தினை போலும் நீ மாதவி என்று ஓர் பாசிலைக் குருகின் பந்தரில் பொருந்தி, கோசிகன் கூறக் கேட்டதனால்" ஈர்ப்புண்ட கோவலன் கோசிகனை நெருங்குகிறான். அவன் கோவலன் தான் என்று தெளிவான பின்னர்தான், தான் தூதுவந்த செய்தியைச் சொல்லுகிறான் கோசிகன்.

“மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்” “ஆடல் மகளே ஆதலின் பாடு பெற்றனள்” “சலம்புணர் கொள்கைச் சலதி” என்றெல்லாம் பழிதூற்றித் தீர்த்த கோவலனை, இந்தக் கடிதத்தைப் படித்த பின்னர் “தன் தீதிலள்” என உணர வைத்து “என் தீது” என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க வைத்த சிறப்புப் பெற்றமையால் இது அணித்தோட்டுத் திருமுகமான இசைமொழித் திருமுகமாயிற்று. தெய்வத்தின் முன்பும் மன்னரின் முன்பும் தான் திருமுகம் சமர்ப்பிக்கப்படும். ஆனால் மாதவி இத்திருமுகத்தைக் கோவலனுக்கு சமர்ப்பித்த செயலால் இன்பச்சுவை ததும்பிய முதல் கடிதத்திலிருந்து வெறும் சொல் மாற்றத்தினாலேயே மனமாற்றத்தை செய்துவிட்ட அருந்திறனாளி என்பதை நிறுவிவிட்டாள்.

காதலே வாழ்வு என்று வாழ்ந்த கலைஞனை, ஞானியாக்கியதோடல்லாமல், இந்த இரண்டு மடல்களால் புத்தமதத்தைத் தழுவுவதற்குத் தன்னைத் தகுதியும் படுத்திக் கொண்டாள். பனிரெண்டு ஆண்டுகள் விடுதலறியா விருப்பினனோடு வாழ்ந்த மாதவி, தன்னையும் தனது காதலனையும் சீலத்தன்மையராக்கிய கடிதங்கள், அவனுடைய மனத்தை மட்டும் மாற்றவில்லை ; தன்னுடையவும், தன் மகள் மணிமேகலையுடையவும் என இருவருடைய வாழ்க்கையையே மாற்றிவிட்டன.

மாதவியின் இந்த இரண்டாவது கடிதம் கோவலனின் தந்தைக்கு அனுப்புவதற்குரிய தன்மையில் அமைந்திருந்ததால், கோவலன் இதில் எந்த ஒரு அடித்தலோ, திருத்தலோ, புகுத்தலோ, நீக்கலோ செய்யாமல் அப்படியே தன் தந்தைக்கு அனுப்புகிறான்.

ஒரு காதலி தனது பழைய காதலனுக்கு அனுப்பும் ஒரு கடிதத்தை, அக்காதலன் அப்படியே, அதே தூதுவன் மூலமே தனது தந்தைக்கு அனுப்பிய நிகழ்வு உலக இலக்கியங்கள் வேறெதிலும் காண முடியாத செய்தியென்றால், மாதவியின் மாண்பு எத்தகையது என்று நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தத் திருமுகத்தில் மாதவி செருகியுள்ள ஒரு சிறப்புச் சொற்றொடர் “குலப் பிறப்பாட்டியோடு” என்பது. எத்துணை அவலக் குறிப்பை இத்தொடரினால் மாதவி உணர்த்துகிறாள்? தான் குலப்பிறப்பாட்டியாய் இல்லாததால்தான் கோவலன் தன்னை புகாரை விட்டு அழைத்துச் செல்லவில்லை என்ற புண்படும் செய்தியை எவ்வளவு அமைதியாக விளங்க வைத்துவிட்டாள் !

மனைவியின் பல கடமைகளில் அவள் ஆசானாக இருந்து கணவனுக்குப் பணி செய்யவேண்டும் என்பதும் ஒன்றாகும். மாதவியின் ஓலை, கோவலன் தன் பெற்றோருக்குக் கடமை செய்யத் தவறிய கருத்தை எவ்வளவு நாகரிகமாக, உள்ளத்தைப் புண்படுத்தாத சொற்களால் சுட்டிக் காட்டுகிறாள்.

வாழ்க மாதவி மாண்பு, வளர்க் மடல் மரபு.

உரைத்தது மறைத்திறம்

முனைவர் கோ. புவனேஸ்வரி

சைவசமயம் பெருஞ்சமய மரபில் தோன்றிய இளங்கோ அடிகள் தன் அளவற்ற கருணையால் அருளித்தந்தது சீர்மிகு சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியம். நிலைபெற்ற பல நீதிகளை என்றென்றும் அவை நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு சேர இளவல் இளங்கோவடிகள் மூன்று காண்டங்களிலும் அவற்றுள் அடங்கிய பல காதைகளிலும் கூறிச் செல்கிறார்.

இளங்கோவடிகளை சமண சமயம் சார்ந்த பெருந்தகையே எனச் சிற்சிலச் சான்றோர் மொழிவர். அதற்கு அவர்கள் கூறக் காரணம் பதிகத்தில் இடம் பெற்றிருக்கின்ற 57 வது அடியான "ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்" என்ற அடியே அடிப்படைக் காரணம். இவ்வடிக்குப் பொருள்கூற விழைந்த சான்றோர் பெருமக்கள் சமண சமயத்தில்தான் ஊழ்வினை தானே வந்து உயிர்களைப் பொருந்தும் என்ற கோட்பாடு உள்ளது. வினை சடமாதலின் உயிர்களை வந்து பொருந்துவதற்கு உரிய நியதிகள் இல்லை என்றும் கூறுவர்.

ஆனால் ஊழ்வினை தெய்வத்தின் அருளால் ஊட்டப்படும் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். சைவசமயம் கண்ட உண்மை இது. ஏனென்றால் நம்முடைய அகச் சமயங்களுள் ஒன்று சைவம். எனவே ஆதி சமயத்தின் கூற்று பொய்யன்று மெய்யே.

சமண சமயத்தில் தெய்வக் கோட்பாடு இல்லை என்பர் சிலர். அவர்களுக்கு அக்கோட்பாட்டில் ஒரு தெளிவின்மை குறைந்து இருப்பதால்தான் சான்றோர்கள் இவ்வாறு சொல்ல நேர்ந்தது.

சமணர்களுக்குத் தெய்வம் பற்றிய உரையாடல் வரும்போது "உண்டாம் ; இல்லையாம்; உண்டும் இல்லையுமாம் ; சொல்லொண்ணாததாம் ; உண்டுமாம் சொல்லொண்ணாததுமாம் ; இல்லையுமாம் சொல்லொண்ணாததுமாம் ; உண்டும் இல்லையுமாம் சொல்லொண்ணாததுமாம்; என 7 வகையாகக் கூறுவர். இதற்கு சப்த பங்கி எனப் பெயர்" என்று லஷ்மணன் 'இந்தியத் தத்துவ ஞானம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள கருத்து நினைவு கூறத்தக்கது.

சித்திரச் சிலப்பதிகாரத்திலே முப்பெரும் அரிய மூன்று உண்மைகளைப் போற்றிப் பாராட்டியுரைக்க வந்த இளங்கோவடிகள் பல்வேறு தெய்வங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். உண்மையான தெய்வத்தை நீங்களே தெரிந்து, தெளிந்து உணர்ந்து கொள்ளுங்கள் என்கிறார்.

இளங்கோவடிகள் சமணராக இருந்திருந்தால் வரந்தரு காதையின் நிறைவுப்

பகுதியில் 'தெய்வம் தெளிமின்' தெளிந்தோர் பேணுமின் என உறுதிபடக் கூறியிருக்க மாட்டார்.

எது தெய்வம் என்று அவரவர் உணர்ந்து கொள்ளட்டும் அல்லாவிடில் தெளிந்து உணர்ந்து அறிவு பெற்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று தெளிவுபடப் பேசுகிறார்.

மகாகவி பாரதியார் கூட கம்ப நாட்டாழ்வாரைப் பற்றிக் குறிப்பிடும்போது "எல்லை என்று ஒன்று இலாத பரம்பொருள் அதனைக் கம்பன் தன் குறிகளால் காட்டிட முயலும் முயற்ச்சியைக் கருதியும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமண சமயத்தைச் சார்ந்த கோவலன் திருமால் கோட்டத்தை வலப்புறமாகச் சுற்றிச் சென்றான் எனக் குறிப்பிடுகின்றார் அடிகள்.

"அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ் செயாக் கழிந்து" (நாடு காண் காதை)

என்கிறார்.

மேலும் நீருண்ணும் வேட்கையினால் கோவலன் ஒரு பொய்கையருகே நின்றபொழுது வயந்தமாலையின் வடிவில் மயக்கும் தெய்வம் ஒன்று தோன்றியது மறையவன் கூறிய செய்தி நினைவிற்கு வர மாயத்தை விடுவிக்கும் மந்திரத்தால் இவளைப் பற்றி அறிவேன் என்று எண்ணிக் கோவலன் தன் நாவினாற் கூறிய மந்திரம் "பாய்ந்து செல்லும் கலையினை வாகனமாக உடைய கொற்றவையின் மந்திரமாதலால் யான் வன சாரணி நினக்கு மயக்கம் விளைவித்தேன்" எனக்கூறி அத்தெய்வம் மறைந்துவிட்டது.

"வஞ்சம் பெயர்க்கும் மந்திரத்தால் இவ்
அஞ்சில் ஓதியை அறிகு வென்யான் எனக் –
கோவலன் நாவிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திரம் ஆதலின்
வன – சாரிணியான் ; மயக்கஞ் செய்தேன் (காடு காண் காதை)

இவ்வாறு கோவலன் சமண சமயஞ் சார்ந்தவனாயினும் பிற சமயக் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டான் என்ற குறிப்பைத் தருகிறார் இளங்கோவடிகள்.

அடிகளுடைய இறையுணர்வுக்கு மற்றுமொரு சான்று சிவபிரானை "பிறவா யாக்கைப் பெரியோன்" எனவும் "உலகு பொதி உருவத்துயர்ந்தோன்" எனவும் கூறிச் செல்கிறார். சேரன் செங்குட்டுவனைப் பற்றிக் கூறும்போது

"நிலவுக் கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகு பொதி உருவத்துயர்ந்தோன் சேவடி

மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங் கொண்டு (கட்டுரைக்காதை)

என்ற அடிகளின் மூலம், நிலவுக்கதிரினை முடித்த நீண்ட பெரிய சடைமுடியும் உலகனைத்தும் ஒருங்கே தன் கைப்படுத்தும் உருவமும் உடைய உயர்ந்தோனாகிய சிவபெருமானின் செவ்வையான திருவடிகளை வெற்றி பொருந்திய வஞ்சி மாலையுடன் தன் சிரத்திலே சூடிக்கொண்டான் மன்னன். அவ்வாறு யாவருக்கும் வணங்காத தன் திருமுடியால் சிவன் சேவடிகளைத் தலைமேற்கொண்டு வணங்கி வலம் வந்தான் என்று குறிப்பிடுவதன் வாயிலாக சைவ மரபில் வந்த செங்குட்டுவனின் இளவல் சமணம் சார்ந்தவராக இருக்க முடியுமா? என எண்ணத் தோன்றுகிறது.

செங்குட்டுவனின் தந்தையும் இளங்கோ அடிகளின் தந்தையுமாகிய குடக்கோ நெஞ்சேரலாதன் என்பவன் சிறந்த சைவன் அவனுக்கும் சோழன் மகள் – மணக்கிள்ளி என்பாளுக்கும் இந்த சேர மன்னன் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் என்பது பதிற்றுப்பத்தின் 5–ம் பதிகத்தால் அறிய முடிகிறது. இத்தகைய சைவ மரபில் வந்த இளங்கோ அடிகள், சேரன் செங்குட்டுவன் போர் மேற்கொண்டு செல்லும்போது வஞ்சிநகரை விட்டு நீங்கும் முன்பு

" ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்த
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப்புயத்துத்
தாங்கினன் ஆகி.........." எனவும் இவ்வாறு இளங்கோ அடிகள் சுட்டுகிறார்.

இத்தனைச் செய்திகளை வரலாற்று அடிகள் சான்று பகரும்போது அடிகளை சமண சமய வட்டத்துக்குள் அடக்குவது அத்துணைப் பொருத்தமில்லை.

சிலப்பதிகாரம் எழுந்த நிலையில் சைவம், வைணவம், வைதீகம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் எல்லாம் ஒரு நிலையில் வைத்துப் போற்றப்பட்டன. இந்தத் தமிழ் மண்ணிற்கே உரிய அகச் சமயங்கள் சைவமும் வைணவமுமே. வைதீக பெருமக்களும் இரண்டு சமயங்களைச் சார்ந்தே இருந்தனர்.

இந்தக் கொள்கை, அடிகளின் ஆழ்மனதில் ஆழங்கால் கொண்டிருந்ததால் சைவ வைணவத்திற்குப் பொதுவாகிய வேதநெறி தழைத்தோங்க வேண்டும் என்ற கருத்தும் அவருள்ளத்தில் பதிந்து நின்றது.

தன்னுடைய காப்பியத்தில் சிவபெருமானுக்குச் சிறப்பிடம் கொடுக்கின்ற அடிகள் கட்டுரைக் காதையில் மதுராபதி தெய்வம் வாயிலாக உரைக்கின்றார்.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்

"...........காதில்
மறைநா ஓசை யல்லது யாவதும்
மணிநா ஓசை கேட்டதும் இவனே" என்று கூறுகிறார்.

இங்கு சமணப் பெருமக்களின் பஞ்ச பரமேட்டி மந்திரங்களையோ, பௌத்த சமயம் சார்ந்த மணி மந்திரங்களையோ கூறாது 'மறைநா ஓசை' என வெளிப்படையாகக் கூறுவதால் தமிழகத்தில் தமிழோடு மறையையும் உணர்ந்த பெருமக்கள் அதை இடையறாது ஓதிவந்தனர் என்பது பெறப்படும்.

பெரும் பாணாற்றுப் படையில் 297–301 அடி வரை மறைகாப்பாளர் இருந்தது பற்றிய செய்தி வருகிறது.

"செழுங்கன்று யாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியோடு ஞமலி துள்ளாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப்பாளர் உறை பதி......"

இந்த இலக்கிய வழியில் வாழையடி வாழையாக வந்தவர் இளங்கோவடிகள். அவர்க்கு முன்பு இருந்த இலக்கியங்கள் கூறிச் சென்றதையே சொல்லிச் செல்கின்றார்.

கட்டுரைக் காதையில் இளங்கோவடிகள் பராசரன் என்ற வைதிகனை அறிமுகப்படுத்துகின்றார். அவன் சேரநாடு சென்று மந்திர வன்மையால் உச்சரிக்கும் தன்மையில் தன்திறம் முழுதும் காட்டி சேரர்கோவிடமிருந்து பெரும் பொருளையும் அணிகலன்களையும் பரிசிலாகப் பெறுகிறான். நமது தொன்மையான இலக்கணம் இதனைப் 'பார்ப்பன வாகை' எனக் கூறும்.

பெரும் பரிசிலோடு பாண்டிய நாட்டைச் சேர்ந்த 'தங்கால்' எனற் ஊரில் போதி மர நிழலில் சிறிது ஓய்வெடுக்கும் பொருட்டு இளைப்பாறுகின்றான். அவ்விடத்திலே மறையோதும் மரபில் வந்த சின்னஞ்சிறு குழந்தைகள் அம்மர நிழலிலே விளையாடுகின்றனர். அவர்களை அழைத்து வேதமந்திரங்களைப் பிழைபடாமல் கூறுமாறு கேட்கிறான்.

அங்கிருந்த ஆலமர்ச் செல்வனின் பெயர்கொண்ட தட்சிணாமூர்த்தி என்ற சிறுவன் பராசரன் என்ற வைதிகனோடு சேர்ந்து அவனுடைய மிக உயர்ந்த உச்சரிப்போடு வேத

மந்திரங்களைத் தானும் ஓதுகிறான். பெருமகிழ்வெய்திய பராசரன் முத்துமயமான முப்புரிநூல், பல்வேறு அணிகலன்கள் கடகம் தோடு போன்ற கையணி காதணிகள் ஆகியவற்றை அச்சிறுவனுக்குப் பரிசிலாக நல்கி வாழ்த்தி விடை பெறுகிறான்.

இளங்கோவடிகளுடைய உள்ளம், மறையோதும் வழக்கம் குழந்தை நாவிலிருந்தே உருக்கொள்ளவேண்டும் என்ற கருதுகோளில் பதிந்திருந்தமையால் இக்காட்சியை இங்கு நம்முன் காட்டுகிறார்.

'வேதம் நிறைந்த தமிழ்நாடு' எனற மகாகவி பாரதியாரின் வாக்கு, அடிகள் வாழ்ந்த கிபி 2–ம் நூற்றாண்டில் மிக்க மலர்ச்சியுற்று இருந்தது. இந்த வேத ஒலியினால் மக்களுக்கு ஒரு நல்ல அதிர்வலைகள் ஏற்படக்கூடிய சூழலும் இருந்தது. நற்சொற்களையே கேட்டதால் அவர்கள் உள்ளங்களும் உயர்ந்திருந்தன.

வள்ளல் பெருமான் "வேலநின் புகழ் கேட்ட வித்தகர் திருச் செவி விழாச் சுபம் கேட்கும் செவி" என்றார்.

தமிழ் சான்றோர்கள் ஒவ்வொருவருடைய உள்ளமும் இந்த உயர்ந்த சிந்தனையில் என்றும் உறைந்திருந்தன. இந்நோக்கில் காணும்போதுதான் நம் தமிழ் இலக்கியங்கள் உயர்ந்தவற்றை மிகவும் வலியுறுத்தின.

தாயுமானவரும் "கொல்லா விரதம் பூண்டோரே நல்லோர்" எனக் கூறி மற்று அல்லாதோர் யாரோ அறியேன் பராபரமே" என்று நிறைவு செய்துவிட்டார்.

இளங்கோவடிகள் நாடும் மக்களும் நலம் பெறவேண்டும் என விரும்பிய பெருந்தகை. தட்சிணாமூர்த்தி என்ற சிறுவன் மன்னன் பொருட்களை இவன் எடுத்தான் ; அரசுக்குரிய பொருட்கள் அரசுக் கருவூலத்தில் தான் இருக்கவேண்டும் என்ற கோட்பாடு அச்சிறுவனது தந்தையைக் காவலில் வைத்தது. வார்த்திகன் என்பவனுடைய வாழ்க்கைத்துணை கார்த்திகை என்பவள் அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்றாள். அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படையாதலால் "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்ற ஞானசம்பந்தர் வாழ்த்தி வணங்கி ஓதிய இறைவனின் இடப்பாகத்திலிருக்கும் செல்வியாகிய அம்பிகையின் (கொற்றங்) கோயில் கதவங்கள் அடைத்துக் கொண்டன. நல்வாழ்க்கைக்குத்தான் இயற்கை துணை செய்யுமே தவிர அல்லாத வாழ்க்கைக்கு அது துணைபுரியாது. இறைமை என்பது எளியோர் மாட்டே என்ற கருத்தில்தான் மையறு சிறப்பின் ஐயை கோயில் செய்வினை கதவம் அடைத்தாக இளங்கோ அடிகள் கூறுகிறார். இதை அவர் கூறக் காரணம் தவறுகள் அவ்வப்போது களையப்படவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோள்.

திருவள்ளுவர் 'இளைதாக முள்மரம் கொள்க' என்றார். சிலப்பதிகாரம் சீரிய நீதிமொழிகளின் அதிகாரம். சான்றாண்மைக் கருத்துக்களிலிருந்து சற்றும் தவறாத மாபெரும்

காவியம். வைதிக வேத ஒலி நிலத்திற்கு நலம் செய்யும் என்பதில் அடிகளுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையை வெளிக் கொணரவே பராசரன் மறைத்திறம் உரைத்தனன் எனவும் இளங்குழந்தையாகிய தட்சிணாமூர்த்தியும் அத்திறம் உரைத்தது எனவும் கூறி முதுமையும் இளமையும் சேர்ந்து நற்சொற்களைக் கூறும்போது இடையில் உள்ள எல்லா உயிர்களும் அச்சொற்களைச் செவியில் ஏற்று சிந்தையில் பதிக்கவேண்டும் என்ற கருத்து உருவாக்கம் பெறுகிறது.

இங்ஙனம் கட்டுரைக் காதையின் இந்தப் பகுதி ஓர் அரிய நீதியை நமக்குத் தருகிறது.

முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் சொல்லும் பொன்னே போல் போற்றுதும் என்றனர். இன்றைய சூழலில் திறனாய்வு, ஆய்வு, மீட்டுருவாக்கம், கட்டுறைத்தல் என்ற பெயரில் நல்ல இலக்கியச் செய்திகள் நலிவடைந்த செய்திகளாக்கப்பட்டு எவையெல்லாம் நீதிகள் என்று இளந்தலை முறையினர் இதயத்தில் பதியவேண்டுமோ அக்கருத்துக்கள் எல்லாம் மறுத்துரைத்து, மனங்கொள்ளத்தக்கதை மனங்கோணத்தக்க வகையில் சிற்சில கருத்துக்கள் சிதைக்கப்படுகின்றன.

சமூகம் முழுமைக்கும் நல்வழி காட்டுகின்ற ஒன்றன்று நம் இலக்கியங்கள். நாம் யாவரும் வாழ்வாங்கு வாழவே எழுந்தவைகள். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய வகையில் ஒப்பற்றதாக சிலப்பதிகாரம் அமைந்திருப்பதால்தான் பல்வேறு மொழிகளையும், பல்வேறு காப்பியங்களையும் கற்றுத்தேர்ந்த சான்றோர் மட்டுமின்றி மகாகவியான பாரதியாரும் உளம் நெகிழ்ந்து மகிழ்ந்து நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று போற்றியுரைத்தார்.

மறைத்திறம் உரைத்த பராசரனை நினைக்குமிடத்து மற்றொரு கருத்தும் ஊடாடுகின்றது. ஏற்றலையே மிகு பண்பாகக் கொண்டு வாழும் செந்தண்மை பூண்ட அந்தணன் தாம் பெற்ற பரிசுப் பொருட்களைப் பிறருக்கு ஈந்தான் என்ற அறச்செயல் உணர்வுக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாக உள்ள இலக்கிய நிகழ்வு இந்த நிகழ்வு. பராசரன் குழந்தைகளுக்கு நல்வழி காட்டியது போன்று நம்முடைய இளைய தலைமுறையினர்க்கு நாமும் நல்வழிகாட்ட கடமைப்பட்டுள்ளோம்.

சிலம்பின் வென்ற சேயிழை

டாக்டர் அ. சிதம்பரநாதன்

காற்சிலம்பினால் வென்ற கண்ணகியின் செய்திகள் சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டுள்ளன. கோல்கோடிய பாண்டிய மன்னனைப் புகார்நகரத்துப் பெருங்குடி வணிகர் மரபினளாய கண்ணகி தனது ஒற்றைச் சிலம்பினைக் காட்டித் தன் கணவன் கோவலன் குற்றம் செய்திலன் என்பதையும் கொற்றவனே கொடியவன் என்பதையும் நிறுவி வென்றமையை விளக்கும் பகுதி சிலப்பதிகாரத்தில் தலைசிறந்த பகுதி.

தேராது செயலாற்றிய பாண்டியனுடைய குற்றத்தை எடுத்துக்காட்டி அவனைக் கண்ணகி வென்றமையால், அவள் "சிலம்பின் வென்ற சேயிழை" எனக் கூறப்படுகிறாள். எனினும், தன் காதலனாகிய கோவலனையும் சிலம்புகளால் அவள் ஓரளவு வென்றுவிட்டாள் என்று கூறுதல்கூடும், கணிகையர் குலத்துத் தோன்றிய மாதவியின் தோழி வசந்தமாலை காட்டிய மாலைக்கு ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்கி, மாதவியின் வீட்டிற்போய்த் தங்குவானாகித் தன் மனைவியையும் மனையையும் மறந்து விட்டவனாகிய கோவலன் கண்ணகியிடமிருந்து அன்புவழிப்பட்ட செயல்களை எதிர்பார்ப்பதற்கு உரியவனல்லன் என ஆகிவிட்ட நிலையில் கண்ணகி அவனுக்கு அன்புடைச் செயல் செய்தமையால் அவன் உளத்தை மீண்டும் கவர்ந்துவிட்டாள். எவ்வாறு? மாதவியின் ஆடல் பாடல் அழகு ஆகியவற்றுள் மயங்கிக் கட்டுண்டு அவளோடு ஊரில் திரிந்துவந்த கோவலன், இந்திரவிழா நாளில் கானலின்கண் மாதவி பாடிய பாடலுக்கு ஏதோ ஒரு தப்புப் பொருள் கற்பித்துக்கொண்டு, அவளோடு ஊடி அவளுடன் அவளது வீட்டிற்குப் போகாமல், தன் மனையகத்திற்குச் சென்றான். பன்முறை கண்ணகியினுடைய அணிகலன்களை அவள் மாதவி காரணமாக முன்னரே பெற்றுச் சென்றுவிட்டான் போலும் ! மாதவி உண்மையில் கோவலனை அன்றி வேறொரு மனிதனையும் சிந்தையிற் கொள்ளாதவளாய் விளையாட்டாகப் பாடல் ஒன்று பாடினாளாக, அதில் ஏதோ குறிப்பு ஒன்று உண்டென்று கற்பித்துக்கொண்டு கோவலன் அவளை உதறவிட்டுத் தன் வீட்டினுள் நேரே புகுந்தான். புகுந்து கண்ணகியை நோக்கி, "இந்தப் பொய்த்தி மாதவியோடு விளையாடி என் குன்ற மொத்த செல்வமெல்லாம் தொலைந்தது" என்று இரங்கி உரைத்தனனாக, மாதவிக்கு மேலும் கொடுப்பதற்குப் பொருள் இல்லையே என அவன் கவலைப்படுவதாகக் கருதிக்கொண்டு கண்ணகி தன்னுடைய சிலம்புகளைக் கொடுக்க முன்வந்தாள். அப்படிக் கொடுக்குங்கால் தனது நகைமுகத்திற் புதியதொரு புன்முறுவல் பூத்து அச்சிலம்புகளை நல்கினாள். கவிஞர் இளங்கோவடிகள் , "நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புள கொண்ம்" எனக் கூறியதாகச் செப்பியுள்ளார். இந்தச் செய்தி மிகவும் உருக்கமானது. கண்ணகியினுடைய பேரன்பிற்குப் பெரியதோர் எடுத்துக்காட்டாக இஃது உள்ளது. தன்னை மறந்து வேறொரு பெண்ணுடன் உறைந்த கணவன் எதிர்பார்க்க முடியாததொரு நன்மையைக் கண்ணகி செய்துவிட்டாள்.

கணவனுடைய குடும்பத்திற்கு எவ்வளவு பெருந்தீங்குகள் வந்துற்றாலும், தன்னுடைய பெற்றோர் இல்லத்திலிருந்து கொண்டுவந்த பொருள்களில் ஏதாவது ஒன்றைக்கூட வழங்குதற்கு இசையாத மனைவியர் எத்தனையோ பேர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்களுடைய ஊரும் பேரும் நமக்குத் தெரியா. விரும்பிய கணிகைக்குக் கொடுப்பதற்குப் பொருளில்லாது முட்டுப்பாடுற்ற கணவர்க்கு மூக்குத்தியைக்கூடக் கழற்றித் தருதற்கு மறுத்த மகளிர் எத்தனையோ பேர் உண்டு. அவர்களுடைய ஊரும் பேருப் அறியவந்தனவா? இல்லை. கண்ணகியினுடைய பெயர் இதுகாறும் அறியப்பட்டுப் போற்றப்படுதற்கும் இன்னும் பன்னெடுங்காலம் போற்றப்படுதற்கும் உரிய காரணங்களுள் ஒன்று, இந்நிலையில் அவள் சிலம்புகளைத் தர முன்வந்தமையாகும்.

கோவலன் கண்ணகியிடமிருந்து சிலம்புகளை எதிர்பார்த்தவனல்லன். மாதவியோடு ஊடி வீட்டிற்குத் திரும்பிய அவன், கண்ணகியைக் கண்டதும், அவளது வருத்தத்திற்காக வருந்தி உரைப்பவன், “அந்தப் பொய்த்தியொடு விளையாடிப் பெரும் பொருட் குன்றத்தை அழித்துவிட்டதால் ஏற்பட்ட என் வறுமை நாணத்தை விளைக்கிறது” என்று மாத்திரந்தான் சொன்னான். பொருள் இழந்துவிட்டமைக்காகப் பொதுவாக நாணி உரைத்தான் என்பதே அன்றி, அவளிடமிருந்து அணிகலன் எதனையும் எதிர்பார்த்து அவன் அந்தச் சொல்லைச் சொன்னான் என்பதன்று. இந்நிலையில், கண்ணகி “சிலம்புள கொள்க” எனப் புன்சிரிப்போடு தர முன்வந்தமை கோவலனது உள்ளத்தை உருக்கிவிட்டிருக்கவேண்டும். இவ்வாறு சிலம்புகளைத் தருதற்கு முன்வந்தமையால், சிலம்பினால் தன் கணவனை வென்றவளாகிறாள் கண்ணகி என்று கூறினாலும் இழுக்கு ஆகாது.

இவ்வாறு தரப்பட்ட சிலம்புகளை விற்றுப் பொருளாக்கி, அப்பொருளையே வாணிக முதலாக வைத்துக்கொண்டு ஈட்டி, முன்னர்த் தொலைத்த பொருள்களையும் அணிகலன்களையும் மீட்டுப் பெற்றுவிடலாம் என்ற நோக்கத்தோடு கோவலன் மதுரை மாநகருக்குச் செல்ல முற்பட்டான். எனவே, சிலம்புகள் அவன் வாழ்க்கையில் ஒரு திருப்புமையம் என்பது தெரியவரும். “பாட மதுரைக்குச் சென்று பொருளீட்ட முற்பட்டேன், ஏடலர் கோதாய், எழுக!” என்று கண்ணகியை நோக்கி அவன் கூற, அவளும் உடனெழுந்து சென்றமை காப்பியத்திலேயே மிக்க உருக்கமான இடம். கண்ணகியின் அன்பு ததும்பிய இச்செய்தியைக் கோவலன் நினைவுகூர்ந்து பிறகு உருகினான். மதுரை மாநகரில் இடைக்குல மகள் மாதரி வீட்டில் கண்ணகி சமைத்து அவனுக்கு அமுதமூட்டிய பிற்பாடு, அவளை அருகில் அழைத்து அவன் நைந்துருகிய நிலையை இளங்கோவடிகள் கொலைக்களக் காதையில் காட்டியுள்ளார். ‘இவ்வளவு தொலை கல்லிலும் முள்ளிலும் நடந்து கடந்துவர இம்மெல்லடிகள் எந்தப்பாடு பட்டனவோ’ எனச் சொல்லி மனம் உளைந்தான். முன்னரெல்லாம் வறுமொழியாளரொடும் வம்பப் பரத்தரொடும் குறுமொழி கூறி வெடிச் சிரிப்புச் சிரித்துப் பொழுது வீணாகப் போக்கியதை இப்பொழுது நினைந்து வருந்தினான். பெற்றோர்களது ஏவலைப் பொருட்படுத்தாது போனமைக்கும் கண்ணகிக்குக் கடுந்துயர் விளைத்தமைக்கும் வருந்தியுரைத்தான்.

> "இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
> சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
> வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு
> எழுகென எழுந்தாய் என்செய்தனை"

என அவன் கூறியதாகக் கவிஞர் உரைக்கிறார். கணிகையர் மகள் மாதவி வீட்டில் தங்கிக் கண்ணகியை மறந்தமை குறித்து அவன் வருந்தினான் என்பது தெளிவு. அவளோடு நேரிற் பேசிக்கொண்டிருப்பவன் "உனக்குச் சிறுமை செய்தேன்" என்று முன்னிலையிற் கூற வேண்டியவன் அங்ஙனம் கூறாமல், "சிறு வயதிலேயே பேரறிவு படைத்துவிட்டவளாகிய உனக்குச் செய்யக்கூடாத சிறுமையைச் செய்தேனே" எனக் கலங்கி உரைத்தவிதம் இதனால் தெளிவாகிறது. "நீ" என்ற முன்னிலைப் பெயர்ச்சொல்லின் அடிப்படையில் "உனக்கு" என்று பேசவேண்டிய இடத்தில், "சிறுமுதுக்குறைவி" என்னும் படர்க்கைச் சொல்லின் அடிப்படையில் "சிறுமுதுக் குறைவிக்கு" என அமைத்துக் கோவலன் பேசினான் எனின், அவன் கண்ணகிமாட்டு வைக்கத் தொடங்கிவிட்ட பெருமதிப்புத் தானே புலனாகிறது. 'என்னோடு மதுரைக்குப் புறப்பட்டு வருக' என்று உன்னைக் கேட்பது கூடக் குற்றம் என்று பாரேனாய் 'என்னுடன் எழுக' என்றேன், நீயும் எழுந்து வந்தாயே! என்னே உன் அன்பு!" என அவன் கூறி வியந்தான் என்பது கவிஞர் சொல்லமைப்பினால் விளங்குகிறது. "எழுகென எழுந்தாய் என் செய்தனை !" எனக் கோவலன் கண்ணகியை நோக்கிக் கூறிய இச்சொற்கள் அவன் உள்ளத்தைத் திறந்துகாட்டுவன. அவளது பேரன்பிற்குத் தகுதியற்றவனாகத் தன்னைக் கோவலன் கருதினான் என்பதும், அவள் அன்புரிமைச் செயலால் அவனை வென்றுவிட்டாள் என்பதும் இப்பகுதிகளால் தெளிவாகின்றது அல்லவோ?

பாண்டிய மன்னனுடைய மனைவியின் சிலம்புகளைப் பொற்கொல்லன் ஒருவன் கவர்ந்துகொண்டமையை மறைத்து அக்குற்றத்தைக் கோவலன் மீது ஏற்றிவிட்டான் என்பது சிலப்பதிகாரத்திற் காணுஞ் செய்தி. அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்துகொண்ட கள்வன் பொற்கொல்லனது சிறுகுடிலில் இருப்பதாக அப்பொற்கொல்லன் வந்து தெரிவிக்க, அரசன் ஒரு சிறிதும் ஆராயாமல் ஊர்க்காவலரை அழைத்து, "தேவியின் காற்சிலம்பு இவன் காட்டும் கள்வன் கையதானால், கொன்றச் சிலம்பு கொணர்க இங்கு" என்று கூறிவிட்டான். அவ்வாறு அவன் கூறியதற்கு அவனது பண்டை வினை காரணம் எனப்படினும், பாண்டிய மன்னன் தானும் பொறுப்பு உடையவனே. அரண்மனையில் நடைபெற்ற மகளிர் ஆடலைக் கண்ணுற்றுக் கொண்டிருந்த காவலன் உள்ளம் வேறாகிவிட்டான் என்று தவறுதலாக அவனைப்பற்றிக் கருதிக்கொண்டு ஊடாடிச் சென்ற கோப்பெருந்தேவியின் ஊடலை விரைவில் தீர்ப்பதற்குக் காணாமற்போன அவள் சிலம்பு கிடைக்கப் பெறுதல் உறுகருவியாக இருக்குமென்று கருதிவிட்ட அரசன் வேறு ஒன்றையும் சிந்தியானாய்,

> "தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
> கன்றிய கள்வன் கைய தாகிற்
> கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு"

எனக் கூறிவிட்டான். காப்பியத்தில் வந்துள்ள சொற்போக்கினை நோக்குந் தொறும், சிலம்பு என்ற சொல் ஒருமையைக் குறிக்கவோ பன்மையைக் குறிக்கவோ உரியதொரு பொதுச் சொற்போல ஆளப்பட்டிருப்பது தெரியவரும். கோவலன் சிலம்பினை விற்பதற்கு மாதரி வீட்டை விட்டுப் புறப்படுதற்கு முன் கண்ணகியை நோக்கி,

> *"சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டி யான்போய்*
> *மாறி வருவன் மயங்கா தொழிக"*

எனக் கூறிப் புறப்பட்டான். அவளுடைய சிலம்புகளில் ஒன்றுதான் அவனால் அப்பொழுது எடுத்துச் செல்லப்பட்டது என்பது தெளிவு. கடைத்தெரு வழியே சென்ற கோவலன் பொற்கொல்லன் ஒருவனை எதிர்ப்பட்டானாக, அவனிடம் சிலம்பின் கட்டவிழ்த்துக் காட்டினான். அவனும் "சித்திரச் சிலம்பின் செய்தியையெல்லாம்" புரிந்து உடன் நோக்கினான். இவ்விடங்களில், சிலம்பு என்ற சொல் ஒருமைப் பொருளில் அமைந்து கிடக்கிறது. மற்று, "நோயிற் சிலம்பு கொண்ட கள்வன்" என்ற இடத்தில் அச்சொல் பன்மைப் பொருளில் அமைந்துள்ளது. "தேவியின் சிலம்பு கள்வன் கையதாகில் கொணர்க" என்ற இடத்தில், "சிலம்பு கையவாயின்" எனக் கூறப்பெறாமற் "கையதாகின்" எனக் கூறப்பட்டுள்ளமையால், காணாமற்போன சிலம்பு ஒன்றுதான் என்றும், அவ்வொற்றைச் சிலம்பு கள்வன் கையில் இருந்தால் கொன்று கொணர்க என்று அரசன் கட்டளையிட்டான் என்றும் பொருள் கூறுதல் வேண்டும் என்பது பொருந்தாதெனத் தோற்றுகிறது. அரசனோ தன்வயத்தனாய் நின்று பேசியவன் அல்லன் ; காம வயத்தனாய், மனைவியின் ஊடலைத் தீர்க்கும் நோக்கினனாய், அவளது தனியறைக்குட் புகுந்துகொண்டிருக்கும் தறுவாயில் அன்றோ பொற்கொல்லன் "சிலம்பினைக் கவர்ந்துகொண்ட கள்வன் என் வீட்டில் இப்பொழுது உள்ளான்" என்று கூறினான்? இந்நிலையில், அரசன் ஒரு சிறிதும் ஆராயாமல் ஆணையிட்டான் என்பதைக் கவிஞர், "யாவதும் தேரான் ஆகி" என்ற சொற்றொடரால் தெளிவுபடுத்தியுள்ளார். காம வயத்தனாய்ச் சென்றுகொண்டிருந்த அரசன், "சிலம்புகள் கள்வன் கையில் உளவாயின் அவனைக் கொல்லுதற்குச் சிலம்புகளைக் கொணர்க" என்று கூறக் கருதியவன் நாக்குழறி வேறுவகையில் சொற்களைச் சொல்லிவிட்டான். "கொல்லச் சிலம்பு கொணர்க" என்று சொல்லுதற்கு மாறாகக் "கொன்றச் சிலம்பு கொணர்க" எனக் கூறிவிட்டான் என்று உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டியுள்ளார். நாக்குழறியவன் சிலம்பு "கையவாயின்" எனக் கூறுவான் என்று எதிர்பார்ப்பது பொருந்தாது. அதனால் சிலம்பு என்ற சொல் குறிப்பிட்ட இவ்விடங்களில் பன்மைப் பொருளில் வந்துள்ளது என்றுதான் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பல இடங்களில் நூலினுள் ஒருமைப் பொருளிலும் பன்மைப் பொருளிலும் இச்சொல் வந்திருக்கிறது என்பது அறியப்படும்.

கண்ணகி தன்பாட்டு எஞ்சியிருந்த சிலம்பு ஒன்றினை எடுத்துக்கொண்டு, தன் கணவன் கள்வனல்லன் என்பதை நிறுவும்பொருட்டு அரண்மனை வாயிலை நோக்கிப் போய்க்

கொண்டிருந்தாள். கவிஞர் "சிலம்பு ஒன்று கையேந்திச்" சென்றாள் என்றார். 'இது ஒன்று', 'இது ஒன்று' என்று அவள் அடுக்கியடுக்கிச் சொல்லிக்கொண்டே ஊரிற் சுற்றி வருகிறபொழுது, இது ஒன்று என்பது 'இச்சிலம்பு ஒன்று' எனப் பொருள்படும் என உரையாசிரியரும் எடுத்துக்காட்டியுள்ளார். மதுரை மக்கள்

"செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல்?"

எனக் கூறிக்கொண்டிருந்தார்கள் என்ற இடத்திலும், அவள் ஒற்றைச்சிலம்போடு சென்றமை கூறப்பட்டது.

கண்ணகி அரசனுடைய வாயிற் காவலனிடம் தன்னைப் பற்றித் தெரிவித்தபொழுது,

"இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே அறிவிப் பாயே"

எனக் கூறினாள். இவ்விடத்திலும், 'சிலம்பு ஒன்றினை ஏந்திய கையள்' என்றவாறு தன்னைப்பற்றித் தெரிவித்துக் கொண்டாள் என்பதைக் காண்கிறோம். அரசனை அணுகிக் கண்ணகியின் வரவினைத் தெரிவித்த வாயிலோன் "பொற்றொழிற் சிலம்பொன்று ஏந்திய கையளாய்க் கணவனை இழந்தாள் கடையகத்தாள்" என்று தெரிவித்தாள். கண்ணகி தன் காற் சிலம்பினை விற்பதற்காகப் புறப்பட்ட கோவலன் கொல்லப்பட்டானே என்று கூறுவோளாய், அவ்வாறு கொல்லப்பட்ட கோவலன் மனைவிதான் என அரசனுக்குத் தெரிவிக்க, அவன் கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல்அன்று என்று பேச, தன் காற் பொற் சிலம்பிலுள்ள அரிகள் மணிகள் எனக் கண்ணகி தெரிவிக்க "எங்கள் சிலம்பின் அரிகள் முத்துக்களே" என்று அரசன் ஒப்புக்கொண்டு 'தருக' எனக் கேட்டு வாங்கிச் சிலம்பினை முன்வைக்கவும், கண்ணகி தன் ஒற்றைச் சிலம்பை உடைத்தாள். உடைப்பவும், மணி விண்ணெனத் தெரிக்க, மணி கண்ட அரசன் தளர்ந்தான், தாழ்ந்தான். "குற்றம் செய்யாதவனைக் கொன்ற நானோ அரசன்? பிறர் சிலம்பினை என் தேவியின் சிலம்பு என்று கருதி எடுத்துவர ஏவிய நானே கள்வன்" எனக் கருதியவனாய், 'யானோ அரசன் ! யானே கள்வன் ! என்று கூறி உயிர்விட்டான். "என்னால் செங்கோல் பிழைத்ததே என் வாழ்நாள் கெடுக" எனக் கூறிக்கொண்டே அரசன் மயங்கி வீழ்ந்தான், இறந்தான்.

"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று வெள்வேற்கொற்றங்காண்" என வீறு பேசிய அரசன் வாயினாலேயே "யானே கள்வன்" என்னும் சொல்லைப் பிறப்பித்த கண்ணகியின் திறம் என்னே ! அவள் பக்கம் அறம் உண்டென்ற துணிவினால், அரசனுக்கு அஞ்சாமல்,

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே !"

என்று அரசனுடைய வாயிற் காவலனை நோக்கிக் க்ண்ணகி பேசினாள். "அறிவு கெட்டுப்போன அரசனது வாயிற்காவலனே" என்றும் " கோல் கோடிவிட்ட அரசனது வாயிற்காவலனே !" என்றும் கண்ணகி துணிவுடன் பேசினாள் என்பது இச்சொற்றொடர்களால் அறியப்படும். அர-சனை நேரிற் கண்ட பிற்பாடும் "தேரா மன்னா !" என்றும், "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!" என்றும் அவள் பேசுதற்குத் துணிவு தந்தது அவளது அறவுணர்வேயாகும். அவள் அறமுடைமையால் உரம்பெற்றுப் பேசப்பேச, மன்னவன் அறச் சோர்வினால் தாழ்ந்து தாழ்ந்து உரைக்கும் பணிவுடையவனாய் வீழ்ந்திறந்தான். அவன் பணிவு கண்ணகியின் வெற்றி.

அதனால்தான்,

"சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று"

என்றும்,

"தேரா மன்னனைச் சிலம்பின் வென்று
இவ்வூர்தீ யூட்டிய ஒருமகள்"

என்றும் மதுரை மகளிர் பேசிக்கொண்டார்கள் என அழற்படு காதையின் இறுதியில் கவிஞர் கூறியுள்ளார். மேலும் சேரநாட்டு மகளிர் கண்ணகியைப் பரவிப் போற்றியதாக வரும் வாழ்த்துக் காதைப் பகுதியில்,

"... ... ... கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்"

என வஞ்சி மகளிர் கூவியழைத்தாகக் கவிஞர் உரைத்துள்ளார்.

இரட்டைச் சிலம்புகளைக் கொடுக்க முன்வந்தமையால் கணவனைக் காதலனாக்கிக் கவர்ந்துகொண்ட கண்ணகி ஒற்றைச் சிலம்பினால் காவலனை வென்று வீழ்த்திக் கணவன்தன் குற்றமின்மை உலகறிய நாட்டினாள். "சிலம்பின் வென்ற சேயிழை நங்கை" யின் புகழ் நிலைபெறுக.

நன்றி : இளங்கோவின் இன்கவி
நாவலர் புத்தக நிலையம் – 1969



மதுரை மூதூர்ப் பெருவழி

நா. நஞ்சுண்டன்

சிலப்பதிகாரத்திலே பல்வேறு வகையான பாத்திரங்கள் வந்து போகிறார்கள். அரசன் முதல் ஆண்டி வரையிலும், தனவணிகர், வம்பபரத்தையர், இடைக்குல மக்கள், சாவகக் கூட்டத்தினர் ஆகியோரும், இவை அல்லாமல் சதுக்கபூதம், வனசாரிணி போன்ற பிற குறுந் தெய்வங்களும் தோன்றி காப்பியத்தின் போக்குக்கு மெருகூட்டுகின்றனர்.

பண்டை காலத்திலே நாடுவிட்டு, பிறநாட்டுக்குச் செல்வோர் பெரும்பாலும் நடைவழிப்பயணமாகவே செல்வர். அரசன் என்றால் தனது நால்வகைப் படைகளோடு தேரில் அமர்ந்து செல்வான். தனவணிகர்கள் தங்களுக்கென தனிப்பாதுகாப்புடன் பல்லக்கில் ஏறி செல்வர். நாட்டு மக்கள் பலரும் தாங்கள் செல்லவேண்டிய இடத்திற்கு கால்நடையாகவே சென்று சேருவர் என்பதை சிலப்பதிகாரம் நமக்கு உணர்த்துகிறது.

ஆழ்வார்கள், மூவர் முதலிகள் வாழ்ந்த காலத்தில் அவர்கள் இறைவனை தரிசிப்பதற்காக கால்நடையாகவே திவ்யதேசங்களுக்கு சென்று வந்தார்கள். ஆதிசங்கரரும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை நடைப் பயணமாகவே சென்று தன்னுடைய அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பினார். ராமானுஜரும் வடக்கே சென்று பல திவ்யதேசங்களை தரிசித்து திருமால் பெருமையை கூறினார். அப்பரடிகளோ காலாலேயே நடந்து கைலயங்கிரிக்கு செல்ல முற்பட்டார். அதேபோல சங்ககாலப் புலவர்களும் தங்கள் வறுமை தீர பல்வேறு மன்னர்களைக் கண்டு பாடி பரிசில் பெறுவதற்காக நாடுவிட்டு நாடு, ஊர்விட்டு ஊர் என்றபடி நடைவழிப் பயணம் மேற்கொண்டதை அறியலாம்.

நாடுவிட்டு பிற நாடுகளுக்கும், கடலை கடந்தும் வாணிகம் செய்வது அந்தக்கால வணிகர்களுக்கு கை வந்த கலை. அத்தகைய வணிகர் மரபிலே வந்த கோவலன் புகாரைவிட்டு மதுரை செல்லும்படியான சூழலுக்கு காரணமாய் இருந்தவள் மாதவி. ஆயிரம் பொற்கழஞ்சு கொடுத்து 12 ஆண்டுகள் அவளுடனேயே கூடியிருந்து, மணிமேகலைக்குத் தகப்பனாக ஆகிய கோவலன் இந்திரவிழாவின் போது பாடிய கானல் வரிப்பாட்டும், எடுக்க எடுக்கக் குறையாத பெருஞ்செல்வமும் தொலைத்த நிலையில்தான் மாதவியைப் பிரிந்து மீண்டும் கண்ணகியிடத்து வருகிறான். இதனை,

"கானல்வரி யான்பாடத் தானொன்றில் மேல் மனம் வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாளென
யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்து உருத்ததாகலின்
உவவுற்ற திங்கள் முகத்தாளை கவ்வுக்கை நெகிழ்ந்தனனாய்ப்

பொழுதீங்கு கழிந்ததாகலின் எழுதுமென்று உடன் எழாது
ஏவலாளருடன் சூழ்தரக் கோவலன்தான் போனபின்"
(கானல் வரி)

இங்கு 'எழுக' என்று சொல்லி மாதவியை எழுப்பி, அவளுடன் கூடச் செல்லாமல் ஏவலாளர்களுடன் தனியே சென்றான் என்று அடிகள் குறிப்பிடுகிறார். மாதவியும் "கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உட்புக்கு காதலுடனன்றியே மாதவி தன் மனைபுக்காள்' என்ற குறிப்பையும் அடிகளார் இங்கு பதிவு செய்கிறார்.

கண்ணகி, கோவலன் திருமணத்தின்போது, அவர்களிருவரையும் பார்த்து 'காதலன் பிரியாமல், கவவுக்கை நெகிழாமல் தீது அறுகவென ஏத்தி இன்மலர் கொடு' தூவினார்கள். திருமணத்தின்போது 'இவள் தன் காதலனைக் கண்ணினும், கருத்தினும் பிரியாதிருப்பாளாக. அவனும் இவளைப் பிணித்தகை நெகிழாமல் இருப்பானாக. இருவரும் தீதின்றி நீடுவாழவேண்டும் என்று வாழ்த்தியதை இங்கு நினைவில் கொண்டால், ஊழ்வினை வந்து உருத்ததாகலின் மாதவியுடன் சேர்ந்து ஆண்டுபல கழிந்தபின், அதே ஊழ்வினை மாதவியுடனான தொடர்பைத் துண்டித்தது. இங்கேயும் "உவவுற்ற திங்கள் முகத்தாளை கவவுக்கை நெகிழ்ந்தவனாய்" என்று சொல்லை வைத்து, மணவேளையில் யாருடன் கைபற்றி நின்று – நெகிழாமல் நின்று சிறப்பித்தானோ, அதே கோவலன் இன்று மாதவியின் கையை நெகிழவிட்டவனாக ஆகி, இனி கண்ணகியின் கையைப் பற்றப் போகின்றான் என்பதை இந்நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

மாதவியைப் பிரிந்த கோவலன் நேராக தனது இல்லத்திற்கு விரைகிறான். கோவலன் வருவான், வருவான் என்று வழிமுதல் விழி வைத்து நின்றபடி இருக்கும் கண்ணகியிடம், சேடி ஒருவள் நம் பெருமான் கோவலன் கடைவாயிலே வந்துள்ளான் போலும் எனச் சொல்ல இல்லம் வந்த கோவலன் நேராக கண்ணகியோடு பெருமைமிக்க பள்ளியறைக்குச் சென்றான். தனது பைந்தொடியாக கண்ணகியின் 'வாடிய மேனியும், வருத்தமும் கண்டு உள்ளம் நைந்தான். இதுவரையில் நடைபெற்ற செயல்களுக்கு வருத்தம் தெரிவிக்கும் முறையில், எல்லா செயல்களாலும், வஞ்சம் பொருந்திய கொள்கையுடைய மாயத்தாளோடும் கூடி ஆடிய தீய ஒழுக்கத்தின் காரணமாக, நம் குலத்தவர் தேடித் தந்த மலைபோன்ற செல்வக்குவியல்கள் எல்லாம் அழிந்தொழிந்தன. அதனால் உண்டான வறுமை எனக்கு நாணத்தை தருகிறது என்றான்.

இதனை அடிகளார் இவ்வாறு பதிவு செய்கிறார்.

" வாடிய மேனி வருத்தம் கண்டு யாவும்
சலம்புணர்க்கொள்கை சலதியோடாடிக்

குலந்தரும் வான்பொருட் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தருமெனக்கென்ன"

கண்ணகி கோவலனுடைய இச்சொற்களைக் கேட்டவுடன், தனது ஒளி பொருந்திய முகத்திலே சிறிய முறுவலைக் காட்டினாள். பெரும் செல்வம் தொலைந்தது பற்றி கவலைகொள்ள வேண்டாம். மீண்டும் அதனைப் பெறுவோம் என்ற நினைப்பில் என்னிடம் இருக்கும் மாணிக்க பரல்கள் கொண்ட சிலம்பினை கொண்டு சென்று வாணிகம் செய்யலாம் என்று "சிலம்புஉள கொண்மென" சேயிழையான கண்ணகி சொல்லுகிறாள்.

மலர்ந்த முகத்தோடு வரவேற்று, தன் கால் சிலம்பையும் கொடுத்த கண்ணகியைப் பார்த்து "நீ கூறிய இச்சிலம்பையே வாணிக முதலாகக் கொண்டு திக்கெலாம் புகழையுடைய மாடமதுரைக்குச் சென்று, வாணிகம் செய்து முன்னர் யான் இழந்த கலன்களையும், பொருளையும் பெருக்குவேன். நீயும் என்னோடு புறப்பட்டு வா" என்றான். முன் செய்த தீவினை நெடுங்காலம் தங்கி நெஞ்சை ஒரு நிலைப்படுத்தித் தூண்ட அத்தீவினையின் ஏவல்படி (வினைக்கடைக் கூட்டம் வியம் கொண்டான்) பொழுது புலர்வதற்கு முன்பேயே புகாரைவிட்டு இருவரும் புறப்பட்டனர்.

புகாரை விட்டு நீங்கிய பின்னர், இலவந்திகைப் பள்ளியின் எதிற்புறமாகச் சென்று, தாழ்ந்த சோலைகள் நிறைந்த காவிரியில் புனலாடச் செல்வதற்கான பெருவழியில் சென்று, நீராடும் துறையினையும் கடந்து, காவிரியின் வடகரையில் உள்ள சோலை வழியே மேற்கு நோக்கிச் செல்லலாயினர். ஒருகாத தூரம் கடந்த பின்னர் அங்கு கவுந்தியடிகள் உறைகின்ற பக்கத்தில் இருக்கிற சோலையை அடைந்தார்கள்.

நீண்டதூரம் நடந்து வந்த களைப்பு கண்ணகிக்கு. இற்றுவிடும் எனத்தக்க கொடிபோன்ற இடையும் (இறுங்கொடு நுசுப்போடு) சிற்றடியும் மிக வருந்தினாள். (இனைந்தடி வருந்தி). தன்னுடைய மழலைச் சொற்களாலே, பற்கள் வெளியே தெரியும்படியாக முறுவலித்து, மதுரை என்னும் பழைய ஊர் எதுவோ? எனக் கேட்கிறாள் (மதுரை மூதூர் யாதென வினவ) கண்ணகியின் களைப்பையும், சோர்வையும் கண்டு கோவலன் இன்னும் நீண்ட நெடும்தொலைவு இருக்கிறது என்று சொன்னால், அவள் பொறுக்கமாட்டாள் என்று, இன்றும் ஐந்து ஆறு காத தூரத்தில்தான் இருக்கிறது என்று சொன்னான். (காதம் – பத்து மைல்) அதுவும் அண்மையில் இருக்கிறது என்றும் சொல்லி சிறுநகை செய்தான். பின்னர் இருவரும் கவுந்தியடிகள் இருக்கின்ற தவ பள்ளியில், அவரைக் கண்டு இணையடி தொழுதார்கள்.

இருவரையும் கண்ட கவுந்தியடிகள் இருவரையும் வாழ்த்தி உருவமும், உயர் குடிப்பிறப்பும், நல்லொழுக்கமும், அருகப்பெருமானின் ஆகம உரைகளை சிறிதும் பிறழாத விரதமும் உடைய நீங்கள் தீவினையாளரைப்போல், உங்கள் இடத்தைவிட்டு இங்கு வருவதற்குரிய காரணம் என்னவோ என்று கேட்கிறார். தாங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறும் நிலையில்

நாங்கள் இல்லை. மதுரை மூதூர் சென்று வாணிகம் செய்து பொருளீட்டும் விருப்பம் உள்ளேன். ஆதலால் இவ்வாறு வர நேர்ந்தது என பதிலிறுத்தான். கண்ணகியைக் கண்ட அடிகள்,

“ பாடகச் சீரடி பரல்பகை உழவா
காடிடையிட்ட நாடுநீர் கழிதற்கு
அரிது இவள் செல்வீ அறிகுநர்யாரோ ”

இவளது பாடம் அணிந்த சிறிய அடிகள் பருக்கை கற்களாகிற பகையை வெல்லமாட்டாதவை. இடையிடைய காடுகள் நிறைந்த இந்நாட்டு வழி கடத்தற்கும் அரிதாகும். இனி ஊழ் என்ன செய்யுமோ? இவளையும் உடன் கொண்டு போதல் ஏற்புடைய செயல் அன்று. எவ்வாறு கூறினாலும் செல்லாது இருக்கமாட்டீர் போலும் என்று அடிகள் கூறுகிறார். முழுமுதற் கடவுளான, அருகப்பெருமானை வழிபடுவதற்காக “தென்தமிழ் நாட்டுத் தீதுதீர்” மதுரைக்கு செல்லும் விருப்பம் உடையேன் ஆகையால் நீங்களும் என்னுடைய வாருங்கள் என்று கூறுகிறார் அடிகள்.

“ காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி
அடிகள் நீரே அருளிதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த்தேனெனக் ”

இளங்கோ பதிவு செய்து, அடிகளாரின் இச்செய்கை கண்ணகியின் துன்பத்தையெல்லாம் போக்கிவிடும் என நெகிழ்ந்து கூறினான்.

இங்கிருந்துதான் மதுரை மூதூர் செல்ல முற்படுகின்றனர். போகும் வழியைப் பற்றி கவுந்தியடிகள் பற்பலவாறு கூறுகிறார். நாம் செல்லக்கூடிய வழி பல்வகையான துன்பங்களைக் கொடுக்கக்கூடியது. வெய்யிலின் கொடுமையை இன்னதென்று அறியாத இவளை சோலைகள் சூழ்ந்த வழியில் கூட்டிச் செல்வோமானால், இங்கு நிலங்களிலிருந்து வள்ளிக்கிழங்குகளைத் தோண்டி எடுத்தபின், அக்குழிகளை செண்பக மரத்தின் பூக்களைக் கொண்டு பொய்குழிப்படுத்து – மேலே மறைக்கப்பட்டு, அவைகளைக் கண்டு அறிந்து தம்மைப் பாதுகாத்துச் செல்லாத மக்கள் துன்பப்படும்படியாக செயல்களைச் செய்யும்.

“ மண்டபம் வீழ்ந்த கிழங்கு அகழ்குழியை
சண்பகம் நிறைந்த தாதுசேர் பொங்கர்
பொய் அறப்படுத்துப் போற்றா மாக்கட்குக்
கையறுதுன்பம் காட்டினும் காட்டும் ”

என்று கவுந்தி அடிகளார் சொல்வதோடு நில்லாமல், பொய்க்குழியை மிதியாது, பார்த்துப் பார்த்துச் செல்லும்பொழுது, நன்கு வளர்ந்த பலா மரத்தின் தேனொழுகும் இனிய

பலாப்பழங்கள் நமது தலையிலே மோதினும் மோதும். தோட்டத்துப் பாத்திகளிலே மஞ்சளும், இஞ்சியும் கலந்த உள்ள நிலையில், பலாவின் கிளைகளிலிருந்த உதிர்ந்த கொட்டைகள் பகையாய் நம் காலை உறுத்தும்.

" மஞ்சளும் இஞ்சியும் மயங்கரில் வலயத்து
செஞ்சுளை பலவின் பரல்பகை உறுக்கும்"

வழியில் செல்லும் மணம்கமர் குளங்களில் கயல் மீன்கள் துள்ளிக் குதிக்கும். நீர்நாய்கள் கெளவிய வாளைமீன், அதன் வாய்க்கு அடங்காது, வயலின் குறுக்கே துள்ளிப் பாயும். இதைக்காணும் கண்ணகி கலங்கக்கூடும். குவளைப் பூக்களில் உள்ள மதுவினை வண்டுகள் பருகி, உண்ட மயக்கத்தால் ஒடுங்கிக் கிடக்கும். வழிநடைத் துன்பத்தால், சோர்ந்து நாம் அவற்றின் மீதே அடியிட்டு நடத்தலும் கூடும்.

மேலும் பெருவாய்க்கால் கரைகளில் நண்டுகளும், நத்தைகளும் வழியிலே எதிர்ப்படும். நாம் இயல்பாக நடப்போமேயானால், அவற்றின் மீது நடந்து துன்பத்தை அவைகளுக்கு உண்டாக்கும். ஏன் பல இறக்கவும் கூடும். இவை நமக்கு தாழ் பிறவியான நரகத் துன்பத்தை தரும். இவ்வாறாக மதுரை செல்வதற்கு வயல்வழியும் சோலை வழியுமல்லாது, வேறு வழியில்லை. எனவே குறிப்பால் உணர்ந்து, உயிர்களுக்கு துன்பம் தாராமல் விழிப்புடன் செல்லவேண்டும் என்று கோவலனிடம் அறிவுறுத்தினார். இவைகள் தவப்பள்ளியிலிருந்த போது கூறியவை. பின்னர் கவுந்தியடிகள் பஞ்சநமஸ்கார மந்திரம் சொல்லி பஞ்சபரமேஷ்டிகளைத் துதித்து (அருகர், சித்தர், ஆசாரியார், உபாத்தியாயர், சாதுக்கள்) கண்ணகி கோவலன் கவுந்தியடிகள் ஆகியோர் மதுரைப் பயணத்தைத் தொடங்கினர்.

மதுரை நோக்கிச் செல்லும்போது சோழநாட்டின் காவிரி நதியின் மதகு திறந்து, தண்ணீர் பீரித்துக் கொண்டு செல்லும் ஓசையும் சம்பங்கோழி, நாரை, கானக்கோழி, நீர் காக்கை, உள்ளானும், குளுவையும், கணந்துட்புள்ளும், பெருநாரையும், பல்வேறு வகைப்பட்ட ஒலிகளை எழுப்புவதால், அவை இடையறாது கேட்கும். மயக்கம் தரும் கள்ளை உண்ட கடைசியர் பாடும் புதிய பாட்டொலியும் போகும் வழியிலெல்லாம் கேட்கும். பேரியாற்றின் கரையிலே இவ்வொலிகளையெல்லாம் வருத்தமின்றி கேட்டு நடைப்பயணம் சென்றனர். மூவரும் இடைவழியில் சாரணரின் தரும உபதேசமும், வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும், கோவலனையும் கண்ணகியையும் கண்டு அவதூறு சொல்ல கவுந்தியடிகள் அவர்களை நரிகளாக திரிந்து, பன்னிரெண்டு மாதங்கள் கழிந்து சாபவிமோசனம் பெறுவர் என்று கூறி இவர்கள் உறையூர் சென்றடைந்தார்கள்.

உறையூருக்கு அடுத்த திருவரங்கத்திலே, துறவிகள் உறையும் இடத்தில் மூவரும்

தங்கினார்கள். மறுநாள் தெற்கு நோக்கிச் செல்லவிரும்பி வைகறையில் எழுந்து உறையூரைவிட்டு நீங்கலாயினர். அங்கு உள்ள ஒரு சோலையின்கண் உள்ள மண்டபத்தில் நுழைந்தபொழுது முதிய மறையவன் ஒருவரைக் கண்டனர். அவன் பாண்டியரின் பெருமையை வாழ்த்திக் கொண்டிருந்தான்.

" வடதிசை கங்கையும், இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி
திங்கள் செல்வன் திருக்குலம் விளங்க
செங்கண் ஆயிரத்தோன் திறல் விளங்காரம்
பொங்கொளி மாறன் பூண்டோன் வாழி
....
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைப்பிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதறு சிறப்பின் தென்னனை வாழ்த்தி"

என்று பாண்டியன் புகழினை அடிகள் இவ்வாறு பதிவு செய்கிறார்.

அம்முதியோனை நோக்கி, கோவலன் நீங்கள் யார்? எங்கிருந்து எதற்காக இங்கு வந்தீர் என வினவினான். அவ்வினாவிற்கு நான் மேற்கு மலைப்பக்கத்திலே உள்ள மாங்காடு என்ற ஊரில் வாழ்பவன். பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் அரங்கனின் கிடந்த கோலத்தினைக் கண்டு களிக்க வந்தேன் என்றான்.

" நீல மேகம் நெடும்பொன் குன்றத்து
பால்விரிந்து அகலாது படிந்ததுபோலே
ஆயிரம் விழுந்தெழு தலைஉடை அருந்திறல்
பாயல் பள்ளி பலர்தொழுது ஏத்த
விரிதிரை காவிரிவியன் பெருந்துருத்தி
திருவருமார்பன் கிடந்த வண்ணமும்."

உடைய திருமாலின் கிடந்த கோலத்தை வர்ணிக்கும் பொழுது, இளங்கோவடிகள் ஆழ்வார்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறார் என்றே சொல்ல வேண்டும். இக்கிடந்த கோலத்தைக் கண்டு களித்த பின்னர்

" வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்துச்சி மீமிசை
....
பகையணங்கு ஆழியும், பால்வெண்சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
பொலம்பூ வாடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

காண வந்தேன் என்று தனது வருகைக்குரிய காரணத்தை கூறினான்.

மாங்காட்டு மறையமான் பாண்டிய நாட்டின் பண்பை அறிந்தவன் அவனிடம், வேத

முதல்வனே – மதுரைக்கும் செல்லும் வழி பற்றிக் கூறுக எனக் கேட்டான்.

வெய்யிலின் தாக்கம், தன்னைச் சார்ந்தோரை எல்லாம் நடுங்கச் செய்யும் இத்தகைய வேனிற்காலத்தே துணைவியுடன் கடும்பயணத்தை மேற்கொண்டீரே, இது உங்களை வருத்தும். இருப்பினும் இந்த நீண்ட பாலை வழியைக் கடந்து, கொடும்பாளூர், நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்களுக்கும் பொதுவான ஏரிக் கரையை அடைந்தால், அங்கு பிறைசூடிய சிவபெருமானின் முத்தலைச் சூலம் போல கடத்தற்கரிய மூன்று வழிகள் பிரியும் என்று சொல்லி மேலும் அந்த மூன்று வழிகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறான் மாங்காட்டு மறையவன். இந்த மூன்று வழிகளிலே வலப்புறம் வழியாக நீங்கள் செல்ல விரும்புவீர்களாயின், விரிந்த தலையை உடைய வெண்கடம்பும், காய்ந்துபோன ஓமையும், பொதிந்த தாளினையுடைய வாகை மரங்களும் வழியெங்கும் காய்ந்து கிடக்கும் மூங்கிலும், நீரில்லாமல் சுருங்கிக் கிடக்கும் கள்ளிச் செடிகளும் வழிநெடுக நிறைந்து காணப்படும். நீர் வேட்கையால் மான்கள் அங்கும் இங்கும் ஓடி வருந்தும் காட்டையும், அங்குள்ள எயினர் என்ற பழங்குடி மக்களின் குடியிருப்பையும் கடந்து செல்ல வேண்டிவரும். இதனையடுத்துப் போனால் பாண்டியனின் சிறுமலை விளங்கித் தோன்றும்.

“ ஐவன வெண்ணலும், அறைக்கண் கரும்பும்
கொய்ப்பூந்தினையும், கொழுப்புளவரகும்
காயமும், மஞ்சளும், ஆயக்கொடிக் கவலையும்
வாழையும், கமுகும் தாழ்க்குலைத்து எங்கும்
மாசும் பலாவும் சூழடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை”

(ஐவனம் – ஒருவகை நெல் ; அறைக்கண் – முறிக்கும் பக்குவம் உள்ளது. காயம் – வெங்குள்ளி என்ற தானியம் ; கவலை – அழகிய கொடிகளால் அமைந்த தாவரம்)

அம்மலைச் சாரலில் பல்வேறு விளைபொருட்கள், நன்றாக விளைந்து வளமான மலையாக சிறுமலை காட்சி தரும். பாண்டியனின் சிறந்த ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் இம்மலையினைக் வலப்புறமாகச் சுற்றிச் செல்வீராயின் மதுரையை அடையலாம் என்று வலப்புற வழியின் இயல்புகளையும் அங்கு விளைகின்ற தானியங்களையும் விரிவாகச் சொல்லி, உங்களுக்கு அவ்வழியில் செல்ல விருப்பமில்லாமல் இருந்தால் இடப்புற வழியாகச் செல்லுங்கள் அவ்வழி பற்றி உங்களுக்குத் தெளிவாகக் கூறுகிறேன். அவ்வழியே நீர் நிறைந்த ஆழமான குளங்களின் கரையில் சிறகினை உடைய வண்டுகள் செவ்வழி பண் போல ரீங்காரம் செய்யும் இனிய ஓசையையும் வளமான வயல்வெளிகளையும், குளிர்ந்த பூஞ்சோலைகளையுடைய மருத நிலத்தையும் அதன் பின்னர் சுரம் பல இடை இடையே கிடக்கின்ற காட்டு வழியையும் கடந்து செல்லவேண்டி வரும். அவ்வாறு செல்வீராயின் திருமாலிருஞ் சோலையை அடையலாம். (தற்பொழுது பழமுதிர்ச்சோலை). அந்த மலையில் பார்ப்பவர்க்கெல்லாம் மயக்கத்தைக் கொடுக்கும் பிலம் ஒன்று உண்டு (குகை) அந்தப் பெரும் குகையினுள்ளே என்றும் நீங்காத

சிறப்புகளோடு கூடிய மூன்று தீர்த்தங்கள் உண்டு. அவைகள் பவகாரணி, புண்ணியச் சரவணம், இட்டசித்தி என்ற பெயர் உடையவை. அங்கு புண்ணியச் சரவணம் என்ற பொய்கையில் நீராடுவீராகில், இந்திரனால் இயற்றப்பட்ட ஐந்திறம் என்றும் இலக்கணத்தை கற்றும் தேர்ந்தராவீர்.

"புண்ணியச் சரவணம் பொருந்துவீராயின்
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவீர்"

அடுத்து பவகாரணியால் மூழ்கி நீராடுவீராகில் இந்தப் பிறவிக்குக் காரணமாய் இருந்த முற்பிறவி பற்றி அறிவீர்கள்.

"பவகரணி படிந்து ஆடவீர் ஆயின்
பவகரணத்தின் பழம் பிறப்பெய்துவீர்"

இட்ட சித்தி என்ற குளத்தில் நீராடுவீராகில், நீங்கள் உங்கள் மனதில் எண்ணியவற்றையெல்லாம் பெறுவீர்கள்.

நீங்கள் இந்த பிலத்தினுள் நுழைய விரும்பினால், திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருக்கும் திருமாலை வணங்கி, அவனது திருவடிகளை உங்கள் சிந்தையில் கொண்டு, துதித்து, அம்மலையினை மூன்று முறை வலம் வந்தால், நிலத்தை அறுத்துக்கொண்டு செல்லும் சிலம்பாற்றின் அகன்ற கரை வரும். அங்கு "பொலங்கொடி மின்னின் புயலைங் கூந்தல், கடிமலர் அவிழ்ந்த கன்னிகாரத்து, தொடிவளை தோளி" யாகிய ஒரு இயக்கமாது தோன்றுவாள். அவளது பெயர் வரோத்தமை. அவள் உங்களிடம் ஒரு வினா வினவுவாள்.

"இம்மைக்கு இன்பமும், மறுமைக்கின்பமும்
இம்மையும் மறுமையும் இரண்டும் இன்றியோர்"
செம்மையில் நிற்பது"

எது என்று கூறுங்கள் என்று கேட்பாள். இந்த மூன்று உண்மைகளை சொல்லுவார்களுக்கு நான் எவ்வகையில் உரியவன் ஆவேன். அவ்வாறு உரைத்தால் இப்பிலத்தின் கதவுகளைத் திறந்து விடுவாள். அவள் காட்டுகின்ற நல்வழியிலே செல்வீராயின், பலவாயில்கள் தோன்றும். அவற்றுள் இரட்டைக் கதவினையுடைய வாயில் ஒன்று இருக்கும். ஆங்கு "வட்டிகை பூங்கொடி" ஒருவள் வந்து தோன்றுவாள். அவளும் இறுதியில் இன்பம் எது என்பதை எனக்கு உரைத்தால், நீங்கள் விரும்பிவந்த பொருள்களை காண முடியும் என்று கூறுவாள். உங்களால் எனது கேள்விக்கு பதில் கூறாமல் விட்டாலும் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன். துன்புறுத்தமாட்டேன். இந்த நெடுவழிக்கு அப்பால் கொண்டு போய் விட்டு விடுவேன். பொருத்தமான பதிரை உரைத்தீர்களேயானால், உங்களுக்கு மேற்சொன்ன மூன்று பொய்கைகளின் கரைகளை காட்டித் திரும்புவேன் என்று சொல்லுவாள்.

திருமறைகளால் போற்றப்படும் ஐந்தெழுத்து மந்திரமான "நமச்சிவாய" என்பதனையும், எட்டெழுத்து மந்திரமான "நமோநாராயணாய" என்பதனையும் மனம் ஒன்றி முறையாக நீங்கள்

ஓதி விரும்பிய பொய்கையில் நீராடுவீராயின், அதன் பயன் மிகப் பெரியது. நீங்கள் மற்ற பொய்கைகளின் பயன் எண்ணாது திருமாலின் அழகிய திருவடிகளை மனம் கனிந்து நினையுங்கள். அவ்வாறு செய்தால் கருடக் கொடிப்பறக்கும் நீண்ட கொடிமரம் உங்கள் கண்ணுக்குத் தெரியும். (புன் அணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்). அவனது இணையடிகளை நீங்கள் தொழுவதால், உங்கள் பிறவித் துயரைப் போக்கும். அந்நிலையில் மிகப் பேரின்பம் அடைவீர். பின்னர் அவ்வழியே மதுரைக்குச் செல்லலாம். கண்கூடாகக் காணும் பிலத்தின் தன்மை இதுவாகும் எனக் கூறினான்.

இவ்வாறு இந்த இரண்டு வழிகளிலும் உங்களுக்குச் செல்ல விருப்பமில்லையென்றால், இடைப்பட்ட வழி நல்வழியாக உள்ளது. தேன் சிந்தும் மலர்ச் சோலைகளையுடைய ஊர்கள், அவற்றின் இடை இடையே காடுகள் பல உண்டு. அவற்றைக் கடந்து சென்றால் ஆங்கோர் காட்டிலே உறையும் தெய்வம் ஒன்று எதிரே தோன்றும். ("ஆரிஞர் தெய்வம் நடுக்கஞ்சாலா நயத்தின் தோன்றி") காண்பார்கள் அதனைக் கண்டு நடுங்காதவாறு இனிய வடிவத்தோடு வந்து துன்பம் செய்யாது வழிப்போக்கர்களைத் தடுக்கும். அதனிடமிருந்து தப்பித்து மேல் நடந்து சென்றால், மதுரை மூதூர் செல்லும் மூன்று வழிகளும் ஒன்றாகச் சேர்ந்து, பெருவழியாக விளங்கும். ஆதலால் நீங்கள் சென்று வாருங்கள். நான் 'நீள் நிலங்கடந்த நெடுமுடியண்ணல்தாள் தொழுதகையேன்" ஆகையால் நான் என் வழியிலே போகிறேன் என்று மூன்று வழித்தடங்களையும் கூறி முடித்தான்.

இதனைக் கேட்ட கவுந்தியடிகள்

"பிலம்புகவேண்டும் பெற்றியீங்கு இல்லை.
கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்பாட்டு இயற்கையின் விளங்கக் காணாய்
இறந்தபின் எய்தியவெல்லாம்
பிறந்த பிறப்பில் காணாயோ நீ
வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா என அரும்பொருள்"

புண்ணியச் சரவணத்திலே மூழ்கி இந்திரனின் வியாகரணத்தை, அருகப்பெருமான் அருளிய பரமாகமத்தில் காணலாம். இப்பிறப்பிலேயே முற்பிறவியின் பயனையெல்லாம் காணுதலால், பவகரணியில் நீராடவேண்டாம். வாய்மையினின்று சிறிதும் பிறழாது மன்னுயிர்களை தன்னுயிர் போல் பேணுவோர் அடைய முடியாத அரும்பொருள் ஏதுமில்லை. எனவே இட்டசித்தியிலும் மூழ்கி நீராடுதல் வேண்டாம். நீ விரும்பும் திருமாலைக் கண்டு அவன் திருவடிகளைத் தொழ நீ செல்லுவாயாக. நாங்களும் நீண்ட வழியிலே மதுரைக்குச் செல்வோம் எனக் கூறினார். திருவரங்கத்தில் ஒரு நாள் கோவலன் கண்ணகியுடன் தங்கியிருந்து பின்னர் மதுரை செல்லலாயினர்.

மதுரை மூதூர் செல்லும் மூன்று வழிகளைப் பற்றி மாங்காட்டு மறையோன் சொன்னவைகளைக் கொண்டு சிந்தித்தால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், நாடுவிட்டு நாடு செல்லும் பொழுது எங்கெங்கு சோலைகள், காடுகள், பாலைநிலங்கள், ஆற்றங்கரைகள் மற்றும் பெருங்குடிகள் வாழும் ஊர்கள், பழங்குடிகள் வாழும் சிற்றூர்கள் இவைகளைப் பற்றி மக்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர் என்பது புலனாகிறது. காடுகளில் வாழும் விலங்கினங்கள், தீங்கு செய்பவை, ஊறுவிளைவிக்காதவை ஆகியவை பற்றியும், தெரிந்து வைத்திருப்பதைக் காணமுடிகிறது.

எனவே மதுரை மூதூர் பெருவழிக்குச் செல்லும் மூன்று பாதைகளும் அக்காலத்தே சிறப்புற்று விளங்கியதாகத் தெரிகிறது. இதனை மாங்காட்டு மறையோன் மூலமாகவும், கவுந்தியடிகள் மூலமாகவும் அறிய முடிகிறது.

கானல் வரி

"ஆரியத்துக் கங்கைதனைப் புணர்ந்திட்டாலும்
அகம்நோவா திருந்ததுன்றன் கற்பே என்று
தேரினேன் காவிரியே வாழி ! – என்றே
தேனென்று செந்தமிழைப் பாட லுற்றான்.

இவ்வாறு பாடியது கேட்டாள் : அன்னோன்
எண்ணந்தான் வேறொருத்தி மேல தென்றே
ஒவ்வாது மனம்கொதித்தும் உவந்தாள் போல
ஒளிவிழியாள் மாதவிதான் யாழை வாங்கிக்
"கவ்வியதேன் மலர்மழையே பொழியும் சோலைக்
காவிரியே பூவாடை அசையச் சென்றாய்
செவ்விதின்வா ழியநீதான் செல்வ தென்ன?
செம்மலுக்கே உளம்பதைத்தாய் வாழி !" என்றாள்.

நான் ஒன்று பாடினேன் அவளும் அஃதே
நவிலாமல் வேறொன்று நவில லானாள்.
தான்என்னை மறுத்தஒரு குறிப்புக் காட்டித்
தனிக்கின்றாள் என்றுகோ வலன்நி னைந்து
மீனவிழி மேல்இணைத்த கைவி லக்கி
விரைந்துசென்றான் ஏவலர்கள் சூழ்ந்து செல்ல !
ஆனதினால் மாதவியும் வண்டி ஏறி
அகன்றாள்தான் பெற்றசெல்வம் அகன்றா ளாவி.

கண்ணகி புரட்சிக் காப்பியம் 1992
– பாரதிதாசன்

சங்க இலக்கியம் காட்டும் - காவிரிப் பூம்பட்டினம்

புலவர் நா. தியாகராசன்

சங்க காலத் தமிழர் வாழ்வியலை வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாக விளங்குவது சங்கத்துச் சான்றோர் பாடல்களின் தொகுப்பான பாட்டும், தொகையும் ஆகும். இதன் கண் மிகத் தொன்மையான தமிழர் பண்பாட்டு அரசியல், சமூக வரலாற்று வாழ்வியலை விரிவாகக் காண்பதற்கு இவ்விலக்கியத் தொகுப்பு சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது. இதில் மேலை-நாட்டு அறிஞர்கள் குறிப்பையும், சமயச் சான்றோர் பாடல்களின் குறிப்பையும் துணையாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் காவிரிப்பூம்பட்டினம் குறித்த வரலாற்றியலை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க இலக்கியத்தில், புறநானூற்றில் "புகாஅர்" என்ற சொல்லாட்சியைக் காண முடிகிறது.

…………………. கூம்பொடு
மீப்பாய் களையாது, மிசைப்பரம் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடல்பல் தாரத்த நாடுகிழவோயே — (புறம். 30 : 11 – 15)

என்ற பாடலில் எடுத்த எடுப்பிலேயே ஆற்று முகத்தில் அமைந்த சிறந்த துறை முகப்பட்டினமாக உலகின் கடல் வாணிகச் சிறப்பை நனி விளக்கும் வகையில் வெளிப்படுத்தியுள்ளார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

மகர நெற்றிவான் தோய் புரிசைச்
சிகரம் தோன்றாச் சேண் உயர்நல்இல்
புகாஅர் நல் நாட்டதுவே — (அகம். 181 : 20 – 22)

எனப் பரணர், அகநானூற்றுப்பாடலில் மகரக் கொடியினை உச்சியிற் கொண்ட வானைத் தொடும் மதிலையும், முடி அறியப்படாதவாறு சேணின்கண் உயர்ந்த நல்ல மாடங்களையும் உடையதும் ஆகிய புகாரையுடைய, நல்ல சோழநாடு என்று விளக்கியுள்ளார்.

பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி,
கடுஞ் சூள் தருகுவன், நினக்கே — (அகம். 110 : 3 –5)

என்ற அகநானூற்றுப் பாடலில் போந்தைப் பசலையார் வளைந்த கழிகள் மேவிய புகாரிடத்துள்ள தெய்வத்தை நோக்கி சூள்செய்து தரும் தலைவன் குறித்து விளக்கிப் போந்தார்.

இருங் கழிப் புகாஅர் பொருந்தத்தாக்கி
வயச்சுறா எறிந்தென, வலவன் அழிப்ப – (அகம். 190 : 11 – 12)

என அகநானூற்றுப் பாடலில் உலோச்சனார் என்னும் புலவர் பெரிய கழியினையுடைய புகார்த் துறைமுகம் என்பதைச் சுட்டிச் செல்கிறார்.

குறும்பல் யாணர்க் குரவை அயரும்
காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ. – (பதிற்றுப்பத்து. 73 : 11 – 13)

என அரிசில் கிழாரும், பட்டினப்பாலையில்,

தீம்புகார்த் திரைமுன் துறை – (பட்டி. 173 – 174)
தேறு நீர்ப் புணரியோடுயாறுதலை மணக்கும்
மலி ஓதத்து ஒலி கூடல் – (பட்டி. 77 – 78)

என்றும் குறிப்பிட்டுள்ளார். இனிமையான புகார் நகரின் கடல் முன்துறை என்பதைக் குறிப்பிடுகிறார். உருத்திரங்கண்ணனார் மேலும் "மலி யோதத்து ஒலி கூடல்" என்ற வரிக்கு ஓதத்து ஒலி மலி கூடல் – ஓதத்தினால் ஒலி மலிந்த புகார் முகத்தே என நச்சினார்க்கினியர் விளக்கிச் செல்கிறார். "கடற்றிரையோடே காவிரிப் புனல் கலக்கின்ற, மிக்க ஓதத்தின் ஒலியையுடைய புகார் முகத்தே" எனவும் பொ.வே. சோமசுந்தரனார் உரை விளக்கம் தருகிறார்.

இவ்வாறாகச் சங்கப்பாடல்களில் 'புகாஅர்' என்ற பெயர் குறிப்பு காணப்படுகிறதே அன்றிக் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் சங்கப்பாடல் வரிகளில் காணப்படவில்லை என்பதும் சிந்தனையில் கொள்ள வேண்டும். மேலும் சில சங்கப்பாடல்களைக் காண்போம்.

"புதுவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை எம்மூர்" புறம். 166 : 28 – 29

என்று புறநானூற்றுப் பாடலில் ஆவூர் மூலங்கிழாரும்,

"காவிரி அணையும் தாழ்நீர் படப்பை
நெல்விளை கழனி அம்பர்கிழவோன்" – புறம். 385 : 8 – 9

என்று புறப்பாடலில் கல்லாடனாரும்,

"பூவிரி நெடுங்கழிநாப்பண் பெரும் பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத்தன்ன
செழுநகர்" – அகம். 205 : 9 – 11

என்று அகநானூற்றுப் பாடலில் நக்கீரரும்,

"செந்நெலம் செறுவின் அன்னம்துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டன்ன" – நற்றிணை. 73 : 8 – 9

என்று நற்றிணையில் மூலங்கீரனாரும்,

"நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க்கானத்து" – அகம். 220 : 18

என்று அகநானூற்றில் மதுரை மருதன் இளநாகனாரும் குறிப்பிட்டுள்ள வரிகளில், "தண்புனற் படப்பை" "தாழ்நீர் படப்பை" "காவிரிப் படப்பைப்பட்டினம்", "பூக்கெழு படப்பை", "நெடுங்கதிர்க் கழனி" என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறு புகுதலால் நீர்வளமும், நிலவளமும் கழனி வளமாகச் சிறப்புற்று விளங்கியதைக் காணலாம்.

புகாஅர் என்ற சொல்லுக்கு ஆற்றுமுகம் என்று பொருள்படும். புகு + ஆறு = புகாறு – புகார் என்றாயிற்று. இது எவ்வாறு ஒரு நகரத்தையே குறிக்கும் என ஐயம் எழலாம். எல்லாப் பொருளையும் சுட்டிவந்த ஒரு பொதுச் சொல் காலப் போக்கில் ஒரே பொருளை மட்டும் சிறப்பாகச் சுட்டுதல் உண்டு என்று மொழி நூல் புலவர்கள் கூறுவர். அது போலவே ஆறு புகும் இடம் பலவிருப்பினும் காவிரி புகும் இடத்திற்கே உரிய சிறப்புப் பெயராக அமைந்துவிட்டது.

"பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத்தன்ன" (205 : 11 – 12)

என்ற அகப்பாட்டில் நக்கீரர் "பூக்கள் விரிந்த நீண்ட கழியின் நடுவே, தோட்டங்களையுடைய, பெரிய புகழையுடைய காவிரிப் பட்டினத்தை ஒத்த செழுநகர்" என்பதில் காவிரிப் பட்டினம் என்ற பெயர் பொதிந்திருப்பதைக் காணலாம். மேலும் "கா" என்ற சொல்லுக்கு "சோலை" என்ற ஒரு பொருளுண்டு. "படப்பை" என்ற சொல்லுக்கு தோட்டம் என்ற பொருளுண்டு, அதன் வழி, காவிரி வளத்தால் தோட்டக் கூறுகள் நிறைந்த நகராதலால் "காவிரிப் (படப்பை) பட்டினத்தன்ன" என்றார் அதன் சுருக்கமே "காவிரிப்பட்டினம்" எனப் பெயர் பெற்றது எனத் தெளிதல் வேண்டும். (கா + சோலை) இருமருங்கும் விரிந்த சோலைகள் உடைய ஆறுபுகும் பட்டினம், காவிரி + புகும் + பட்டினம் காவிரிப் பூம்பட்டினம் என வழங்குகிறது.

அதுபோலவே "புகார்" என்பது இடத்தின் பெயராய் அமையவே அதன் பொருளை விளக்கும் வகையில் புகும் + புகார் (ஆறுபுகும் புகார்) என்று கூறினர் என்றும் அதுவே பூம்புகார் என்று வழங்குகிறது என்றும் ஒரு விளக்கம் காணலாம். "பூ" என்ற சொல்லுக்கு அழகு, பொலிவு என்ற பொருளுண்டு. ஆறு புகுதலால் பொழில் அழகு மிகுதல் காரணமாக புகார் என்ற பெயரின் முன் மகர ஒற்றுப் பெற்றுப் பூம்புகார் எனவும் வழங்கப்பெற்றது. இதற்கு அரண் செய்யும் வகையில் "பூவிரி நெடுங்கழி" என்ற சங்கப்பாடல் வரி எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது.

இவ்வாறாகப் புகார் – பூம்புகார் – காவிப்'படப்பைப்' பட்டினம் – காவிரிப் பூம்பட்டினம் எனப் பெயர் அமைந்துள்ளதைக் காணலாம்.

இப்பதியில் வாழ்ந்த புலவர்கள் காவிரிப் பூம்பட்டினம் என்ற ஊரை அடைமொழியாகக் கொண்டு விளங்கினர். காரிக்கண்ணனார், செங்கண்ணனார் சேந்தன் கண்ணன், கந்தரத்தனார், நப்பூதனார் ஆகிய புலவர் பெயர் முன் ஊர்ப் பெயர் அமைந்துள்ளது. அதுபோல், புகாரில் சிறப்புற்று விளங்கிய கழாஅர் முன்துறைப் பகுதியில் வாழ்ந்த இருபுலவர்கள்; கழார்க்கீரன் எயிற்றியார் என்ற பெண்பாற் புலவரும், கழார்க்கீரன் எயிற்றியனார் என்ற புலவரும் ஆவர்.

கழாஅர்த்துறை

சங்கப்பாடல்களில் "கழாஅர்", "கழாஅர் முன்றுறை", "கழாஅப் பெருந்துறை" எனறெல்லாம் குறிக்கப் பெற்றுள்ளது. காவிரி வளத்தால் செழித்த நிலத்தைக் "கழார்" என்று குறித்தனர் போலும். "கலைமாய் காவிரி கடல் மண்டு பெருந்துறை" என்றும் (அகம். 123), "காவிரி மண்டிய சேய்விரி வனப்பின் புகார்" என்றும் (பதிற்றுப்.73), "பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும்பெயர்க் காவிரிப் படப்பைப் பட்டினத்தன்னை" என்றும் (அகம்.205), முறையே காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், அரிசில் கிழார், நக்கீரர் முதலிய புலவர் பெருமக்கள் இந்நகர் பற்றியஉண்மைகளைக் கூறியுள்ளனர் என்பது தெளிவு. இதனால் பூம்புகாரில் வளமுடைய கழார் என்ற ஊர் ஒன்று உண்டென்றும் அவ்வூரின் முன் அமைந்ததுறைக்குக் கழாஅர் முன் துறை எனறும் பெயர் வழங்கி வந்துள்ளது என்பதும் தெளிவாகிறது. அன்றியும் புலவர் பெருமக்கள் தம் பெயரோடு ஊர்ப் பெயரையும் இணைத்தே கூறிவந்துள்ளனர் என்பதும் நாம் அறிந்ததே. இங்கு வாழ்ந்த கீரன் எயிற்றியார் என்ற புலவர் தம் ஊர்ப் பெயரையும் இணைத்துக் கழார்க் கீரன் எயிற்றியார் என்றே அழைக்கப் பெற்று வந்திருக்கிறார் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

"............................ கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரம் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" – புறம். 30

என்ற புறப்பாடல் கொண்டு நோக்கின், கடலிலும் ஆற்றுமுகம் ஆழம் குறைந்தது ஆதலினால் ஆங்கு வரும் மரக்கலங்கள் செவ்வனே நிற்றல் பொருட்டுப் பாய்களைதலும், பாரம் குறைத்தலும் வேண்டும். ஆனால் புகாரில் ஆற்று முகத்துப் புகுந்த பெருங்கலம் பாய் களையாது பாரத்தைப் பறியாமல் சென்றதால் காவிரி, ஆழம், அகலம், நீர் வேகம் உடைத்தமை புலப்படுகிறது. எனவே இது ஒரு கழியாறாகவும் விளங்கியது எனலாம். கழி சூழ்ந்த நகரம் என்று புலவர்கள் குறித்துள்ளனர். ஆதலின் கழி + ஆறு = கழியாறு – கழாஅர் எனவும் வழக்காற்றில் வந்திருக்கவும் ஏதுவாக உள்ளது.

"கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்" –அகம்.222

"பல்வேல் மத்தி கழாஅர் அன்ன" – அகம்.6

"பல்வேல் மத்திகழாஅர் முன்துறை" – அகம்.226

"................. தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழுஉம்
கைவண் மத்தி கழாஅர் அன்ன" – ஐங்குறு – மருதம்.61

"வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்" – நற்றி.281

என்றெல்லாம் சங்கத்துப் பாடலில் குறிக்கப் பெற்றுள்ள 'கழாஅர் முன்துறை' இன்று பிழைபடக் கழுதகாரன் துறை என்று மக்கள் வழக்கில் உள்ளது. கரிகாலன் இத்துறையில்தான் புதுப்புனல் ஆட்டுவிழாக் கொண்டாடி இருக்கிறான். இன்றும் இவ்வூர் மக்கள் ஆடிப்பெருக்கு விழாவை இங்குதான் கொண்டாடுகிறார்கள். சேரன்

அத்தியும், சோழ இளவரசி ஆதிமத்தியும் நீராடியபோது ஆட்டனத்தி காவிரிப் பெருக்கில் இழுக்கப்பட்டுக் கடலை அடைய மருதி என்னும் பெண் காப்பாற்றி மீண்டும் ஆதிமந்தியிடம் ஒப்படைத்தாள் என்பதும் வரலாறு. அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பெருந்துறைதான் இது என்றும், அந்நாளில் கழாஅர்முன் துறை என்று வழங்கி வந்த பெயர் இன்று தவறாகக் கழுதகாரன் துறை என்று வழங்குகிறது என்றும் தெளிவு பெறுதல் வேண்டும்.

இந்தக் கழாஅர்த்துறையில் தான் கரிகாற் பெருவளத்தான் புதுப்புனலாட்டு விழாவைக் கண்டு களித்தான் என்பதை,

"மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலி கதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு" – அகம்.376

என்ற அகப் பாடலில் பரணர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திர விழாநாள் முடிவில் புகார்க் கடற்கரையில் நடந்த புனலாட்டு விழாவை, கரிகாலன் காலத்தில், கழாஅர்த்துறையில் நடைபெற்ற புதுப்புனலாட்டு விழாவை ஒப்பிட்டுக் காட்டுகிறார் இளங்கோவடிகளும்,

"விண்பொரு பெரும் புகழ்க் கரிகால் வளவன்
தண் பதங் கொள்ளுந்தலை நாட்போல" – சிலப். 6 : 159 – 160

என்று கடலாடும் காட்சியை விளக்குகிறார்.

இந்தக் கழாஅர்த்துறை மத்தி என்பான் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது தெரிகிறது.

"வல்வில் எறுழ்த்தோள், பரதவர் கோமான்
பல்வேல் மத்தி கழாஅர் முன்துறை" –அகம். 226

என்று, வரலாற்றுச் செய்தியைப் பதிவு செய்யும் இயல்புடைய பரணர் கூறுகிறார். வல்வில் ஓரி என்பது போல வில்லாற்றலில் வல்லவன் என்பதும், பல்வகை வேற்படைகளையுடையவன் என்பதும் தெளிவாகிறது. படைபலம் பெற்றவன் மட்டுமல்ல, கொடைத்திறத்திலும் சிறந்தவன் என்பதை "கைவண் மத்தி கழாஅர்" (ஐங். மருத. 61) என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் வழியும் அறிகிறோம்.

சிற்றரசுகளும் பேரரசுகளும் அருகருகே இருந்தன என்பதைச் சங்கப் பாடல்கள் வழி அறியமுடிகிறது. பரணர், கபிலர், மாமூலனார், மாங்குடி மருதனார் பாடல்களில் அரசர், குறுநில மன்னர்களைப் பற்றிப் பாடிய பாடல்களே மிகுதியாக உள்ளன. குறிப்பாகச் சேர, சோழ பாண்டியர்கள் குறித்துப் பதினான்கு பேர்களும், குறுநில மன்னர்கள் குறித்து 59 பேர்களும் காணப்படுதலே சான்றாகும்.

கே.என். சிவராஜப்பிள்ளை, ஐந்து தலைமுறைகளில் வாழ்ந்த (கி.பி.150) இக்காலத்தில் திறைசெலுத்துவோராகவோ, அல்லது அரசுகளுக்குக் கீழ்ப்பட்டவராகவோ குலக்குழுத் தலைவர்கள் பலர் தென்னிந்தியத்தீபகற்பம் முழுமையும் பரந்த வாழ்ந்தனர் என்று கூறுகிறார்.

இக்கருதுகோளின் அடிப்படையில் மத்தி குறித்த ஒரு செய்தியைக் காண முயலலாம்.

"கல்லா எழினி பல்லெறிந் தழுத்திய
வன்கண் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை" – அகம்.211

இப்பாடல் வழி ஒரு போர்க்காட்சியைக் காணலாம். யானைகளை அகப்படுத்தும் வேட்டைக்கு எழினி என்பான் வராமையால் சினங்கொண்ட சோழன், மத்தி என்னும் படைத்தலைவனை அனுப்பி எழினியைக் கைப்பற்றி வரச் செய்தான். நடைபெற்ற போரில் வெற்றி பெற்ற மத்தி எழினியின் பல்லைப் பறித்து வந்து வெண்மணி என்னும் ஊரின் வாயிலில் கதவிலே பதித்தான் என்பதை மாமூலனார் பாடல் வழி அறிகிறோம். வெண்மணி என்னும் ஊரின் வாயிலிடத்தில் மத்தி என்பவனால் கட்டப்பட்ட கல் பொருந்திய பனித்துறை என்பதே அப்பாடல் தரும் செய்தியாகும்.

இதன்வழி பெருமன்னர்களுக்கு உட்பட்டு வாழ்ந்த படைப்பெருக்கமுடைய குறுநில மன்னர்களும், அவர்கட்டு அடங்காத குறுநில மன்னர்களும் இருந்தனர் என்பது தெரிகிறது.

இதன்வழி ஒன்று தெளிவாகிறது. புகாரின் வரலாற்றில் புகார்ப் பகுதியிலும் குறுநில மன்னர்களும் அவர்களுக்கு உயர்ந்த நிலையில் அரசர்களும் வாழ்ந்த காலம் மிகத் தொன்மையுடையது என்றும் தெரிகிறது. அதாவது சோழப் பேரரசு கரிகாலன் காலத்தே தான் பெருநிலை பெற்றது என்றும், அதற்கு முன்னைய நிலைவேறு என்றும் தெளிவாகிறது. இது பட்டினப்பாலை தோன்றும் காலத்திய முன்நிலை என்று முடிவு செய்யலாம். இதுபோன்ற பல நிகழ்வுகளைச் சங்கப்பாடல்கள் வழி அறியலாம்.

முடத்தாமக்கண்ணியார் பொருநராற்றுப்படையில் காட்டும் புகார் நகரக் காட்சிகளும் கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலையில் காட்டும் புகார் நகரக் காட்சிகளும் ஒப்பிட்டு நோக்கினால் ஒற்றுமை வேற்றுமைகளையும், பெருநகர வளர்ச்சி முறையையும் காணலாம்.

உறையூர் சோழ நாட்டின் உள்நாட்டுத் தலைநகராகவும் (பூம்புகார்) காவிரிப்பூம்பட்டினம் வாணிக வளம் பெற்ற கடற்துறைப் பட்டினமாகவும் அரசிருக்கையாகவும் விளங்கியது.

பொருநராற்றுப்படையில் சிற்றூர் காட்சியாகவே விளங்குகிறது. தேனும் கிழங்கும் மீனும் கள்ளும் கரும்புடன் அவலும் மான்கறியுடன் மதுவும் உணவாகக் கொள்ளப்பட்ட ஊர்ப்புறக் காட்சியாக அமைந்துள்ளது. ஆற்றுப்படை இலக்கியத்திற்கேற்ப பொருநனை விளித்துப் பாலையின் அமைப்பை முழுமையாக விளக்கி, பாடினியின் கேசாதிபாத வருணனை செய்து பரிசு பெற்றோன் பாடின முறை, அரசனின் விருந்தோம்பல் சிறப்பைக் கூறி, உணவளித்துப் பரிசு நல்கி வழியனுப்பி வைத்த நாகரிகக் காட்சியை அழகுறக் காட்டுகிறார். கரிகாலனின் வெண்ணிப் போர் வெற்றியைப் பாராட்டி சோழ நாட்டின் வளத்தையும் வனப்பையும் விளக்கி காவிரி நாட்டின் கழனி, வேலிக்கு ஆயிரம் கலம் நெல் விளையும் நிலவளத்தையும் கூறி முடிக்கிறார்.

புகாரில் நெய்தல் நிலமும், மருத நிலமும் ஒன்றைத் தழுவி அடுத்தடுத்து விளங்கிறது. ஒருநிலம் மற்றொரு நிலத்துடன் நெருங்கி இருத்தலால் ஒன்றற்குரிய கருப்பொருள்கள் முதலியன மற்றொன்றிற் சென்று பொருந்துதலாகும். பொருநராற்றுப்படையில் இத்திணை மயக்கத்தினைக் காணலாம்.

தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்;
தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்
நறும் பூங்கண்ணி குறவர்சூட;
கானவர் மருதம் பாட, அகவர்
நீல் நிறமுல்லைப் பல்திணை நுவல
கானக் கோழி கதிர் குத்த
மனைக் கோழி தினைக் கவர
வரை மந்தி கழி மூழ்க
கழி நாரை வரை இருப்ப
தண்வைப்பின் நால் நாடுகுழீஇ (215 – 227)

"குறிஞ்சி நிலத்துக் குறவர் தேனையும் கிழங்கையும் நெய்தனிலத்திலேவிற்று அங்குள்ள மீனின் நெய்யும் மதுவும் வாங்குதலும், மருத நிலத்துக்களமர் கரும்பையும் அவலையும் குறிஞ்சி நிலத்தில் விற்று அங்குள்ள மான்றசையும் தேனும் கொள்ளுதலும், நெய்தல் நிலத்துப் பரதவர் குறிஞ்சிப்பண் பாடுதலும் குறிஞ்சி நிலத்துக் குறவர் நெய்தற்பூச் சூடுதலும், முல்லை நிலத்து ஆயர் மருதப் பண்ணும், மருத நிலத்தாராகிய அகவர் முல்லைப் பண்ணும் பாடுதலும், முல்லையிலுள்ள கோழி மருதத்தில் நெற்கதிரையும், மருதநிலத்திலுள்ள மனைக்கோழி குறிஞ்சி சார்ந்த முல்லையிலுள்ள தினையையும் கவர்ந்துண்டலும், குறிஞ்சியிலுள்ள மந்தி நெய்தலின் கழியில் மூழ்குதலும், நெய்தலின் கழியிலுள்ள நாரை குறிஞ்சியிடத்து மலையிற் சென்று தங்குதலும் இயற்கை நெறி பிறழாமல் இதிற் கூறியிருப்பது கற்பார்க்குப் பெரியதோர் இன்பம் பயப்பதாகும்" என்று விளக்கும் நாவலர் நாட்டார் அவர்கள் மேலும், இங்ஙனம், ஒரு நாட்டின்கண் நிலங்கள் ஒன்றோடொன்று நெருங்கி அவற்றின் கருப்பொருள் முதலியன மயங்கியிருத்தலை அந்நாட்டிற்கு ஓர்சிறப்பாகக் கொண்டு புலவர்கள் அழகுறப் புனைந்து கூறி வந்திருக்கின்றனர் என்றும் எழுதிச் செல்கிறார்.

"முடத்தாமக் கண்ணியார் பொருநர் ஆற்றுப்படையில் சித்திரித்த பூம்புகாரும் பட்டினப் பாலையில் உருத்திரங் கண்ணனார் காட்டும் பூம்புகாரும் நகரவளர்ச்சியில் வேறுபாடுகள் தெரிவது மட்டும் உண்மை. சிற்றூர்கள் பல நிறைந்த சிறு நகரவளர்ச்சியிலிருந்து, சிற்றூர்களின் வேளாண்மை வளர்ச்சிகளோடு, உலக நாடுகள் வந்து, குழுமி, வாணிகம் புரிந்த பெருநகர வளர்ச்சிக் கூறுகள் வரை பட்டினப் பாலை குறிப்பிடும் பூம்புகார் பற்றிய புனைவுகளைக் காட்டுகின்றன."

இவ்வாறெல்லாம் விளக்கயவர், புகாரின் கடல் வாணிபச் சிறப்பு குறித்தோ, அயல் நாட்டார் வாழ்விடம் குறித்தோ, நகர அமைப்பு பறறியோ குறிப்பிடப்படாததை

என்றாலும், இது புகாரின் ஆரம்ப கால வளர்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளது. புகார் நகரம் பட்டினப்பாலையில் காணும் நகரப் பொலிவுக்கு மாறாக அதற்கு முந்தைய நிலையைப் பொருநராற்றுப்படை காட்டுவதாக அமைந்துள்ளது.

பட்டினப்பாலையில் காவிரியின் சிறப்பு, சோழநாட்டின் சிறப்பு, நகரச் சிறப்பு, மக்களின், வாழ்வியல் முறை கடற்காட்சி வணிகவளத்தின் சிறப்பு, வளம் நிறைந்த தெருக்கள், வணிகர்களின் வாழ்க்கை முறை, பலமொழி பேசும் புலம் பெயர்ந்த மக்கள், திருமாவளவன் பெற்ற வெற்றிப்போர்கள், அவனது ஆற்றல், உறந்தையைப் புதுக்கிய நிலை இவற்றை விளக்கிக் கூறியுள்ளார்.

இதன்வழி பட்டினப்பாலையில் புகார்ப் பெருநகரின் அமைப்பும், வணிக வளமும் நன்கு தெரிகிறது. குறும்பல்லூர் பலவும் ஒருங்கிணைந்த நெடுஞ்சேணாடாகக் காட்சி அளிக்கிறது. பொருநராற்றுப்படையில் சிற்றூர்களாகக் காட்சியளிக்கிறது.

நீர்மேலாண்மை

காவிரிபாயும் நாடாதலால் பொன் கொழிக்கும் வளநாடாக சோழ நாடு சோறுடைத்து என்று புகழ்ந்து கூறுமாறு உள்ளது. சங்க காலத்தில் காவிரியும், அரிசிலாறும் சோழமண்டலத்தைச் செழிப்பிக்கச் செய்தன. கரிகாற் சோழன் காலத்தே காவிரியின் நீர்ப் பெருக்கைக் கட்டுப்படுத்தி வேறு வேறு ஆறுகள் மூலமாகப் போக்கி நீர் மேலாண்மையைச் செம்மைப்படுத்தினான். காவிரி – கொள்ளிடம் – கல்லணை, பிரிவும் அமைப்பும், நீர்வளம் – பெருக – நிலவளம் சிறந்தது. காவிரிக்கு கரையெடுத்து, அணைகட்டிப் பலகிளை வாய்க்கால்களையும் வெட்டி, நீர்த் தேக்க மதகுகளையும் அமைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்தினான்.

"பூவிரி புதுநகர்க் காவிரிபுரக்கும்
தண்புனற்படப்பை எம்மூர்" – புறம். 166

"காவிரி அணையும் தாழ்நீர் படப்பை
நெல்விளை கழனி" – புறம். 385

என்று புற நானூற்றுள் காவிரி அணைவதால் கழனியில் நெல் கொழிக்கின்ற காட்சியைக் காணமுடிகிறது. இதற்குச் சான்றாக புகாரில் வாணகிரியில், திருமேனிப் பள்ளம் என்ற இடத்தில் புதைபொருள் ஆய்வில் கிடைத்த நீர்த் தேக்கம் அமைந்துள்ளது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று முடிவு செய்கிறார்கள். செங்கற்களால் கட்டப்பெற்றுள்ளது. இரண்டு மீட்டர் உயரம் உடையதாகவும், நீர் வெளியேறும் வாயில் 83 மீட்டர் அகலம் உடையதாகவும் அமைந்துள்ளது. நீர் வெளியேறும் வாயில் அமைப்பு வியக்கத்தக்க அளவில் அமைந்துள்ளது. இருபக்கமும் அரைவட்ட வடிவத்தில் எட்டுமீட்டர் உள்பரப்பிடத்தையும் கொண்டதாக அமைந்துள்ளது. நீர் வெளியேறும் போது நிலத்தை அரித்துவிடாமல் தண்ணீர் செல்ல படிப்படியாகக் கல்வரிசை அமைக்கபபெற்றுள்ளது. இருபக்க வளைவுகளும் மிக நேர்த்தியாக வடிவமைக்கப் பெற்றுள்ளன.

தவப்பள்ளி

பகட்டெருத்தின் பல்சாலைத்
தவப் பள்ளி தாழ் காவின்
அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும் – பட்டி. 52 – 54

என்ற வரிகளுக்கு நச்சினார்க்கினியர் தவஞ்செய்யும் அமண் பள்ளி பௌத்தப் பள்ளிகளையும் என்று விளக்கம் தந்துள்ளார்.

குளிர்ந்த நன்னீர் நிறைந்த சிறுகுளங்கள் பெரிய எருதுகளுக்கு வைக்கோல் இடும் சாலைகள், துறவிகள் தவம் புரியும், சமண பௌத்தப் பள்ளிகள் காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்தன என்பது தெரிகிறது. இதனை உறுதி செய்யும் வகையில் தொல் பொருள் ஆய்வு வெளிப்படுத்துகிறது மேலையூர் பல்லவனீச்சுரம் நகரத்தார் விடுதிக்கு கிழக்குப் பக்கத்தில் பௌத்த விகாரை அமைந்துள்ளது. இங்கு புத்தபிரானை வழிபாடு செய்வதற்கும் துறவிகள் தங்குவதற்கும் ஏற்ற வகையில் கட்டடம் அமைந்துள்ளது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் உறவினரான மகிந்தன் என்பான் இலங்கை செல்லுமுன் காவிரிப் பூம்பட்டினத்தில் தங்கி அங்கு ஏழுபுத்த விகாரங்களைக் கட்டினான் என்றும், அதுவே இலக்கியத்தில் இந்திரன் கட்டியதாகக் கூறப்பட்டுள்ளது என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். (மகாஇந்திரன் என்னும் பெயர் பாலியில் மகிந்தன் என வழங்கும்). கி.பி. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. 8 ஆம் நூற்றாண்டுவரை பௌத்த மதம் சிறப்புற்றிருந்ததை மெய்ப்பிக்கும் அளவில் பல ஆதாரங்கள் புதை பொருளாய்வில் வெளிப்படுத்தி உள்ளனர்.

குறிப்பாக ஆதிச்ச... நல்லூரின் புதை குழியில் கிடைத்துள்ள மனித எலும்புக்கூடு அமைந்தது போல புகாரில் கண்ட பௌத்த விகாரையில் மாட்டின் தாடை, விலா எலும்புகள் உள்ளடக்கிய சிறுவட்ட வடிவ அமைப்பில் செங்கற்களால் அமைத்து அடக்கம் செய்யப் பெற்றிருப்பது "பகட்டெருத்தின் பலசாலை" என்ற பட்டினப்பாலை வரிக்கு இதை ஒரு புனிதச் சடங்காகக் கொள்ளலாமா? என எண்ணத் தோன்றுகிறது.

இக்கட்டுரையில் காவிரிப்பூம்பட்டினம் கழிசூழ்ந்த நிலப்பகுதியாகவும், சோலைகள் நிறைந்த அழகிய தோட்டக் கூறுகளையுடையதாகவும் பலநிலையில் விளக்கப்பட்டுள்ளது. உப்பங்கழிகள் வழியாக உள்நாட்டுப் பண்டங்களை ஓடங்களின் உதவியால் இடம் மாற்றிக் கொண்டனர் என்பதே புகாரின் தொன்மைக் காட்சியாக விளங்குகிறது.

இக்கழிகளில் அமைந்திருந்த படகுத்துறையை இந்திய, தமிழகத்தொல் பொருளாய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்த செய்தி ஒன்று பட்டினப்பாலையில் காணப்படுகிறது. அது புகாரின் வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

"வெள்ளைஉப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்
கழிசூழ் படப்பை" – பட்டினப்பாலை 29 – 32)

என்ற பட்டினப் பாலையின் வரிகள் வரலாற்று ஆவணமாக விளங்குகிறது. உமணர்கள் வெண்ணிறமுடைய உப்பினை விற்றுத் தாங்கள் பெற்ற நெல்லை ஏற்றிக் கொண்டு வந்த படகுகளைக் கட்டுத்தறியில் குதிரைகளைப் பிணிக்கு மாறுபோலே உப்பங்கழிகள் சூழ்ந்த தோணித் துறைகளில் கட்டப்பட்டுள்ள படகுகளின் காட்சியை, அழகுறப்படம் பிடித்துக் காட்டுகிறார் உருத்திரங் கண்ணனார். இப்பகுதியில் கீழையூர் மங்கை மடத்தில் ஒரு படகுத் துறையும், மணிக்கிராமத்தில் கிளார்வெளிவயல் பகுதியில் ஒரு படகுத்துறையும் காணப்படுகிறது. இதில் புதைக்கப்பட்டிருந்த மரக்கம்பங்களில் படகுகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம். இங்குக் கிடைத்த மரத்துண்டு கார்பன் 14 என்னும் விஞ்ஞான முறைப்படி பரிசோதிக்கப்பட்டது. அதன் படி அது சுமார் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்துறை மிகப்பெரிய அளவிலான செங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் மிகுதியான, நீர் ஓட நீரோடும் பாதை அமைந்துள்ளது. அதன் இருபக்கமும் சற்று உயரமான தளம் அமைந்துள்ளது. நடுப்பகுதியில் வரிசையாக மரக்கம்பங்கள் புதைக்கப்பட்டுள்ளன. இது படகுகளைக் கட்டப்பயன்பட்டது.

இக்காட்சி கழிசூழ் படப்பையில் காணும் ஓடங்களுக்கென அமைந்த படகுத்துறையாகும். இது போலவே காவிரிப்பூம்பட்டினத்துக் கடலில் பெருங் கலங்கள் நிற்கும் துறைமுகத்தையும் உருத்திரங்கண்ணனார் காட்சிப்படுத்துகிறார்.

"வெளில் இளக்கும் களிறு போலத்
தீம்புகார்த் திரை முன்துறைத்
தூங்குநாவாய் துவன்று இருக்கை
மிசைக் கூம்பின்நசைக் கொடியும்" (பட்டினப். 172 – 175)

எனக் கம்பத்தில் கட்டப்பட்டுள்ள யானை அசைந்து அசைந்து நிற்பது போல புகாரின் நீர் அலைகளையுடைய கடற்கரைப் பகுதியில் நாவாய்கள் அசையும் கொடியோடு நின்று கொண்டிருக்கும் காட்சியையும் உவமைவழிச் சுட்டிக்காட்டுகிறார். முன்னர் படகு பிணிக்கப்பட்ட காட்சிக்குக் குதிரை வரிசையை உவமையாகக் கொண்டவர், இங்குப் பெரிய மரக் கலங்கள் நிறுத்தப்பட்டுள்ளதை யானையின் அசைவை ஒப்பிட்டுக் காட்டுகிறார். புகாரில் கலங்கரை விளக்கம் இருந்த கடற்பகுதியில் மரக்கலங்களும், படப்பைச் சூழ்ந்த நிலப்பகுதியில் படகுகளும் நிறுத்தப்பட்டிருந்தன என்பதை இலக்கியவழி அறிகிறோம்.

"அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு" – பட்டினப். 192 – 193

"பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன்று இருக்கை" – பட்டினப். 211 – 212

உலகின் சந்தையாக விளங்கிய புகார் நகரில் மொழி பெயர் தேயத்தோர் பலரும் கூடி கலந்து இனிது உறையும் பட்டினத்தைக் கண்ட தாலமி என்ற நில நூல் ஆசிரியர் KHABERIS AN EMPORIUM எனக்குறிப்பிடுகிறார். காவிரியின் துறை முகத்துவரின், உலக நாடுகளில் உள்ள அனைத்துப் பொருள்களையும் ஒருசேரப் பெறமுடியும் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறார். உலகின் பொருள்களை எல்லாம் ஒரு சேரத்

தொகுத்து வைத்திருக்கும் திருக்கோலத்தைத்தான் (Emporium) எம்போரியம் என்ற சொல்லால் தாலமி குறிப்பிட்டுள்ளார்.

Ptoremy mentions "Khaberisan Emporluam" which has been identified in the Kaverippattinam. Hementions also the mouth of river "khaberis" which has been recognised as the mouthof the river Kaveri. Mr. Crimdle in India, Antiquary Bombay, xii, 332/333.

புலவர் பெற்ற பரிசு

கரிகால் பெருவளத்தான் வடபுலத்து படையெடுப்பில் அம்மன்னர்கள் தந்த பரிசுப் பொருள்களைக் கொண்டு பதினாறுகால் மண்டபம் ஒன்று கட்டினான். கடியலூர் உருத்திரங்கண்ணனார் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துப் பாடிய பட்டினப்பாலை என்ற நூல் அதில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அந்த பதினாறுகால் மண்டபத்தையே புலவர் பெருமானுக்குப் பரிசாகக் கொடுத்தான். மண்டபத்தைக் காக்க இயலாது என்று எண்ணி அதற்கு விலையாகப் பதினாறு நூறாயிரம் பொன்னைக் கொடுத்து மீண்டும் பெற்றான் என்றும் தெரிகிறது. இது குறித்து பண்டாரத்தார் அவர்கள் பதினாறுகால் மண்டபம் என்று ஒரு கட்டுரையைச் சிங்கப்பூர் தமிழ் முரசு பொங்கல் மலருக்கு அனுப்பி இருக்கிறார். அந்த மலர் நண்பர் வழி பெற்றேன். அந்தக் கட்டுரையில் இக்கருத்து பதிவு செய்யப் பெற்றிருந்தது. பதினாறுகால் மண்டபம் குறித்து திருவெள்ளறைக் கல்வெட்டுப் பாடலும் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்ப் பாடலும் சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி பாடலும் சான்றாக அமைந்துள்ளன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காவிரி நாட்டைச் சிதைத்த போது இம்மண்டபத்தை மட்டும் இடிக்காமல் விட்டான் என்றும் இது புலவர் பெற்ற பரிசு என்பதால் அதை மட்டும் இடிக்காமல் விட்டுச் சென்ற செய்தியைத் திருவெள்ளரைக் கல்வெட்டுப் பாடல் வழி அறிகிறோம்.

சங்கப்பாடல்களில் வரும் நெய்தல் வாயில் (நெய்த வாசல்) சாய்க்காடு ஆலங்காடு (ஆலமுற்றம்) பொறையாறு குராப்பள்ளி போன்ற ஊர்ப் பெயர்கள், புகார் நகர நில அமைப்பைக் காண உதவுகிறது.

குறிப்பாகக் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியுள்ளார். குராப்பள்ளி என்பது தில்லையாடிக்கு அடுத்துள்ள ஊராகும். திருவிடைகழி என வழங்குகிறது. இங்குள்ள இறைவனுக்கு திருக்குராவுடையார் என்பது பெயர் (AR. No. 269 of 1925). இக்கோயில் மிகப் பழமையானதொரு சிவன் கோயில். சோலோச்சுரம் என்ற பெயருடன் இருப்பதாகும். அது குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவனது பள்ளிப் படைக்கோயிலாக இருக்கலாம் என்றும் காலஞ்சென்ற சீகாழி சைவத்திரு, முத்துத் தாண்டவராயபிள்ளை கூறியுள்ளார்.

புகாருக்கு தெற்கே பொறயாறு கடற்கரையில் அமைந்துள்ளது தரங்கம்பாடியில் உள்ளதோர் ஊராகும். இவ்வூரை பெரியன் என்பான் ஆட்சி செய்தான் என்பதை,

"பாடுநர் தொடுத்த கைவண்கோமான்
பரியுடைநல்தோர்ப் பெரியன்" (அகம். 100: 11-12)

என அகநானூற்றில் உலோச்சனார் கூறுதல் காணலாம். புலவர்க்கு வரையாது வழங்கும் வள்ளல் தன்மை மிக்கவன் "பொறையாற்றுகிழானைக்கல்லாடனார்" பாடியது என புறநாற்று பாடல் 391 ன் அடிக்குறிப்பில் காணப்படுகிறது. அவன் கொடை நலம் குறித்துப்பாடுகிறார். நற்றிணை (131) பாடலில் உலோச்சனார்,

> "நரவு மகிழ் இருக்கைநல்தேர் பெரியன்
> கள்கமழ் பொறையாறு"

என்று இவனைச் சிறப்பித்துப் பாடுகிறார். இவ்வூர் இன்றும் பொறையாறு என்றே வழங்குகிறது.

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்னும் சோழ அரசன் புறப் பாடல் 10-ல் சிறப்பிக்கப்படுகின்றான். நெய்தலங்கானல் என்பது இச்சோழன் பிறந்த ஊராகும். நெய்தலங் கானல் நெடியோய் என்று ஊன் பொதி பசுங்குடையார் கூறுவர். புகார்ப் பகுதியில் உள்ள நெய்தவாசல் என்ற ஊர் உள்ளது காவிரியின் வடபகுதியில் அமைந்துள்ளது. நெய்தல் நிலப்பகுதியாகவும் உள்ளது. அண்மையில் கடலகழாய்வு செய்த போது இப்பகுதி வழியாக காவிரி சென்றதற்கான வழித்தடம் கடற்பகுதியில் காணப்படுகிறது. அதன் முடிவிடத்தில்தான் கரையப்பார் கட்டிடப் பகுதிகள் இவ்வாற்றுத்தடத்தின் இருமருங்கும் காணப்படுகிறது. இதற்கு ஏற்ப அப்பகுதியில் நெய்தவாசல் பாசனவாய்க்காலும் அமைந்துள்ளது. அதன் எதிர்திசையில்தான் கரையப்பார் பகுதி அமைந்தள்ளது. எனவே இதுவே நெய்தலங்கானல் எனக் கொள்ளலாம்.

பட்டினப்பாலையில் காணும் "உறைக்கிணற்றுப் புறச் சேரி" இருந்த இடங்களை உறுதி செய்யும் வகையில் பல இடங்களில் உறைக்கிணறுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக கடற்கரையில் அண்ணா ஆய்வு மாளிகை அமைந்துள்ள இடத்தில் 1950 களில் குடியிருந்த மீனவர்கள் உறைக்கிணற்றைப் பயன்படுத்தி வந்தனர். நான் நேரில் கண்டு அந்த நீரையும் உண்டிருக்கிறேன். மேலும் வாணகிரி, நெய்தவாசல், மேலையூர் பகுதிகளின் ஆய்வில் உறைக்கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாகப் பல நிலைகளில் காவிரிப்பூம்பட்டினத்தின் தொன்மைக்கால செய்திகளைச் சங்க இலக்கியங்களில் காணும் நகர அமைப்பு, கடல் வணிகச் சிறப்புகள் நிலவளம் குறித்த செய்திகள் யாவும் இன்று ஆய்வு மூலம் வெளிப்பட்டிருப்பது சிறப்பாகும். சேர, பாண்டிய நடுகளின் தலைநகர் குறித்த ஆய்வில் தெளிவுதராத நிலையில் சோழ நாட்டின் தலைநகரைச் சுட்டிக்காட்டும் வகையில் பல்வகை வரலாற்று மூலங்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது கண்டு மகிழலாம். சேர, பாண்டிய தலைநகர் இருந்த இடம் தெளிவு பெறாத நிலையில் புகாரும், உறையூரும் தெளிவுடையதாக அமைந்துள்ளமை நாம் செய்த தவப்பயனாகும்.

சிலம்பு உள...

மகேஸ்வரி சற்குரு

“சிலப்பதிகாரத்தின் பெயரால் இலக்கிய இன்பம் ஒன்றை படைக்கவேண்டும்” என்ற பேராவல் கொண்டவர் ம.பொ.சி. தமிழகத்தின் மாபெரும் வரலாற்று ‘சொற்களஞ்சியம்’ சிலப்பதிகாரம். சிறையிலிருந்து ஏற்றம் பெற்றவள் சீதை மட்டுமா? ஆகஸ்டு புரட்சியில் அமராவதிச் சிறையிலே (1942) அமர காப்பியம் படித்தபின் தன் நெஞ்சத்திலே சிலம்புக்கு சிம்மாசனம் இட்டு அமரவைத்த ம.பொ.சி. அவர்களுக்கு ஏற்றம் தந்ததும் சிறையே. தன் மனதில் கோவலனை சிறை வைத்ததாலேயே, தன் மாளிகையை சிறையாக்கினாள் ஒருவள். துன்புற்றாள் அப்பேதை. கொண்டவனின் அதீத அன்பினால் திக்குமுக்காடிய கோவலன் சுதந்திரப் பறவையாய் வெளியேறினான். சிறகொடிந்த பறவையானாள் பாவை. கோவலனின் நினைவுகள் மனம் கொத்திப் பறவையாக மாற, ஆசைகளும், கனவுகளும் சிறையிடப்பட்டன அவளுக்கு. அவளே கண்ணகி எனும் காப்பிய நாயகி.

மாதவியே தவம் என இருக்கின்றான் கோவலன். நித்யகண்டம் பூரண ஆயுள் என இருக்கின்றாள் கண்ணகி. மாதரசி மாதவியிடம் இருந்து பிரிந்து வருகின்ற கோவலன், காத்திருந்த... கண்ணகியை காணுகின்ற காட்சியின் கட்டுரை இது...

மாற்றானின் மகவுக்கு பாலூட்ட, பால்விக்கி அக்குழந்தை இறந்துபோக துயருறுகின்றாள் மாலதி என்கின்ற பெண். அவள் தன் துயரை மறையவன் பாசண்ட சாத்தனிடம் சொல்கின்றான். மனம் இறங்கிய மறையோன் தன் மந்திரத் திறத்தால் பச்சிளம் குழந்தையாக மாறி மாலதியின் சேயானான். வளர்ந்து வாலிபப் பருவம் எய்துகிறான். தேவந்தி என்பவளை மணக்கின்றான்.

சமயத்தே தவம் மேற்கொள்கிறேன் என்று சென்றுவிட செய்வதறியாது திகைத்த தேவந்தி மீண்டும் இறைவன் சன்னதி அடைக்கலம் ஆகின்றாள். அங்கு தெய்வப் பணி செய்து வாழ்ந்து வருகின்றாள். கண்ணகி என்பவள் தன்னைப்போலவே கணவனைப் பிரிந்து துயர் உறுகின்றாள் என்பதை அறிகின்றாள். அவள் துயர் போக்க எண்ணுகிறாள்.

எல்லா தெய்வ சன்னதிகளிலும் குறைகள் மட்டும் சொல்லப்படுவதில்லை. ஊர்க்கதையும் அங்கே பேசப்படுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டு இது.

பெண்ணின் மனதை பெண்ணே அறிவாள் என்னும் எண்ணத்திற்கு ஒப்ப தேவந்தி கண்ணகியின் துயரைப் போக்க நினைத்து, கண்ணகியின் இல்லம் செல்கின்றாள். முழுமுதற் கடவுள் விநாயக அருகம்புல்லும், உலகின் உன்னதப் பறை நெல்லும், சங்கராந்தியை வரவேற்கும் பூளைப் பூவும் ஆக மூன்றும் தூவி “நீ கணவனோடு சேர்ந்து வாழ்வாயாக” என்று வாழ்த்துகிறாள்.

வாழ்த்தே வசந்தமாக மாறுமா என்ற வினாவுடன் கண்ணகி நோக்குகின்றாள் தேவந்தியை. உற்ற தோழி பாடம் உற்றது உரைக்கும் நோக்குடன் "என் கனவில் என் கணவன் வந்தான்" என் கரம் பற்றி வருக என அழைத்தான். இருவரும் வேறு நகர் செல்கின்றோம். அங்கு அவனுக்கு தீங்கு விளைகின்றது" என்று சொல்கிறாள். கற்பில் சிறந்த பெண்களுக்கு பின்னது முன்பே தெரிவதால்தானோ என்னவோ பெண் புத்தி பின் புத்தி ஆனது.

தேவந்தி ஆற்றுப் படுத்துகின்றாள். நாம் நெய்தலில் உள்ள காமவேள் கோயில் சென்று சோமகுண்டம், சூரிய குண்டம் நீராடி வேண்டி வருவோம். கணவனுடன் இணைவோம் என்கிறாள். கண்ணகியின் பெண்ணீயம் பேசுகின்றது 'அது பெருமை அல்ல' "பீடு அன்று" என்கின்றாள். தன் அன்பாலும் பண்பாலும் அவனை அடைய முடியுமே தவிர காமவேள் துணையுடன் அவனைப் பெற்றால் அது தற்காலிக மாற்றம். இதுதான் கண்ணகி ! செய்வினைகளும் மந்திரங்களும் செய்து பிடித்தவர்களை அடைவதும், பிடிக்காதவர்களுக்கு தீங்கு செய்வதும், போலியான பகட்டு விளைவிக்கும். இதனை அறிந்தவள் நம் நாயகி கண்ணகி. விதியின் வழி நிற்கின்றாள் ; கற்புத் திறத்தால் நிமிர்கின்றாள்.

இவர்களின் உரையாடல் இடையே குற்றேவல் செய்யும் சிறுபெண் வந்து சொல்கின்றாள் "நம் கடை வாயிலிலே வந்துள்ளான் கோவலன். "கேட்ட மாத்திரத்திலே இராமனின் கணையாழியை அனுமன் தந்தபோது சீதை பெற்ற பேரின்பம் பெற்றாள். அவ்வின்பத்திலே லயித்துக் கொண்டிருக்கையிலேயே கோவலன் தன் மனையாட்டியை பார்க்கும் திறன் இன்றி பள்ளியறைக்குள் செல்கின்றான் தலைகுனிந்தபடி. தன் மனையாளின் கற்பின் திறத்தால் வெளியே தலை நிமிர்கின்ற ஆண், தன் இல்லத்தில் அவளின் உன்னதத்தால் வெட்கித் தலைகுனிவான். இச்செயல் போதும் அவன் திருந்தி திரும்ப வந்ததற்கு சான்று.

"யாவும் சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக் குலம்தரு
வான்பொருள் குன்றம் தொலைந்த இலம்பொடு நாணத்தரும் எனக்கு".

நான் எல்லாம் தொலைத்தேன் தவறுதான். இந்த செயல் எனக்கு நாணத்தைத் தருகின்றது என்று வெட்கித் தலைகுனிகின்றான்.

கணவனின் கவலையுள்ள பேச்சை கேட்ட கண்ணகி, பெண்ணுக்கு உரிய இயல்புடன் இரக்கம் பொங்கப் பார்க்கின்றாள்.

"சிலம்பு உள... கொணம்..."

சிலப்பதிகாரத்தின் திருப்புமுனை சொற்றொடர் இது. பொற்குவைகளையும் சுவைகளையும் தொலைத்துவிட்டு பின் திருந்தி முன் கேட்கின்றான் கண்ணகியிடம் ! கையேந்துகிறான் காதலன். கனிவு தருகின்றாள் கண்ணகி. சிலம்பு தன் செயலைச் செம்மையுறச் செய்கிறது...!

சிலம்பின் சீற்றம்
மனையறம் படுத்த காதை

ஒண்டிப்புதூர் கவிஞர் மு. நடராசன்

திருமணம் முடிந்தபின் திருமகளும் திருமாலும் போல்
நறுமண மலர்ப்படுக்கை எழுநிலை மாடத்து இடைநடு
மாடத்தில் மனம்மிக மகிழந்திருக்கும் வேளை முழு நிலா
மாடம் முற்றம் காண மடமனையாளுடன் சென்றுழி
இளநகைபுரியும் இன்ப ஊற்றில் அன்பொடு இழைய
புளங்காகிதம் கொண்டு புனைந்த கட்டுரை கேளீர்

செங்குமுத மலர்போலும் வாயைக் கண்டேன்
தேனிதழ்கள் விரிந்திடவும் முல்லை கண்டேன்
இங்கிதமாம் சிரிப்பினிலே யாழைக் கண்டேன்
இன்னமுதாம் தமிழினிலே பேசக்கண்டேன்
அங்கமெலாம் ஆனந்தம் பொங்கக் கண்டேன்
அடியெடுத்து நடக்கும்போ தன்னங்கண்டேன்
தங்கநிற முகத்தினிலே குவளைகண்டேன்
தடுமாறிப் பின்னர்தான் விழியைக் கண்டேன்

பொன்னிறத்து முகத்தினிலே பிறையைக் கண்டேன்
புகழ்மணக்கும் சவ்வாது பொட்டைக் கண்ட
பின்னர்தான் பிறைநுதலென்று றுணர்ந்து கொண்டேன்
பித்தேறிய உளத்தோடு பின்னுங்கண்டேன்
சின்னஇரு கருவளைவை வில்லோவென்று
சிந்தைதடு மாறுமுனர் புருவங்கண்டேன்
மின்னலது மேகத்திடை மின்னக் கண்டேன்
மின்னியது மறையாமல் ஒளிரக் கண்டு

கரும்பட்டுக் கூந்தலினை வாரிவிட்டுக்
கண்கூட வகிடெடுத்த வண்ணங்கண்டேன்
அரியபல இன்பொருள்கள் இன்னுங் கண்டேன்
அவையாவும் புன்கவியில் அடங்காதென்பேன்
சரிசமமாம் இன்பங்கள் இதுபேரலெங்கும்
தனித்தனியாய்க் கிடக்கின்ற பான்மையன்றி
வரிசையதாய் யாவையுமே ஒன்றாய்க்கூட்டி
வழங்கிடுமென் கண்ணகியோ லெங்குங்காணேன்

அரங்கனும் அடிகளும்

முனைவர் க.முருகேசன்
தமிழ்த்துறைத்தலைவர்

நந்தமிழ் நிலத்தில் செந்தமிழ்ச் சமயங்களாக விளங்கும் சைவத்திற்கும் வைணவத்திற்கும் சங்க இலக்கியங்கள் தோற்றுவாயாகத் திகழ்கின்றன. தொல்காப்பியம் சிவபிரானைக் 'கடவுள்' என்ற சொல்லால் குறிப்பிடுவது போல, திருமாலையும் தெய்வமாகச் சாற்றுகின்றது. வெட்சித்திணையின் கரந்தை முதலிய பிற பகுதிகளைக் குறிப்பிடும்பொழுது தொல்காப்பியர் மாயவனாகிய திருமலைச் சிறப்பித்து ஏத்திய குறையாத சிறந்த புகழை உடைய பூவை நிலையை,

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
காவா விழுப்புகழ் பூவை நிலையும்" (தொல்., பொருள்., புறட்., நூ.1006)

என்று சுட்டுகின்றார். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடலில் இன்று கிடைத்துள்ள ஆறு பாடல்கள் திருமாலை வணங்குவதாக அமைந்துள்ளன. கீரந்தையார் என்னும் புலவர் "செய்யோள் சேர்ந்த நின் மாசுஇல் அகலம்" (பரிபாடல், பா.2) என்று திருமகளைப் பிரியாத தெய்வமாகத் திருமாலைப் போற்றுகின்றார்.

"நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலோய் நின்
சேவடி தொழாரும் உளரோ ? " (பரிபாடல், பா.3)

என்று கடுவன் இளவெயினனார் வியப்படைவதுடன்,

"நின்னின் சிறந்த நின்தாள் இணையவை
நின்னில் சிறந்த நிறைகடவுள் அவை"

என்று வாழ்த்துகின்றார். நல்லெழுநியார் திருமாலாகிய பரம்பொருளை இறைஞ்சிப் போற்றும்பொழுது,

"அன்னை என நினைஇ நின்னடி தொழுதனெம்
பன்மாண் அடுக்கம் இறைஞ்சினெம் வாழ்த்தினெம்
முன்னும் முன்னும் யாம்செய் தவப்பயத்தால்
இன்னும் இன்னும் எம் காமம் இதுவே" (பரிபாடல், பா.13)

என்று அருளிச் செய்கின்றார். என்னுடைய உயர்ந்த விருப்பம் யாதெனில் எடுக்கின்ற எப்பிறவியாயினும் நின்னைத் தொழ வேண்டும் என்கின்றார். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி மனம் வழுவாதிருக்க வரம் அருள்வாய்" என நாயன்மார் வேண்டுவது இங்கு குறிப்பிடட்தக்கது.

"ஆலமுங் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்
எவ்வயினோயும் நீயே" (பரிபாடல்., 4:67–70)

என்றும்,

"மூவுரு வாகிய தலைபிரி யொருவனை" (பரிபாடல், 13:37)

என்றும் பரிபாடல் திருமாலைப் போற்றுவதைப் போல்,

"முனியே நான்முகனே முக்கண்ணப்பா என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கண்கரு மாணிக்கமே" (திருவாய்மொழி, 10:10:1)

என்னும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரமும் போற்றுகின்றது.

திருவெஃகாவில் கோயில் கொண்டுள்ள இறைவனை மாங்குடி மருதனார் பெரும்பாணாற்றுப்படையில் பாடும்பொழுது,

"நீடுகுளைக்
காந்தளம் சிலம்பில் களிறுபடிந்தாங்கு
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்" (பெரும்பாணாற்றுப்படை, 373:3)

என்று பரந்தாமனைப் போற்றி, காந்தளம் பூக்கள் மிகுதியாகப் பூத்துள்ள மலையில் களிறு படுத்திருப்பது போல ஆதிசேடனாகப் பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளதாகப் பாடுகின்றார்.

"கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓணம் நன்னாள்" (மதுரைக்காஞ்சி, 590:91)

என்ற மதுரைக்காஞ்சி வரிகள், பல அசுரர்களின் வேண்டாத அறிவினை மாற்றிய திருமாலுக்கு உகந்த நாளாக திருவோண நன்னாள் அமைந்துள்ளதாகச் சுட்டுகின்றன. இவ்வாறாக சங்க இலக்கியங்களில் திருமாலின் பரத்துவமானது ஆங்காங்கு பரக்கப் பேசப் படுகின்றது. திருமால் விண்ணாட்டு நிலை (பரத்துவம்), அணிவகுப்பு நிலை (வியூகம்), பிறப்பு நிலை (விபவம்), உள்ளுறை நிலை (அந்தர்யாமித்வம்), வழிபடுநிலை (அர்த்தாவதாரம்) என்ற ஐந்து நிலைகளில் காட்சி தருவதாக வைணவ சித்தாந்தம் பேசுகின்றது. வைகுந்தத்தில் இருப்பது விண்ணாட்டு நிலை ; பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பது அணிவகுப்பு நிலை ; தேவர், மனிதர், விலங்கு, தாவரம் முதலிய உருவட்தைத் தன் விருப்பினால் ஏற்றுக்கொண்டு வருவது பிறப்பு நிலை ; பொருள்தோறும் கரந்து நிறைந்திருப்பது உள்ளுறைநிலை ; அடியவர் அமைத்த வடிவத்தையே தனக்கு மேனியாகக் கொண்டு மண்ணுலகில் இருப்பது வழிபடுநிலை என்று 'பாஞ்சராத்திரம்' என்னும் நூல் விளக்கம் தருகின்றது. தமிழ் மண்ணில் நீண்டு வேறூன்றி இருந்த வைணவ நெறியில் உதித்த இளங்கோவடிகள் சமயப்பொதுமையை இதயகீதமாக எண்ணித் தன்னுடைய காப்பியத்தில் தமிழ்மண்ணில் மலர்ந்த அகச்சமயங்களின் பெருமைகளைப் பேசுகின்றார்.

திருமால் அன்னச் சேவலாகிச் சிறகாலே ஊழிக் காலத்து மழை நீரை வறளச் செய்தான் என்பது (பரி., 3:25–26) பரிபாடல் காட்டும் புதிய செய்தியாகும். கண்ணன் அவுணர்கள் கொண்டு ஒளித்த ஞாயிற்றைக் கொண்டு வந்து நிறுத்தினான் என்னும் குறிப்பு புறநானூற்றில் (பா.எண்.174) காணப்படுகின்றது. பால்போலும் மதியினைச் சேர்ந்து பாம்பு மறைத்ததாகவும், அப்பாம்பினைக் கண்ணன் அகற்றியதாகவும் ஒரு செய்தி முல்லைக்கலியில் வருகின்றது. ஏறுதழுவும் வீரன் அரவாகவும், அவன் தழுவிய பால்நிற ஏறு நிலவாகவும், அவனைக் குத்தி அகற்றும் கரிய ஏறு கண்ணனாகவும் (முல்லைக்கலி, 105:43–46) கலித்தொகையில் உவமிக்கப்பட்டுள்ளது.

"தமிழ்நாட்டுப் பழங்குடியினராகிய முல்லை நிலத்து ஆயரிடையே முகிழ்த்த மாயோன், தமிழ் வேதநெறிகள் கலப்பின் விளைவாகத் தன் வனவாசத்தை முடித்துக் கொண்டு முதல் தெய்வமாக வளர்ந்து, பக்தி இயக்கக் காலத்தில் முழுமுதற் பொருளாகச் செங்கோலோச்சத் தொடங்கினான்" (**"With the rise to popularity of Sivan and Vishnu, the old Tamil Gods were either amalgamated with the newer ones or other-wise assimilated with them or practically died out. Thus Mayon easily become Krishna specifically as in the Malabar country Vishnu generally in other places" – History of the Tamils, P.T.Srinivasa Iyengar, Page.612**) என்னும் பி.டி.ஸ்ரீநிவாச ஐயங்காரின் குறிப்பினை நோக்கும்பொழுது வைணவ சமயம் தன் வளர்ச்சியில் ஒரு சிறப்புக் கட்டத்தை அடைந்த நிலையை அறியமுடிகின்றது.

வைணவ நெறி முற்காலத்துடன் பிற்காலத்திலும் போற்றப்பட்டதென்பதற்குச் சான்றாக ஔவையார் ஆத்திசூடியில் "திருமாலுக்கு அடிமை செய்" என்று கூறுகிறார்.

"இன்னருளால் எனக்கு ஒரு பரம் ஏற்றாமல்
என்னை அடைக்கலம் கொள் என் திருமால் நீயே"

என வேதாந்த தேசிகர் என்னும் வைணவ ஆசிரியர் தன் பிரபந்தத்தில் கூறுகின்றார்.

பன்னிரு ஆழ்வார் பெருமக்கள் திருமாலே தெய்வம் எனக் கொண்டாடுகின்றனர். இத்தமிழ் மாலைகள் வைணவ நெறியை உலகிற்கு எடுத்தியம்பின என்னும் கருத்தில் இவை வேதங்களைக் காட்டிலும் உயர்ந்தவை என்ற கருதுகோளில் வேதாந்த தேசிகர் 'அதிகார சங்கிரகம்' என்ற நூலில்,

"செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதி
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமோ"

என்று போற்றுகின்றார். இப்பெருமக்களுக்கெல்லாம் முன்னோடியாக நின்ற பெருந்தகையாக இளங்கோவடிகள் திகழ்கின்றார்.

சிலப்பதிகாரம் நம் தமிழ் இலக்கிய உலகின் முதல் காப்பியமாகத் தோன்றி, எளிய குடிமக்களின் வாழ்க்கையை எடுத்துரைத்த இன்தமிழ்க் காப்பியம். இக்காப்பியத்தினால்தான் நம்முடைய தொன்மையான நாட்டியக்கலை, ஒப்பனைக்கலை, கட்டிடக்கலை, மக்கள் மனத்தின் பண்பாட்டுச் செம்மை ஆகியவை இன்றும் அறியும் வகையில் விளக்கம் செய்யப்படுகின்றன.

காப்பியத் தலைவனாகத் திகழும் கோவலன் சமண சமயம் சார்ந்தவனாகக் கூறப்பட்டாலும் அனைத்துச் சமயங்களின் பேருண்மைகளையும் ஆழ்மனதில் தேக்கியவனாகவே காணப் படுகின்றான். அதன்வழி நின்றே,

"அணிகிளர் அறவின் அறிதுயில் அமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலம்செய்யாக் கழிந்து" (சிலம்பு., 9–10)

என இளங்கோவடிகள் கூறுவதுபோல திருமாலின் திருக்கோயிலைக் கண்ணகி கோவலன் வலம் வந்து வணங்கிய தன்மை நாடுகாண்காதையில் இயம்பப்படுகின்றது. கண்ணகி உடன்கொண்டு கவுந்தியடிகள் பெருந்துணையுடன் மதுரை மாநகர் நோக்கி வரும் காட்சி காடுகாண் காதையில் இடம்பெறுகின்றது. அங்கு மலைநாட்டைச் சேர்ந்த மாங்காட்டு மறையோன் இவர்களைச் சந்திக்கின்றான். அவன் வாயிலாக இளங்கோவடிகள் அரங்கனைப் போற்றுமிடத்து,

"நீல மேகம் நெடும் பொன் குன்றத்துப்
பால் விரிந்து அகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்து எழு தலை உடை அரும் திறல்
பாயல்பள்ளி பலர் தொழுது ஏத்த
விரி திரைக் காவிரி வியன் பெரும் துருத்தி
திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

(காடுகாண்காதை, வரிகள் 35–40)

என்ற வரிகளில் உயர்ந்த பொன்மலையின் மீது நீல நிறமுடைய முகில் ஒன்று பக்கங்களிலே விரிந்து பரவாமல் அதனை விட்டு நீங்காது படிந்திருப்பதைப் போன்று ஆயிரம் தலைகளை விரித்து எழுகின்ற அருந்திறல் பொருந்திய ஆதிசேடனின் படுக்கை மீது பலரும் தொழுது வணங்கும்படி, பரந்த அலைகளையுடைய காவிரியாற்றின் கரையில் திருவரங்கத்தில் திருமகள் விரும்பி உறையும் மார்பினையுடைய திருமால் பள்ளி கொண்டுள்ள கோலத்தைப் பாடி மகிழ்கின்றார். பெருமாளைக் குறிப்பிடும்பொழுது திருமகள் நீங்காத தெய்வ நாயகன் என்பதைச் சுட்ட "திருவமர் மார்பன்" என்ற தொடரை அடிகள் கையாள்கின்றார்.

மாங்காட்டு மறையோன் வைதீக நெறியில் வழிவந்து பெருமானைத் தொழும் மனமுடையவன். அவன் திருவரங்கத்தைப் பற்றிக் கூறியதோடு நின்ற கோலத்தில் திருவேங்கடமலையில் சேவை சாதிக்கும் பெருமானைப் பற்றியும் அழகொழுக உரைக்கின்றார்.

"வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்கு உயர் மலையத்து உச்சி மீமிசை
விரி கதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இரு மருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னும் கோடி உடுத்து விளங்கு வில் பூண்டு
நல் நிற மேகம் நின்றது போலப்
பகை அணங்கு ஆழியும், பால் வெண் சங்கமும்
தகை பெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம் கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம் பூ ஆடையின் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்

என் கண்காட்டு என என் உளம் கவற்ற வந்தேன்"
(காடுகாண்காதை, 41–52)

என்ற வரிகளில் திருவேங்கடத்தின் சிறப்பும், திருமாலின் நின்ற கோலமும், அவன் வடிவழகும் இளங்கோவடிகளால் சித்திரமாகக் காட்டப்பட்டுள்ளன.

ஆய்ச்சியர் குரவையில்தான் அடிகளுடைய திருமால் திருவடிகளுக்கு ஆட்பட்ட அன்புநிலை வெள்ளிடை மலையாக விளங்கக் காணமுடிகின்றது. கண்ணகியிடமிருந்து சிலம்பைப் பெற்றுக் கொண்ட கோவலன் மதுரை நகருக்குள் செல்கின்றான். அங்கு அவனுக்கு ஏற்பட்ட பெருந்துன்ப நிலை ஆய்ச்சியர் சேரியில் ஆநிரைகள் கண்ணீர் சொரிவதாலும், இடைக்குல மகளிருக்கு வலக்கண் துடிப்பதாலும் உணரப்படுகின்றன. இவற்றையெல்லாம் நோக்கிய மாதரி தன் மகள் ஐயையை நோக்கி, முன்பு ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் ஆடிய குரவைக் கூத்தினைக் கறவைக் கன்று துயர்தீர ஆடுவோம் எனக்கூறி, எழுவர் கன்னியரை நிறுத்தி ஏழிசைகளின் பெயர்களாகிய குரல் (சட்ஜம்), துத்தம் (ரிஷபம்), கைக்கிளை (காந்தாரம்), உழை (மத்தியமம்), இளி (பஞ்சமம்), விளரி (தைவதம்), தாரம் (நிஷாதம்) ஆகியவற்றை அவர்களுக்குப் பெயர்களாக இட்டு, அவர்களுள் குரல் ஆகிய பெண்ணைக் கண்ணபெருமான் என்றும், இளியாகியவளை பலராமன் என்றும், துத்தம் ஆகிய பெண்ணை நப்பின்னைப்பிராட்டி என்றும் போற்றித்தொழுது குரவைக் கூத்தாடுகின்றனர். இதில் முன்னிலைப் பரவலாகவும், படர்க்கைப் பரவலாகவும் திருமாலை அடிகள் பாடுகின்றார். இப்பாடல்கள் வைணவத்தை வாழச் செய்த ஆழ்வார் பெருமக்களுக்கு முன்னோடித் தமிழ் இலக்கியப் பாடல்களாக அமைந்தன. கண்ணபெருமான் வரலாறு தமிழ்மண்ணில் நப்பின்னைப் பிராட்டியோடு சேர்த்து அருள்மணக்கும் வரலாறாகவே கூறப்படுகின்றது.

இப்பகுதியில் கண்ணபிரானின் தொன்மமாகிய வரலாற்றுச் செய்திகள் இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்படுகின்றன. ஆழ்வார் பாசுரங்களில் கருப்பொருளாகிய கண்ணபெருமான் தொடர்பான செய்திகள் அடிகளின் காப்பியத்தில்தான் முதன்முதலில் வெளிப்படுத்தப் படுகின்றன. மேரு மலையை மத்தாக வைத்துக் கடல் கடைந்த செய்தியும், யசோதையின்பால் எளிவந்த வான்கருணை காரணமாகக் கயிற்றால் கட்டுண்ட வரலாறும், வெண்ணெய் விரும்பி உண்ட வித்தகமும், தன் திருவாயினுள் பூமிப் பந்தையே காட்டிய அருட்காட்சியும், இரண்டு அடிகளால் நிலத்தை அளந்து மூன்றாவது அடிக்கு மாபலி மன்னனிடம் இடம்கேட்ட தொன்மச் செய்தியும் நிரல்பட உரைக்கப்படுகின்றன.

பாரத வரலாறு அடிகள் காலத்திலேயே தமிழகத்தில் வாய்மொழி இலக்கியமாக வழங்கப் பட்டு வந்துள்ளது. பாரத வெண்பா என்ற இலக்கியம் அப்போதே இருந்திருக்கலாமோ என்ற ஒரு கருத்தும் சில அறிஞர்களிடம் நிலவி வருகின்றது. கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூதுவனாக நடந்த தன்மையையும் அடிகள் பாடி மகிழ்கின்றார். மேலும் பிரகலாதனுடைய தந்தையாகிய இரண்ய கசிபுவை பிரகலாதன் பொருட்டு மறைத்து அருளியதையும் அடிகள் "மடங்கலாய் மாறட்டாய்" என்ற தொடரில் குறிப்பிடுகின்றார்.

கி.பி.9ஆம் நூற்றாண்டில் கம்பர் பெருமானால் விரிவாகப் பாடப்பட்ட இரண்ய வதைப் படலம் இளங்கோவடிகளால் ஒரு தொடரில் ஓதப்படுகின்றது.

படர்க்கைப் பரவலில் இளங்கோவடிகளின் அருள் உள்ளம் தெய்வத் தன்மையில் நிலைபெற்று பாடல்களைப் பொலிகின்றது. இராமாயண வரலாறு சொல்லப்பட்ட பின்பு திருமாலினுடைய சீர்கேட்பதே செவிகள் பெற்ற பயன் என்கிறார். "ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தோய்" என வாலி கூற்றாகக் கம்பர் போற்றிய திருமாலின் எழிலான திருமேனியை இமையாத கண்கள் கொண்டு கண்டு வணங்க வேண்டும் என்கிறார் அடிகள். திருப்பாணாழ்வார் அமலனாதிபிரான் என்ற தன் பதிகத்தில் அடைந்த அருள் அனுபவத்தை கி.பி.2ஆம் நூற்றாண்டில் தன் மன அருள் அனுபவமாகக் காட்டுகின்றார் அடிகள். பாரத வரலாறும் இப்பகுதியில் பேசப்படுகின்றது. பாண்டவர் பொருட்டு இறைவன் வேதங்கள் முழங்க பாதங்கள் வருந்த நடந்த செய்தியைக் கூறும் அடிகள் "நாராயணா என்னா நாவென்ன நாவே" என நிறைவு செய்கின்றார்.

சிலப்பதிகாரக் காவியத்தை ஊன்கலந்து உயிர்கலந்து படிக்கின்றபொழுது அது உவட்டாமல் இனிப்பதற்குரிய காரணம் பல்வேறு நிலைகளில் வெளிப்பட்ட அடிகளின் அருள் துதிகளே. திருமாலை சங்கப் புலவர்கள் வழிநின்று அடிகள் ஏத்தி வழிபட்டு மகிழும் வரிகளில் திருமாலின் பரத்துவம் நன்கு நிலைபெறுகின்றது. இப்பரத்துவத்தைத்தான் ஆழ்வார்கள் கி.பி.4ஆம் நூற்றாண்டு முதல் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிலையில் நாம் உற்றுநோக்கும்பொழுது கோவலன் கோயிலாக அரங்கப்பெருமானைச் சேவிக்கின்ற அடிகள், மாங்காட்டு மறையோன் மூலமாகத் திருவேங்கடத்தில் திகழும் நின்ற கோலத்தைச் சேவிக்கின்றார் எனலாம். ஆய்ச்சியர் குரவையில் பெருமானைப் பெரியாழ்வார் அனுபவித்தது போல அடிகளும் அனுபவித்து நம்மையும் அனுபவிக்க வைக்கின்றார். தமிழ் இலக்கியத்தில் ஒரு பழம்பாடல்,

"கருதுசெம்பொன் அம்பலத்தில் ஒரு கடவுள் நின்று நடிக்குமே
காவிரித் திருநதியிலே ஒரு கருணை மாமுகில் துயிலுமே"

என்று வணங்குகிறது. இவ்வணக்கத்தை காப்பிய இலக்கியத்தில் முதன்முதலில் கூறியவர் அடிகள். "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று சித்தையும், எட்டெழுத்து மந்திரட்தைக் கூறித் திருமாலையும் தன் இரு கண்களாகப் போற்றியவர். சான்றோர்களது மிக உயர்ந்த சிந்தனையே சங்கப் பனுவல்களாகவும் செந்தமிழ்க் காப்பியங்களாகவும் மலர்ந்தன. சான்றாண்மையில் தலைசிறந்த இளங்கோவடிகள் தன் தமிழ்த்திரு நாவினால் திருமாலைப் போற்றிப் பரவியதுதான் பின்னர் ஆழ்வார் பெருமக்களுக்கும் ஆச்சாரியர்களுக்கும் ஒரு முன்னோடியாக அமைந்தது என உறுதியுடன் சாற்றலாம்.

****

